# புல் தடுக்கி பயில்வான்கள்

சிவசங்கரி

கங்கை புத்தகநிலையம்

னதயாளு தெரு, தி. நகர், சென்னை-600 017.

முதற் பதிப்பு : டிசம்பர் 1984
கங்கை இரண்டாம் பதிப்பு : மே 1994

விலை : ரூ. 20-00

18100
354766S

## இதனுள்...

| | | |
|---|---|---|
| 1. | புல்தடுக்கி பயில்வான்கள் | 1 |
| 2. | அளவுகோல் | 9 |
| 3. | பொதி சுமக்கும் கழுதைகள் | 21 |
| 4. | ஆயா | 28 |
| 5. | அன்பே சிவம் | 39 |
| 6. | வேலை | 51 |
| 7. | ச்சே...பாவம் | 62 |
| 8. | மூத்தவர் | 72 |
| 9. | தாய் | 80 |
| 10. | மரம் வைத்தவன் | 87 |
| 11. | தேனடை | 98 |
| 12. | போதி மரம் | 107 |
| 13. | கடைசியில் | 116 |
| 14. | ஒரு வார்த்தை | 127 |

நேரு அச்சகம் 43 அம்மையப்பன் தெரு சென்னை-600 014

## பதிப்புரை

ஒவ்வொரு நாளும், வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. அவற்றை அனைவருமே பார்க்கின்றனர், அனுபவிக்கின்றனர்.

ஆனால், அவற்றை அனுபவித்து, சக்கைகளை வெளியே தள்ளிவிட்டு, அவை உணர்த்தும் உண்மைகளை மட்டும் உலகுக்குப் பிட்டுக் காட்டுபவர் யார்?

அவர்கள் தாம் எழுத்தாளர்கள்!

இதோ, இந்த நூலை எடுத்துக்கொள்ளுங்கள்!

இந்த நூலில் வரும் நிகழ்ச்சிகள் யாவும், பெரும்பாலும் நம் வாழ்வில் எதிர்ப்படுகின்ற— சந்திக்கின்ற காட்சிகள் தாம்!

அவற்றை, கருவாக்கி, உருவாக்கி, கதைகளாக வடித்திருக்கிறார், ஆசிரியர் சிவசங்கரி!

'அளவுகோல்' காலந்தோறும் மாறிக்கொண்டுதான் இருக்கிறது. 'சாண்' அளவிலிருந்து 'அடி' அளவிற்கு வந்தோம்; 'அடி' அளவிலிருந்து 'மீட்டர்' அளவிற்கு வந்திருக்கிறோம்.

ஆனால், வாழ்க்கையை மட்டும், அன்று முதல் இன்று வரை ஒரே அளவுகோல் கொண்டு அளப்பது சரியா?

கூடாது என்று குமுறுகிறார், அந்தக் காலத்து மீனாம்பாள்: ''அது அந்தக் காலம்டா... அந்த நாளோட இந்த நாளை ஒப்பிடறது நியாயமாடா கோபு?'' என்கிறார்.

'அன்பே சிவம்' என்னும் கதையில் வரும், சங்கர் படித்தவன்; பட்டம் பெற்றவன்; பண்புள்ள குடும்பத்தில் பிறந்தவன்.

ஆனால், வேலை கிடைக்காமல் விரக்தியில் வாழ்கிறான் சொந்த நாட்டைத் துச்சமெனக் கருதுகிறான். அந்நிய நாடே அனைத்திலும் மேலானது என்று எண்ணிக் கொண்டிருக்கிறான்.

அந்த எண்ணத்தை மாற்றியமைக்கிறாள்—மேல் நாட்டுப் பெண்ணாகிய லிண்டா.

லிண்டியின் கூற்று சங்கரை மட்டுமா, நம்மையே தட்டியெழுப்பும் நல்வாசகங்கள் ஆயிற்றே!

இன்னும், பெண்ணடிமைத்தனம், தாயன்பு, குடும்பக் கட்டுப்பாடு, எழுத்தாளன் என,

சமுதாயத்தைப் பல்வேறு கோணங்களில் நம்மைப் பார்க்க வைக்கிறார் சிவசங்கரி. இக்கதை நூல்மூலம்!

நல்ல படிப்பிடிப்பு மட்டுமல்ல இந்நூல்; நல்ல பாட நூலாகவும் ஒவ்வொருவருக்கும் அமைந்துள்ளது. கதைகளைப் படைத்துள்ள ஆசிரியை சிவசங்கரிக்கு நன்றி.

**கங்கை புத்தக நிலையத்தார்**

18100
354768

## புல் தடுக்கி பயில்வான்கள்

விழா மண்டபத்துள் அவள் நுழைந்தபோது பாதி விழா முடிந்து போயிருந்தது.

வழி நெடுக்க அங்கங்கே நின்றுகொண்டும், புல்வெளியில் அமர்ந்துகொண்டும் இருந்தவர்களூடே புகுந்து புறப்பட மனசில்லாமல் கடைசி வரிசையில் ஒரு நாற்காலி காலியாக இருப்பதைப் பார்த்து, ஓரமாய் நடந்து அதில் உட்கார்ந்துகொண்டாள்.

மேல் உதட்டில் சன்னமாய் பூத்த வியர்வைத் துளிகளை கைக்குட்டையில் ஒற்றி நிமிருகையில் மேடையில் ஒரு கதர் ஜிப்பா அங்கவஸ்திரக்காரர் கவிதை வாசித்துக் கொண்டிருந்தார்.

வானம்— நிலவு—நட்சத்திரம்— மரம்—மழைத்துளி— என்று ஒன்றுவிடாமல் விவரித்தபடி, மேடையில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணியின் பாராட்டல்களுக்காக ஏங்கி, பார்வையை அடிக்கடி அவள் பக்கமாய் அந்தக் கவிஞர் வீச, அவளுக்கு சிரிக்கத் தோன்றியது.

இன்னும் எத்தனைக் காலத்தை இப்படி வர்ணனைகளிலேயே ஓட்டப் போகிறார்கள்!

சிரிப்பு மாறாமல், கவனத்தை பக்கத்து இருக்கைக்குத் தாவ விட்டபோது அந்த இளைஞன் இருப்புக் கொள்ளாமல் அவஸ்தைப்படுவது புரிந்தது.

தொளதொள ஜிப்பா, கம்பி ஃப்ரேம் கண்ணாடி, சலூனைப் பார்த்து நாளான க்ராப், கையில் சின்ன நோட்டுப் புத்தகம், வலது கையில் பேனா...

இரண்டு நிமிஷங்கள் முழுசாய் போவதற்குள் நாலு தரம் 'நான்சென்ஸ்' என்று முனகினான். நெற்றியில் அறைந்துகொண்டு 'கடவுளே' என்று எங்கோ இருப்பவரை அழைத்தான். அப்புறம்...

எதற்காக இத்தனை அவஸ்தை?

அவள் அவனைப் பார்த்து ஸ்னேகத்துடன் புன்னகைத்தாள்.

''ஹல்லோ...''

''............''

''ஜர்னலிஸ்ட்?''

''ம்ம்...''

''எந்த மாகஸின்?''

''அ? குறிப்பா எதுவும் இல்லே... தோணினதுக்கு அனுப்புவேன்...''

''ஓ! இந்த மீட்டிங் பத்தி எழுதப் போறிங்களா?''

அவன் கேலியாய் உதட்டைச் சுழித்து சிரித்தான்.

''எழுதலாம்னுதான் வந்தேன்... ஆனா, எழுதறமாதிரி எதுவும் இல்லே... தலைக்குத்தலை மைக்கப் பிடிச்சிகிட்டு பாராட்டறாங்க. என்னமோ இந்தாளு பெரிசா செஞ்சிட்ட மாதிரி...''



''ஏன், செய்யலைன்னு நீங்க நினைக்கிறிங்களா? எழுத்துலகத்துல ஐம்பது வருஷமா நிலைச்சி நின்னு, பல நாவல்கள், கட்டுரைகள் எழுதி தனக்குனு ஒரு இடத்தைப் பிடிச்சிகிட்டது உங்களுக்குப் பெரிசா படலியா? இல்லே, இன்னிக்கு சாப்பாட்டுக்கு இல்லாம திண்டாடறவருக்கு, ஒரு விழா எடுத்து பணமுடிப்பு தந்து, முதுமைல ஓரளவு வசதியோட வாழ வழி பண்றாங்களே, அது உங்களுக்குப் பெரிசா படலியா? ம்?''

அவன் அவளை ஏறிடாமல் சூள் கொட்டினான்.

''நீங்கள் கேட்ட ரெண்டுமே எனக்குப் பெரிசாப் படலை. மொத்தத்துல எல்லாம் 'ஷோ'க்கு நடக்குதுங்க... அதான் நா சொல்வேன்... உங்களால புரிஞ்சிக்கறது கஷ்டம்... டோடல் ஹிப்பாக்ரஸி...''

அந்த எரிச்சலும், கோபமும் அவளுக்கு வேடிக்கையாய் இருந்தன.

பாராட்டு விழா என்றால் அது இப்படித்தான் இருக்கும் என்று தெரியாதா?

வருவானேன், பின் ஆதங்கப்படுவானேன்?

அவனுடைய அங்கலாய்ப்பு ஒருவித ஸ்வாரஸ்யத்தைக் கொடுக்க, தொடர்ந்து பேச்சுக் கொடுத்தாள்.

''இத விடுங்க... உங்களப்பத்தி சொல்லுங்க...''

''என்ன சொல்லணும்...?''

''என்ன பேர்ல எழுதறிங்க...?''

''என் பேரு துரைசாமி... அந்தப் பேர்லயும் எழுதுவேன், 'துசா'னும் எழுதுவேன்.''

''சமீபத்துல எந்தப் பத்திரிகைல எழுதினீங்க?''

''ரெண்டு வாரம் முந்தி 'நெஞ்சம்' பத்திரிகைல எழுதியிருந்தேனே, படிக்கலியா? நடிகை ஜெயராணியோட காதல் விவகாரம் பத்தி ஒரு 'ஸ்கூப் நியூஸ்'''

—ஆப்பிள் சீவும்போது தவறி கையில் பட்டுவிட்ட காயத்துக்கு மருந்து தடவிவிட்ட நடிகர் குமாருக்கும் தனக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்று நடிகை அளித்த அந்தப் பேட்டியை அவள் படித்திருந்தாள்.

இதை ஸ்கூப் என்று பீற்றிக்கொள்ள என்ன இருக்கிறது!

உதடுகளைக் கீறின சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டவள், இன்னும் எந்தெந்த பத்திரிகைகளில் என்னென்ன துணுக்குகள், கட்டுரைகள் வெளியாகி உள்ளன என்று 'துசா' லிஸ்ட் போட்டதை குறுக்கே பேசாமல் காதில் வாங்கிக்கொண்டாள்.

''ஆமா, இந்தமாதிரி சின்னச்சின்னதா பல பத்திரிகைகளுக்கு எழுதறதை விட்டுட்டு, நாவல் எழுத நீங்க முயற்சிக்கறதுதானே! இல்லேன்னா, ஏதாவது பத்திரிகைல நிரந்தரமா சேர்ந்து...

அவளை முடிக்க விடாமல்—இது என்ன கேவலமான கேள்வி—என்ற முகபாவனையுடன் அவன் குறுக்கிட்டான்.

''ஏன், இப்ப நா ராஜாமாதிரி எல்லா பத்திரிகைக்கும் எழுதறேன்! ஒரே பத்திரிகைல இருந்தா இது முடியுமா? அவங்க இஷ்டத்துக்கு இல்லே நா ஆடணும்! அதோட, இந்தப் பெரிய பத்திரிகைகள்ல எழுதறதுக்கு ஒண்ணு எடிட்டருக்கு வேண்டப்பட்டவங்களா இருக்கணும்; இல்லேன்னா, வெளிப்படையா பேசறதுக்கு கோவிக்காதிங்க—அழகான பொம்பளையா இருக்கணும்...''

ரொம்பத் தெரிந்தமாதிரி அவன் அடித்துப் பேச, அவள் புருவங்களை உயர்த்தினாள்.

''நீங்க சொல்றதை என்னால ஒத்துக்க முடியலை மிஸ்டர் துரைசாமி! ஒட்டுமொத்தமா இப்படி சாடறது உங்களுக்கே நியாயமா படுதா?''



''உங்களுக்கு ஒண்ணும் தெரியாதுங்க—நா அனுபவப்பட்டவன், ஞாபகம் வெச்சிக்கிங்க...''

''அப்ப, இன்னிக்கு பத்திரிகைல வெளியாறதெல்லாம் நல்ல எழுத்துன்ற தேர்வுல இல்லாம, சிபாரிசுலதான் பிரசுரமாகுதுன்னு சொல்றிங்க...''

''கண்டிப்பா... நல்ல எழுத்தாவது, மண்ணாங்கட்டியாவது! சமூகப் பிரச்னை யாருக்காகவது இருக்கா? வெறும் காதல் கதைங்களை எழுதிகிட்டு... தத்...''

''ம்ம்... காதல் கதைங்க நிறைய வருது, நா ஒப்புக்கறேன்... ஆனா, கூடவே சமூகப்பிரச்னை உள்ள விஷயங்களும் பிரசுரமாயிட்டுதானே இருக்கு! ஏன் உதாரணமா, 'கொட்டுமுரசு'லே சமீபத்துல வெளியான 'அடிமைகள்' தொடரை எடுத்துக்குவோம்... போதை மருந்துகளோட தீமைகளை ரொம்ப விளக்கமா, மனசுல பதியறமாதிரி அதுல எடுத்துச் சொன்னதுல, நூத்துக்கணக்கான மாணவர்கள் அந்தப் பழக்கத்துலேந்து விடுபட்டிருக்காங்கன்னு செய்தி போட்டிருந்தாங்களே; இது ஆக்கபூர்வமான எழுத்து இல்லியா?''

துரைசாமி தலைமுடியை அலட்சியமாகக் கோதிவிட்டுக்கொண்டான். அவளை ஏளனமாக ஏறிட்டான்.

''ரொம்ப அப்பாவியா இருக்கிங்க... பத்திரிகைல வெளியிடறதெல்லாம் வெறும் ஹம்பக்ங்க... தங்களைத் தானே பாராட்டிக்க பொய்யா கடிதாசைப் போட்டு ஏமாத்துவாங்க... அத்தனையும் வெறும் 'ஐ வாஷ்'. போதை மருந்தோட தீமைகளை இவங்க சொல்லித்தான் நாம தெரிஞ்சிக்கணுமாக்கும்! தீ சுடும், தொடாதேனு குழந்தைங்ககிட்ட சொல்லலாம். வளர்ந்தவங்ககிட்ட எதுக்கு சொல்லணும்? தானே அடிபட்டா புரிஞ்சிக்கிறான். வாசகர்களை புத்திசாலிகளாக நடத்தணுங்க... மண்டுகள்

மாதிரி 'இதனால் தெரிந்துகொள்ளும் கருத்து என்னவெனில்'னு பாடம் புகட்டக்கூடாது. ஆடு மாடுகள் மாதிரி வாசகர்களை நடத்தறதை இந்த கமர்ஷியல் பத்திரிகைங்க எப்ப விட்டொழிக்குதோ அப்பத்தான் நமக்கு விமோசனம்...''

நீளமாய் குற்றம் சாட்டி, அவன் படபடக்க அவளுக்கு மீண்டும் சிரிப்பு எழுந்தது.

தான் எழுதுவது 'ஜெயராணி ஸ்கூப்', ஆனால் பிறர் மட்டும் வாசகர்களை அறிவுஜீவிகளாக பாவித்து எழுத வேண்டும்!

தனக்கொரு அளவுகோல், மற்றவருக்கு இன்னொன்றா?

பாராட்டு விழாவுக்கு வந்துவிட்டு இப்படி இவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

ஆனால், பல சமயங்களில் இதுமாதிரி இலக்கியக் கூட்டங்களுக்கு வருவதற்குக் காரணம் மேடைப் பேச்சைக் கேட்பதற்காக மட்டும் இல்லை; இவனைப் போன்ற பலரையும் தெரிந்துகொள்வதற்காகவும், அரங்கத்துள் இடங்கள் இருப்பினும் உள்ளே சென்று உட்காராமல் வட்ட வட்டமாய் நின்றுகொண்டும், புல்வெளியில் தலைக்கடியில் கைகளை வைத்து அலட்சியமாய் படுத்து தங்களைத் தவிர பாக்கி அத்தனை பேர்களையும் விமர்சித்துக்கொண்டும் இருப்பவர்களைப் பார்க்கவும்தானே?

அவன் இன்னமும் ஏதோ பேசிக்கொண்டிருந்தான்.

''உங்களுக்கெல்லாம் ஒண்ணும் தெரியாதுங்க... கொஞ்ச நாள் இப்படி கூட்டங்களுக்கு ஒரு தமாஷுக்கு வருவிங்க... அப்புறம் கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிடுவிங்க... எங்களை மாதிரி தீவிரமா...''



''எக்ஸ்கியூஸ் மீ, மேடம்...''

குரல் கேட்டு இரண்டுபேருமே திரும்பினார்கள்.

விழா அமைப்பாளர்.

''என்ன மேடம் இங்க உட்கார்ந்திருக்கிங்க? எப்ப வந்திங்க? அப்பா வரலியா? முத ரோல உங்களுக்கு ஸீட் போட்டிருக்கு... வாங்க மேடம்...''

''அதனால என்ன சார்? இங்ககூட சௌகர்யமாத்தான் இருக்கு. அப்பாவுக்கு கொஞ்சம் உடம்பு முடியலை... வேலை முடிஞ்சு நா வர நாழியாயிட்டது... ஸாரி...''

''எழுந்து மேடைக்கு வாங்க மேடம்... ப்ளீஸ்...''

''மேடைக்கா! நோ... ப்ளீஸ்... நா இங்கேயே இருக்கேன்.''

''இல்லே மேடம், நீங்க அவசியம் முன்னாலயாவது வந்து உட்காரணும். அப்பாவும் நீங்களும் இல்லேன்னா இன்னிக்கு இந்த விழாவே இல்லே... உங்க உதவிய நாங்க மறக்கமாட்டோம்...''

அமைப்பாளரின் இந்தப் பணிவு துரைசாமியைத் திகைக்க வைத்து, யோசிக்கச் செய்வதை அவளால் உணர முடிந்தது.

''பெரிய வார்த்தைகளை சொல்லாம போய் பாக்கி வேலைய கவனிங்க... விழா முடிஞ்சதும் பேசிக்கலாம்...''

இரண்டு நிமிஷம் நின்று, அவள் பிடிவாதமாக இருக்க, அமைப்பாளர் நகர, தாங்கமாட்டாத அவசரத்துடன் 'துசா' வினவினான்.

''நீங்க யாருங்க! அமைப்பாளர் வந்து இப்படி கெஞ்சிட்டுப் போறார்?''

''என் பேர் லாவண்யா...''

''யா... யாரு? 'கொட்டுமுரசு' ஆசிரியர் மகளா?''

அவள் தலையசைத்து ஆமோதிக்க, அரை நிமிஷம் துசா மௌனித்தாள்.

''சமூகப் பிரச்னையோட எழுதற லாவண்யாவா! கொஞ்சம் முன்னாலகூட போதை மருந்து கட்டுரை பற்றி...''

இத்தனை நாழிகை வெத்துவேட்டு 'ஐ வாஷ்' கட்டுரையாய் இருந்தது, இப்போது திடுமென சமூகப்பிரச்னை உள்ளதாகி விட்டதா!

துசாவின் குரலில் ஒரு குழைவு...

''அப்ப பாதில நிறுத்திட்டோம். காளான்கள்மாதிரி நசநசனு இருக்குற பத்திரிகைங்க நடுவில 'மோட்டுமுரசு' ஒண்ணுதான் கொஞ்சம் வித்தியாசமானதா இருக்குனு சொல்ல வந்தது பேச்சு திசைமாறினதுல விட்டுப் போச்சி... இந்த மாதிரி கட்டுரைங்க நிறைய எழுதி, ஒரு விழிப்புணர்வை உண்டாக்கறது பெரிய விஷயங்க... வந்து... எனக்குக்கூட அந்த மாதிரி எழுத வருங்க... வந்து, உங்க பத்திரிகைல... வந்து...''

அவள் மென்மையாகச் சிரித்தாள்.

''ஆபீஸ்ல வந்து என்னப் பாருங்க மிஸ்டர் துரைசாமி. நீங்க அழகான பொம்பளையா இல்லாட்டிகூட, உங்க கருத்தும் எழுத்தும் நல்லா இருந்தா கண்டிப்பா பிரசுரிக்க ஏற்பாடு பண்றேன்...''

புன்சிரிப்போடு அவள் பேசியது அவனைக் கூச வைக்க, அந்த சங்கடத்தை அதிகரிக்க விரும்பாதது போல, லாவண்யா மேடையை நோக்கி கவனத்தைத் திருப்பினாள்.

# அளவு கோல்

''எழுந்திரு— வெளிலே போ...''

''ஸார், நான் என்ன சொல்றேன்னா?''

''வேண்டாம், மேற்கொண்டு ஒரு வார்த்தை பேச வேண்டாம். முதல்ல இடத்தை காலி பண்ணு.

''வந்து... ஸார்.''

''இப்ப நீ தானா போகப்போறியா, இல்லே நா போக வைக்கட்டுமா?— எழுந்துருடான்னா வந்து போயினு கதை பேசிண்டு... போடா வெளிலே...''

விஸ்வம் எழுந்தான். உதட்டைப் பிதுக்கி தோளை குலுக்கினான்.

நீங்கள் அநாகரீகமாகக் கத்துவதை நான் தப்பாக எடுத்துக்கொள்ளவில்லை என்கிற தினுசில் சின்னதாக புன்னகைத்துக்கொண்டே வராந்தாவுக்கு வந்தான். செருப்பை மாட்டிக்கொண்டு படிகளில் இறங்கி, கேட்டை சாத்திவிட்டு வெளியேறினான்.

அந்த சிரிப்பும், நிதானமும் கோபாலனின் ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்த, அவன் கேட்டைத் தாண்டும் முன்னரே உரக்க 'ராஸ்கல்' என்று உறுமினார். அப்புறம் உன் காதில் விழுந்தால் எனக்கு என்ன என்கிற அலட்சியத்துடன் தொடர்ந்து கத்தினார்.

''விவஸ்தை கெட்ட ராஸ்கல். என்ன தைரியமிருந்தா வீட்டுப் படியேறி இப்படிப் பேசிட்டுப் போவான்? ம்? இவன் படிச்சிருந்தா எனக்கென்ன, பெரிய வேலைல இருந்தா எனக்கென்ன? மனுஷனுக்கு முதல்ல பண்பு வேண்டாம்? மரியாதை வேண்டாம்? ஊர்ல மானமா வாழற குடும்பம் ஆச்சே, நாலுபேர் மதிக்கிற பெரியவர் ஆச்சேன்னு ஒரு மரியாதை மட்டு இல்லாம எனக்கு எதிரா நின்னு பேசணும்னா என்ன திமிர் இருக்கணும்? இவன் மனசுல என்னதான் நினைச்சிண்டு இருக்கான்? இவன் பொறந்து வளர்ந்த பம்பாய்னு இந்த சின்ன ஊரையும் நினைச்சுட்டானா! பெரியவா, பெருந்தலை, பழக்கம் வழக்கம் எல்லாம் அந்த ஊர்ல செத்து மடிஞ்சுட்ட மாதிரி, இங்கயும் ஆயிடுத்துனு நினைச்சுட்டானா? ராஸ்கல்... தத்தாரி... என்ன தைரியம் இருந்தா, வீட்டுப் படியேறி இந்த வார்த்தையை...''

அத்தமாக மண்டிப்போன அதிர்ச்சி, கோபத்தின் காரணமாய் வாயிலேயே வார்த்தைகள் சிக்கிக்கொள்ள, கோபாலன் தாங்கமாட்டாத ஆத்திரத்துடன் ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

வியர்த்துப்போன முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டார்.

சமையல்கட்டு வாசலில் பிரமை பிடித்து நின்றிருந்த மனைவிமேல் பார்வை விழுந்ததும், திரும்ப மூர்க்கமாய் கத்த முற்பட்டார்.

''கேட்டுண்டியாடி சாரதா; அவன் என்ன பேசிட்டுப் போறான்றதை... ஊர்ல நா ஒரு பெரிய மனுஷன், பரம்பரையா தலைநிமிர்ந்து வாழற குடும்பம்னு எதையும் மதிக்காம, அவன் பாட்டுக்கு தத்தக்கா புத்தக்கானு எதையோ உளறினது உன் காதிலேயும் விழுந்த



தோல்லியோ? ஒரு க்ஷணம் நெஞ்சு வெடிச்சுடும் போ ஆயிடுத்திடீ! என்ன தைரியமிருந்தா... அயோக்கி ராஸ்கல்...''

மீண்டும் உணர்ச்சி வசப்பட்டுப் போனதில் வார் தைகள் தொண்டையை அடைக்க, தன் இயலாமையை மறைக்க ''தூத்தம் கொண்டாடி... மாரை என்னமே பண்ணறது'' என்று கத்தினார்.

இரண்டே எட்டில் பானையிடம் பாய்ந்து லோட்ட வில் தண்ணீர் எடுத்து சாரதா கொண்டுவந்து நீட்டினாள்

கணவர் நீர் குடித்த நாழிகையில் தலைமேல் இடிபே விழுந்துவிட்ட மாதிரி, கண்ணால் ஜலம் வடித்து புடைவைத் தலைப்பை வாயில் வைத்துக்கொண்டாள்

மூன்றாவது பிள்ளை பேறுக்காக வந்திருந்த மூத் பெண் கோகிலா, நடந்தது அத்தனையும் பார்த்து கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, தன் பங்குக்கு தானும் வா திறந்தாள்.

''நீங்க சொல்றது ரொம்ப சரிப்பா...நாலு கா சம்பாதிக்கத் துவங்கிட்டா என்னவேணா பேசலாம் எதுவேணா சொல்லலாம்ங்கற திமிர் இந்த பட்டணத்து பசங்களுக்கு வந்துடறது... த்தூ... மனுஷனா அவன் என்னென்னவோ பேசிட்டானே... எங்காத்துக்கார காதுலே விழுந்தா தாம் தூம்னு குதிப்பார், நிச்சயம்...'

மனைவி அழுவதும், மகள் தூஷிப்பதும் தனக்கு சாதகமாக அமைய, கோபாலனின் கோபம் தட்டென்று அதிகமாகிப்போனது

''மூணாம் மனுஷனை குறை சொல்லுவானேன், நம்ம வீட்டுக் கழுதை ஒழுங்கா இருந்தா இந்த மாதிரி ஒ பேச்சுக்கு எடம் வந்திருக்குமா? எங்கடீ அவ..

தாட்டத்துலே நிக்காதே, வாசலுக்குப் போகாதேன்னு ஏழு தரம் முட்டிக்கறதை காதுல வாங்காட்டா, இப்படித் ான் குடும்பமே சிரிச்சுப் போகும்... கூப்பிடு அவளை... ங்கடீ அவ...?''

' உள்ளத்தான் இருக்கா...''

''கூப்பிடு சொல்றேன்—இழுத்து வைச்சு நாலு அறை கொடுத்தா என்னனு பரபரக்கறது...''

அப்பாவின் கத்தலும், அம்மாவின் விசும்பலும், 'எங் ாத்துக்காரர் காதுல விழுந்தா' என்ற அக்காவின் புலம்ப லும் உள் அறையில் அமர்ந்திருந்த நீலாவின் காதுகளில் பிழவே செய்தன.

அறையின் வடக்கு மூலையில் குத்துக்காலிட்டு முகத்தை முழங்கால்களில் புதைத்தபடி உட்கார்ந்திருந் தவளின் நெஞ்சு பயத்தில் வாய்வரைக்கும் எழும்பிக் குதித்தது. கைவிரல்கள் சில்லிட்டுப் போயின பிடரியில் வியர்த்தது.

நான் என்ன செய்வேன்?

எவனோ ஏதோ சொன்னான் என்றால் அதற்கு நான் என்ன செய்வேன்?

அப்பா மற்றவர்களை என்ன சொல்லி சமாளிப்பேன்?

எனக்கு எதுவுமே தெரியாது, நான் குற்றமற்றவள் என்றால் நம்புவார்களா?

சட்டென்று பயம் அதிகமானதில் உள்ளத்தின் வேதனை, கண்களில் நீராக இறங்க, நீலா சப்தம் எழாமல் விசிக்க முற்பட்டாள்.

கோபாலன் அந்த ஊருக்கு பெரிய மனிதர்தான். அவர் தாத்தா காலத்திலிருந்து அந்த குடும்பத்துக்கு பெரிய பண்ணை ஐயர் வீடு என்கிற அந்தஸ்தான பட்டம் உண்டு.



இன்றைக்கு பெரிய பண்ணை சின்னப் பண்ணையா விட்ட போதிலும், ஊரில் மதிப்புக்கும் மரியாதைக்கு குறைச்சல் இல்லைதான்.

கோபாலன் அவர் தந்தைக்கு ஒத்தைப் பிள்ளை. கூட பிறந்தவள் என்று சொல்லிக்கொள்ள கோபாலனுக் மூத்தவளாகப் பிறந்த மீனாம்பா, அந்த காலத்து வழக்க படி ஒன்பது வயசில் கல்யாணமாகி, பதினாறு வயசி பெரியவளாகி புக்ககத்துக்குக் குடுத்தனம் பண்ணப் போ வள் பதினேழு வயசில் இவளுக்கு என்று வயிற்றில் ஒன் ஜனிக்கு முன் டைபாய்ட் ஜுரத்தில் அகாலமாய் தா கட்டினவன் போய்விட, இனி எனக்கு எல்லாம் நீங்க தான் என்று பெற்றவர்களைத் தஞ்சம் புகுந்தவள் சம்பிரதாயப்படி அந்த வயதிலேயே மொட்டை அடித் வெள்ளை உடுத்தி ருத்திராட்சரம் அணிந்து, விபூ பூசியதை வாய் திறக்காமல் இதுதான் என் தலைவி என்று ஏற்றுக்கொண்டவள் இன்றைக்கு, அப்பா, அம்ம மறைவுக்குப்பின் வீட்டுக்குப் பெரியவளாக வளை வருபவள்.

கோபாலன், சாரதாவுக்கு நாலு பெண்கள், ஒ பிள்ளை; கடைமுட்டி.

மூத்தவள் கோகிலா. பக்கத்து கிராமத்தில் வாழ்க்கை பட்டு பத்து வருஷங்கள் ஆகின்றன. இரண்டு பிள்ளைகள் மூன்றாவது பிரசவத்துக்கு வந்திருக்கிறாள்.

அடுத்தவள் பாலா. செங்கல்பட்டில் வக்கீல் புரு னுடன் குடுத்தனம் பண்ணுகிறாள்.

மூன்றாவது, நீலா என்கிற நீலாயதாட்சி. மூன்றா வருஷம் கல்யாணமாகி, தலை தீபாவளிக்கு வந்த இடத்தி காவேரிக்கு புருஷனை காவு கொடுத்துவிட்டு, அப்ப வீட்டோட தங்கிவிட்டவள். இன்றைக்கு வீட்டி முளைத்திருக்கிற பூகம்பத்தின் காரணகர்த்தா.

இவளுக்கு அடுத்தவள் நாராயணி. பள்ளி படிப்பை முடித்துவிட்டு, கல்லூரியில் படிக்க அப்பா சம்மதம் கொடுக்காததால் வீட்டில் குண்டு சட்டியில் குதிரை ஓட்டு பவள். வயது பதினேழு. கடைசியாய் ராஜா. பள்ளியில் ரட்டாவது படிக்கிறான்.

மூன்று பெண்களை நல்லவிதமாய் கரை ஏற்றிவிட் டோம். இனி ஒருத்திதான் பாக்கி. அவளையும் பதினெட்டு வயசில் ஒருவனிடம் ஒப்படைத்துவிட்டால், அப்புறம் கவலை விட்டது. நிலம், நீச்சை ராஜா தலை எடுத்ததும் பார்த்துக்கோடா என்று சொல்லிவிட்டு அக்கா, மனைவி யுடன் காசி, ஹரித்துவார் போக வேண்டும் என்று கோபாலன் ஆசைப்பட்டது நீலாவின் மாப்பிள்ளை அகாலமாய் போனதில் உடைந்து சிதறியது நிஜம்.

பத்தொன்பது வயசு பெண்; கல்யாணமாகி ஆறு மாசம்கூட புருஷனுடன் குடுத்தனம் பண்ணாதவள், வீட்டோடு வந்துவிட்டாள். இனி அவளை ஆயுசுக்கும் பொத்தி பொத்தி காப்பாற்றியாக வேண்டுமே! காலம் கெட்டுக் கிடக்கிறதே— எனக்கு ஒன்று ஆகிவிட்டால் இவள் கதி என்ன— என்று சதா சர்வ காலமும் அவர் உள்ளுக்குள் குமைந்ததற்கு ஏற்ப இன்று இப்படி நடந்து விட, கோபம் மூக்கு நுனியில் எட்டிப் பார்ப்பதில் அதிசயம் என்ன?

விஸ்வம் வந்துபோய் அரை மணி ஆகியும் கோபால னின் கோபம தணிந்தபாடாய் இல்லை. வாயில் வந்ததைச் சொல்லி அவனை ஏசினார். மானமே போய்விட்டது என்ற ரீதியில் தலையில் அடித்துக்கொண்டு கத்தினார். ஊரில் இந்தப் பேச்சு பரவினால் என்ன ஆகும் என்று பதைத்த மனைவி கோகிலாவோடு சேர்ந்து அவரும் கலங்கிக் கொண்டிருக்கையில், கோவிலில் கதா காலட் சேபம் கேட்கவென்று போயிருந்த மீனாம்பா நாராயணி யுடன் வீட்டுக்குத் திரும்பினாள்.



அக்கா கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த துமே, உன்னிடம் எப்படிச் சொல்வேன் என்கிற மாதிரி 'அக்கா, அக்கா' என்று கோபாலன் அரற்ற, சாரதா விசும்பினாள். கோகிலா கையால் முகத்தை மூடிக் கொண்டாள்.

படி ஏறி உள்ளே வந்து தம்பியை ஏறிட்ட மீனாம்பா வின் முகத்தில் கவலை நிழலாடியது.

''என்ன கோபு... ஏன் எப்படியோ இருக்கே? சாரதா ஏன் கண் கலங்கறா?'

கோபாலன் செம்மின குரலில் பேசினார்.

''ஒரு மணி நேரம் நீ கோவிலுக்குப் போயிட்டு வர்றத் துக்குள்ள, இங்க நம்ம மானம் மரியாதை எல்லாம் கப்பல் ஏறிடுத்துக்கா...'

''என்னடா சொல்றே?''

''நிஜமாத்தான்க்கா... நா பெத்த கடங்காரி நம்ம குடும்பத்தை சந்தி சிரிக்க வைச்சுட்டாக்கா...''

மீனாம்பா முட்டாக்கை இழுத்துவிட்டுக் கொண் டாள். தம்பியை அழுந்தப் பார்த்து ''விபரமா சொல்லப் போறியா இல்லியா?'' என்றாள்.

''என்னத்தக்கா விவரமா சொல்றது? மூணாவது வீட்டுலே ஒரு தடியன் இருக்கானே, விஸ்வம்னு... அவன்''

''யாரு? சர்க்கரை ஆலைல மானேஜரா வந்திருக் கானே, அந்தப் பிள்ளையாண்டானா?''

''அவனேதான் அந்த கடன்காரன்தான். அரைமணி முன்னால இங்க வந்துட்டு என் தலைல பெரிசா கல்லை தூக்கிப் போட்டுட்டுப் போனான்.''

''புரியும்படி சொல்லுடா, கோபு...''

''என்னத்தக்கா சொல்றது? படிச்சவன் உயர்ந்த வேலைல இருக்கறவன்னு ஆத்துக்கு வந்துண்டு போயிண்டு இருக்க சம்மதிச்சது தப்பாயிடுத்து... ஊர்ல நாளைக்கு நா தலை நிமிர்ந்து நடக்க ஒட்டாம பண்ணிட்டான் அயோக்கியன்...''

மீனாம்பா புருவங்களை நெரித்துக்கொண்டு யோசித்தாள். சன்ன குரலில் கேட்டாள்.

''நாராயணிக்கும் அவனுக்கும்...''

கோபாலன் அவசரமாய் குறுக்கிட்டார்.

''அப்படி இருந்தாகூட தேவலியேக்கா... இவன் கண்ணு அந்த மூதேவி மேலன்னா விழுந்திருக்கு... படி ஏறி வந்து 'நீலாவை எனக்குக் கல்யாணம் பண்ணித் தருவேளா'னு அவன் கேட்டப்போ... எனக்கு... எனக்கு.''

ஓ!

மீனாம்பா நிச்சயமாய் இதை எதிர்பார்க்காததால் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரை தம்பி சொன்ன சேதி குறுகுறுவென்று ஓடியது.

ஈஸ்வரா... ஈஸ்வரா...

நிற்க முடியாமல் போய்விட்ட தினுசில் ஊஞ்சல் கம்பியை பிடித்துக்கொண்டாள்.

மெதுவாய் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்தாள்.

மார்புக் கூட்டுக்குள் குமிழ் குமிழாய் என்னென்னமோ வெடித்தன.

மூடிய கண்களிலிருந்து மெல்லியதாய் நீர் கோடு போட்டுக்கொண்டு இறங்கியது.

''பார்த்தியா, அக்கா எப்படி அடிபட்டுப் போயிட்டான்னு! அவ மானி, அவளால இந்த மாதிரி பேச்சை தாங்க முடியாதுன்னு எனக்குத் தெரியும். சட்டுனு தண்ணி கொண்டா சாரதா; அந்த ஃபேனை போடு...''



கோகிலா மின்விசிறியை சுழல விட்டாள்.

தண்ணீர் கொண்டு வந்த சாரதா பரிதவித்தாள்.

''அக்கா... என்னக்கா பண்ணறது? சூடா ஒரு வாய் காபி கொண்டு வரட்டுமா? இதுக்காகவா இப்படி இடிஞ்சிபோயிட்டேள். கிடக்கறது சனியன்னு விட்டுடுங்கோங்க்கா...''

''எப்படி விட முடியும்டீ... இது என்ன சாதாரண குடும்பமா? எங்கப்பா நித்யாக்னி வளர்த்து ஹோமம் பண்ணவர் இல்லியா? ஆசாரம், நியமம், நிஷ்டை எதுலே நாம தவறி இருக்கோம்! அக்கா ஒரு தபஸ்வினி மாதிரி வாழறவடீ. சொந்த மருமானாலே இப்படி ஒரு அவப் பேர்னா அவளால எப்படித் தாங்க முடியும்? அக்கா, தேத்திக்கோக்கா... நாளைக்கே இதுக்கு ஒரு வழி பண்ணிடலாம்... இந்தமாதிரி ஏடாகூடமா ஏதாவது வரலாம்னு பயந்துதான் மூணு வருஷம் முன்னாலயே செய்ய வேண்டிய காரியங்களைச் செஞ்சுடலாம்னு நா முட்டிண்டேன்; 'சிறுசுடா, கோரம் பண்ண வேண்டாம். காலம் மாறிடுத்து'ன்னு நீதான் தடுத்தே... இப்பப் பாரு பொண் குட்டிகள் கண்ணுக்கு லட்சணமாக இருக்கறதே பாவம்க்கா... தோட்டத்தைக் கொத்தறேன், செடிக்கு தண்ணி விடறேன்னு வாசல்லே போய் நிக்காதேனு தலையால அடிச்சுண்டேன்... இப்ப இப்ப...?''

மீனாம்பா தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டாள். படபடக்கும் தம்பியை நிமிர்ந்து பார்த்து முட்டாக்கை இழுத்துவிட்டுக் கொண்டாள்.

'இப்ப என்ன ஆயிடுத்துனு நீ இந்த குதி குதிக்கறே கோபு?'

கூடத்தில் சட்டென்று ஒரு அமைதி நிலவியது.

''என்ன ஆயிடுத்தா? சுயநினைவோடத்தானே நீ கேக்கறயாக்கா?''

கோபாலன் கண்களை விரித்தார்.

''ஆமா, தெளிவாதான் கேக்கறேன். எல்லாரும் இப்படி அழுது புலம்பி இடிஞ்சி போற அளவுக்கு இங்க என்ன நடந்துடுத்து? ம்?''

''அர்கா... உனக்கு... வந்து...''

''எனக்கு ஒண்ணும் ஆகலை கோபு. நா நிதானமா தான் இருக்கேன். யோசிச்சிட்டுதான் பேசறேன்... எதிர் பார்க்காத விஷயம் காதுல விழுந்ததும் ஒரு நிமிஷம் திகைச்சிப் போனது வாஸ்தவம்தான். ஆனா, இப்ப தெளிஞ்சுட்டேன்...சொல்லு... அந்த பிள்ளையாண்டான் கேட்டதிலே என்ன தப்பு?''

''அக்க்...கா...''—கோபாலன் குரல் எடுத்து கத்த, சாரதாவும், கோகிலாவும் எதுவும் புரியாமல் விழித்தார்கள்.

''நீயாக்கா இப்படி கேக்கறே? பதினேழு வயசிலே தாலிய அறுத்துட்டு, சன்னியாசினி மாதிரி வாழற நீயாக்கா?''—

''ஆமாடா...நானேதான்...விவரம் புரியாத வயசுலே நாலுபோ முன்னால வர முடியாதபடி விகாரப்படுத்திண்டு, பின்கட்டோட பின்கட்டா அடைஞ்சு கிடந்து, நாக்கை கட்டி, வயத்தை கட்டி, உணர்ச்சிகளை எல்லாம் மரத்துப்போக வைச்சுண்டு வேற வழியில்லாம என்னை ஒரு சன்னியாசினியா ஆக்கிண்டவதான்டா கேக்கறேன்—விஸ்வம் கேட்டதுல என்ன தப்பு!''

''என்ன தப்பா? உன்னைப் பார்த்து ஒருத்தன் அன்னிக்கு இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தா, நீ பொறுத்திண்டு இருந்திருப்பியா? சொல்லு?''



''அது அந்த காலம்டா... அந்த நாளோட இந்த நாளை ஒப்பிடறது நியாயமாடா கோபு?''

''நியாயம், தர்மம், சரி, தப்புங்கறதுக்குக்கூடவா, அந்தக் காலமும், இந்தக் காலமும்? உனக்கு அதிர்ச்சிலே மூளை பிசகிப்போச்சுக்கா... ஆமா...''

மீனாம்பா கண்ணில் துளிர்த்த நீரைத் துடைத்தாள். சின்ன குரலில் தீர்மானமாகப் பேசினாள்.

''மூளையும் பிசகலை, புத்தியும் மாறலை. நா தெளிவா இருக்கேன். கேட்டுக்கோ கோபூ... சித்த மின்னாடி கதைலே உபன்யாசகர் ஒரு குட்டிக் கதை சொன்னார். 'ஜமதக்னியோட பெண்டாட்டி ரேணுகா அதி கற்புக்கரசி, மணலை பிடிச்சு குடம் பண்ணி அதுலே நித்தமும் தண்ணி பிடிச்சு எடுத்துண்டு வர்றப்போ, ஒரு நா, இந்திரனோட நிழலைப் பார்த்து 'ஆஹா— என்ன அழகான ரூபம்'னு நினைச்சதுல அவ கற்பு தவறிப் போய், பானை பண்ண வராம போயிடுத்து; அந்தக் காலத்துலே கற்பு நெறி அப்படி உத்தமமா இருந்தது. அந்த அளவுகோலை வைச்சு, இன்னிக்கு பெண்களை மதிப்பிட்டா, எத்தனை பேர் தேறுவானு தெரியலை'ன்னு அந்த உபன்யாசகர் சொன்னதை யோசிச்சுண்டேதான் நா வீட்டுக்கு வந்தேன். நிஜமா சொல்றேன் கோபு, ரேணுகாவுக்கு வைச்ச அளவுகோலை— மனசார ஒருத்தன் அழகை பாராட்டினாகூட கற்பு பறி போயிட்ட அளவு கோலை— வைச்சு இன்னிக்கு பார்த்தா, நம்ப நாட்டுலே ஒரு பொம்பளை தேறமாட்டாடா... சாரதா, அன்னிக்கு நீ என்ன சொன்னே? 'சிவாஜிகணேசன் நடிக்கணும், பார்க்கணும் அவர் கம்பீரம் யாருக்கு வரும்னுதானே? ஏம்மா, கோகிலா, நீ நேத்திக்கு சொன்னியே என்ன? சேஷ கோபாலன் குரலும் அழகு, ஆளும் அழகுனுதானே?... இப்படி பிற ஆம்பிளைகளை ரசிக்கத் துவங்கிட்டேள்ங்கறதுக்காக இன்னிக்கு நீங்கள்ளாம் கற்பு இல்லாதவா,

கெட்ட பொம்பளைனு யாராவது சொன்னா, அது நியாயமா? அந்த மாதிரிதான் என் விஷயமும். நா அந்த கால மனுஷி... அப்ப எனக்கு நடந்ததுதான் நியாயம்னு எல்லாரும் நினைச்சா... இப்ப காலம் மாறிடுத்து... காந்திஜிலேந்து எல்லா பெரியவாளும் விதவைத் திருமணத்தை ஆதரிக்கிற காலம் இது... 'நீ இல்லியா'னு என்னை உதாரணமா காட்டி நீலா வாழ்க்கையை முடக்கப் பார்க்காதீங்கோ''' நீலா வாழணும்...விஸ்வம் நல்ல பிள்ளை. நல்ல குடும்பம்...குறுகின புத்தி இல்லே... முறைப்படி நாமே முன்னாடி நின்னு கல்யாணத்தை நடத்தினா யாருடா பல்லுமேல நாக்கு பட பேச துணிவா? எழுந்திருங்கோ...அசட்டுப் பிசட்டுனு எதையோ பேசிண்டு, யோசிச்சு கலங்காம, ஆகறதைப் பாருங்கோ; நாளைக்கே அந்த விஸ்வத்தை சந்திச்சுட்டு அவனை பெத்தவாளுக்கு கடிதாசு போடு. நீலா எங்க? குழந்தையை எல்லாருமா சேர்ந்துண்டு மிரட்டி எங்க அடைச்சு வைச்சிருக்கேள்?...நீலா...நீலாம்மா...''

சொல்ல வேண்டியதை பெரியவளாய் லட்சணமாய் ரொம்பத் தெளிவாகச் சொல்லிவிட்டு மீனாம்பா உள்ளே போனாள். அங்கே மூலையோடு மூலையாய் ஒடுங்கி... ''எனக்கு ஒண்ணும் தெரியாது அத்தே...சத்தியமா...சத்'' என்று விசும்பி பரிதவித்த மருமகளை ஆதுரத்துடன் அணைத்து ''அசடு, இப்ப என்ன ஆயிடுத்து? கண்ணைத் துடைச்சுக்கோ... எல்லாம் நல்லத்துக்குதான். பகவான் இருக்கார்'' என்று மெல்ல பேச, அந்த இதத்தை தாங்க மாட்டாததுபோல அவள் மடியில் சாய்ந்து நீலா பெரிசாய் அத்தே...அத்தே... என்று அழ முற்பட்டாள்.

# பொதி சுமக்கும் கழுதைகள்

வரிசையாய் இருந்த வெள்ளைப் படுக்கைகளில் தேடுகையில் அக்காவைத் தவிர ஏகப்பட்ட லக்ஷ்மிக்கள் தென்பட்டார்கள்.

''இங்கே லக்ஷ்மி அம்மானு—?''-

''அதோ—அந்தம்மாளா பாருங்க...''

இல்லை. அவர் இல்லை.

இப்படி லக்ஷ்மிகரமாய் பெயர் வைத்துக்கொள்ள நிறைய பேருக்குப் பிடித்திருக்கிறது—இதில் அக்காவை எங்கே தேடுவது?

வார்டு, படுக்கை எண் எதுவுமே தெரியாமல் இத்தனை பெரிய ஆஸ்பத்திரியில் நுழைந்தது தப்பு. விசாரணையில் விசாரிக்கலாம் என்றால் அது இருக்கும் ஈசானமூலை புலப் படவே இல்லை.

''அட... கல்யாணி! தனியாவா வந்திருக்க?''

ஃப்ளாஸ்டிக், டிபன் காரியர்—இன்ன பிற ஆஸ்பத்திரி லக்ஷணங்களோடு அத்தான் நின்றிருந்தார்.

''ஆமா...அத்தான். அரை மணியா தேடுறன்! அக்கா இருக்குற எடமே தெரியலே—''

''வா...வா. நானே அழச்சிட்டுப் போறேன். இத்தனை நேரம் தூங்கிட்டு இப்பத்தான் எந்திரிச்சா. இன்னை

யிலேந்து கஞ்சி, இட்லியெல்லாம் குடுக்கலான்னிட்டு டாக்டர் சொல்லிட்டாரில்ல! அதான், ரெண்டு இட்லி வாங்கிட்டு வந்துரலாம்னு கௌம்பினேன். அதுசரி, இந்த பன்னண்டு மணி வெயில்லியா வருவாங்க? ஏன் கல்யாணி, பொழுது சாஞ்சப்பால வரக்கூடாது?''

''வெயிலு என்ன அத்தான்! அக்கா எப்படியிருக்கு? வலிவலின்னு துடிக்குதா?''

''வலியா...? ஆபரேஷன் ஆயி ரெண்டு நாளுகூட ஆவல. அதுக்குள்ளியும் 'வீட்டுக்குப் போய் நா ரெஸ்டு எடுக்கறேன்'னு டாக்டர்கிட்ட சொல்லுது. வலின்னா சொல்லும்?''

உடலெல்லாம் சோர்ந்து, பெண் பிள்ளையின் வேலைகளையும் நானே பார்த்துக்கொண்டும் இந்த மனிதருக்குள் இன்னமும் ஆயாசமும், எரிச்சலும் தலைகாட்டவில்லையே!

தானே சமைத்து, ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்து, ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு, ராவும் பகலும் மனைவிக்குத் துணையாய் தங்கி, சிஷ்ருஷை பண்ணி......

அக்காவின் படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டு, திடுமென முளைத்து பயமுறுத்திய கருப்பையின் அறுவையினைக்கூட, ஒருவித யதார்த்தத்துடன் நாலு வரிகளில் விளக்கி, எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அமரிக்கையாய் பேசுபவர்களைப் பார்க்கையில் அவள் கண் நுனியில் முத்துத் திரள ஆரம்பித்தது.

''அய்ய...என்ன கல்யாணி? இப்ப எதுக்கு அழுக? எல்லோரும் எப்பவாச்சும் ஸர்வீஸ் பண்ணிக்கிட்டுத்தானே ஆவணும்? இதோ...இருவது நாள்ல வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிருவேன்...''



கையை இறுகப் பற்றிக்கொண்டு, ''அழாதம்மா—'' என்றாள் அக்கா.

''ஏங்கா—பொம்பளத் தொணை இருக்கணுமுன்னு இங்க சொல்லலியா?''—

அக்கா சிரித்தாள்.

''இல்லம்மா, வேற ஒறவு மனுசங்க யாரும் இல்லன்னா புருஷன் இருக்கலான்னாங்க. அத்தான் வராண்டாவுலதா படுக்கறாரு.''

நான் இருக்கிறேன் — உன் உறவு மனுஷி? என்று சொல்லத் தோணியது. ஆனால் அப்படி சொல்வது அவளுக்கே அபத்தமாய் பட்டதால் வார்த்தைகள் வெளியே வராமல் உள்ளேயே தங்கின

ரத்தப்போக்கு அதிகமாகி அக்காவை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்துவிட்டு, 'நேத்து காலைல ஆபரேஷன் ஆயுடுச்சு' என்று அத்தான் வந்து சொன்னபோது அவள் மனசும் உடம்பும் பரபரத்துதான் போயின.

''ஐயோ...வாங்க. போய் அக்காவப் பாத்திட்டு வந்திடலாம். அத்தான் தனியா என்ன பண்ணுவாரு? ஏதாச்சும் ஹெல்ப் செய்யணுங்க...''

''சாதாரண ஆபரேஷனுக்கு நீ ஏன் இந்த குதி குதிக்குறே கல்யாணி? ஆஸ்பத்திரில நல்லா பாத்துப்பாங்க, சும்மா இரு''

சாதாரண ஆபரேஷனா? சும்மாய் குதிக்கிறேனா! நானா!

கூடப் பிறந்தவள்—அதுவும், பெற்றவர்களை இழந்த நாளிலிருந்து அந்த குறை தெரியாமல், தந்தையாய், தாயாய் இருந்து வளர்த்து உங்களிடம் ஒப்படைத்தவள்—அவளுக்கு ஒன்றென்றால் உடம்பு தானாய் துடிக்காது?

ஆத்திரத்தைப் புதைத்துவிட்டு வார்த்தைகளை மென்மையாக்கிக்கொண்டாள்.

''போய் ஒரு நட பார்த்திட்டு வந்திடறேனே...?''

''இன்னிக்கு வேணாம்—அக்கா தலை சுத்தல்னு படுத்திருக்காங்க; நாளைக்கு போய்ட்டு பொழுதோடு வந்திடு. இங்கே அம்மா கெடந்து அல்லாடுவாங்க''

வீட்டில் அவளைத் தவிர அத்தனை மனிதர்கள் இருக்கையில் எப்படி அல்லாடுவார்கள்? கேட்டால் அக்காவை இப்படி பத்து நிமிஷங்கள் வந்து எட்டிப் பார்ப்பதும் அசாத்தியமாகியிருக்கும்.

கூடப் பிறந்தவளை, யாரோ மூன்றாம் மனுஷியைப் போலப் பார்த்து சம்பிரதாயக் குசலம் விசாரித்துவிட்டுப் போவதில் ஏற்பட்ட குற்ற உணர்வில் துவண்டுபோய் அவள் 'நா வாங்கா...' என்று சொல்லிக்கொண்டு கிளம்பினாள்.

இப்போதே நேரமாகிவிட்டது. கூடிவிட்ட அரை மணிக்கான சமாதானக் காரணத்தை யோசிக்க வேண்டும்.

''என்ன இத்தன நேரமாக்கிட்ட—? காபி போடணும், ராவுக்கு சமையல் செய்யணும். ரெண்டு நாளா பங்கஜம் தலை தூக்காம படுத்திருக்கா. பொறுப்பே இல்லாம நீம் பாட்டு போயிட்டியே!''

அவசர அவசரமாய் வீட்டுக்குள் நுழைந்து அத்தையின் முணுமுணுக்குக்குப் பதில் சொல்லிக்கொண்டு நிற்காமல் அவள் வேலையைப் பார்க்க ஆரம்பித்தாள்.

சின்ன நாத்தி பிளாஸ்டிக் பை போடுவதிலும், நடு நாத்தி புஸ்தகம் படிப்பதிலும் மும்முரமாக இருந்தனர்.

பிரசவத்துக்கு என வந்திருந்த பெரிய நாத்தி பங்கஜத்துக்குதான் தலை சுற்றல்!



வேலைகள் முடிந்து முகம் கழுவி உள்ளே வரும் வரையில் ஆஸ்பத்திரியில் கிடப்பவள் எப்படியிருக்கிறாள் என்று சின்னதாக ஒரு கேள்விகூட யாரும் கேட்காத வருத்தத்தில், கேள்வி இல்லாத பதிலாக கணவரிடம் மட்டும் கூறினாள். ''அக்காவப் பாத்திட்டு வந்தேன். இன்னம் பதினைஞ்சு, இருவது நாளு அங்கியே இருக்கணுமாம். பாவம்— அத்தான்தா தனியா அலையறாரு—''

''ம்...ம்... புருஷன் அலையாம வேற யாரு அலைவாங்களாம்...?''

''ஏங்க... நா வேணா போயி ஒரு பத்து நாளைக்கு ஒத்தாசைக்கு இருக்கேனே—? இத்தோட ரெண்டுவாட்டி கேட்டுட்டேன். ஒண்ணும் சரியா சொல்லமாட்டேங்கறீங்க...''

''நா என்ன சொல்றது? அம்மாவைக் கேக்கறது தானே?''

''ஆமா... அம்மாவக் கேட்டா புள்ளயக் கேளு— புள்ளயக் கேட்டா அம்மாவக் கேளு! கண்ணாமூச்சி ஆட்டமா இப்படி பேசினா என்னங்க அர்த்தம்?''

''என்ன பெரிய்ய அர்த்தம்? நீ போவ வேணாமுன்னு அர்த்தம்! அவுங்க அவுங்க குடும்பத்த அவுங்களே பாத்துப் பாங்க. நீ என்னா போறது? ம்...?''

அதிசயமாய், முதல்முறையாய் ஆத்திரம் கொஞ்சம் வெளிப்படையாய் வெடித்தது.

''அட— சீர்செனத்தி செஞ்சு என்னையக் கட்டிக் குடுக்கறப்ப மட்டும் அவுங்க வேண்டியிருந்துச்சு. எனக்குனு இருக்கறது அக்காவும் அத்தானுந்தான். கொழந்த குட்டி இல்லாம என்னைய வளர்த்தினதுக்கு இப்போ சமயத்துல ஒதவ வேணாவா...?''

''இத பாரு கல்யாணி! சும்மா பேசிண்ட்டே இருக்காத. ஒன்னைய கட்டிக் குடுத்தாச்சு இல்ல? அப்ப மறந்துற வேண்டியதுதா. நீ போனா இங்க யாரு எல்லாஞ் செய்யுறது? பங்கஜக்கா வேற படுத்திட்டு இருக்காங்க. தை...தைனு தொணப்பாத...''

மறந்துவிட வேண்டியதுதானா— உடன் பிறப்புக்களோடு வாழ்பவருக்கு இப்படி ஒரு வியாக்யானம் கொடுக்க எப்படி தோன்றியது? ஆ... என்ன உத்தம புருஷர்? இதோ என்று வரும் பிள்ளைபேற்றிற்கு மட்டும் பிறந்தகத்திற்கு அனுப்ப மறக்க மாட்டார்களே!

வேதனை பட்டுப்பட்டு மரத்துப்போய்விட்டதில் அழுகை வர மறுத்தது. கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டு தலை வலிக்க ஆரம்பித்தது.

கூடத்திலிருந்து ''அன்னி! அப்பா சமையல் ஆச்சானு கேக்குறாரு'' என்று புஸ்தகத்தை கீழே வைக்க மனமில்லாத நாத்தியின் குரல் கேட்க,

''போ... போ எல்லாம் பசியோட காத்திருக்காங்க... போய் வேலயப் பாரு. இங்க இத்தினி வேலய வெச்சுகிட்டு அக்காளுக்குத் தொணைக்கிப் போறாளாமில்ல!— குடும்பத்தோட கஷ்ட நஷ்டம் தெரியாம...''

புருஷன் நீளமாக அடுக்கிக்கொண்டே போக, அவள் பதில் பேசத் தெரியாது நின்றாள்.

அவள் இன்றி அந்த வீட்டில் அணுவும் அசையாது என்கிற மாதிரி என்ன பேச்சு இது!

அசையாதுதான்...

சமையல்? அவள்தான்...

வீட்டு வேலைகள்? அவள்தான்...



பொதி சுமக்கும் கழுதை? அவள்தான்.

அவள் இல்லாமல் வேறு யாராம்?

பின், தாலி கட்டிக்கொண்டது எதற்காகவாம்?

அவள் விசுவாசமான இந்திய பதிவிரதை.

கழுத்தில் மஞ்சள் கயிற்றை கட்டிக்கொண்டபி மறந்தும் பிறந்த வீட்டை நினைக்க முடியாதவள்!

அரை நிமிஷம் அப்படியே நின்று கணவனை வெறித் விட்டு, கூடத்துக்குப் போகத் திரும்பியபோது தன்னை போன்ற பெண்களின் கையாலாகாத்தனத்தை நினைத் அவளுள் லேசாக ஆயாசம் மண்ட முற்பட்டது.

# ஆயா

இரண்டு மணி தறுவாய்.

சரியான வெயில்.

சமையல்கட்டு வாசல்படியில் தலைவைத்து படுத் ருந்த வடிவாம்பாளுக்கு அடிக்கழுத்தில் சசகசத்தது.

பக்கத்தில் வைத்திருந்த பனை ஓலை விசிறியை எடுத்து ரண்டு தரம் விசிறிக்கொண்டாள். கை வலித்தது. சிறியைக் கீழே வைத்துவிட்டு, தலைப்பால் கழுத்தைத் டைத்துக்கொண்டாள்.

தூக்கம் வரவில்லை.

எழுந்து உட்கார்ந்தாள். தலை ஒருதரம் வட்ட டித்துவிட்டு நின்ற மாதிரி தோன்றியது.

வரவர இந்த ப்ரஷரின் அட்டஹாசம் அதிகமாய்தான் பாய்விட்டது. திடுதிடுப்மென்று நெஞ்சு கூட்டுக்குள் பரிசாய் பறவை ஒன்று புகுந்துகொண்டு இறக்கைகளை டித்துக்கொண்டு பறக்கிற மாதிரி இடது பக்கமாய் பர ரவென்று இரைகிறது சட்டென்று குனிந்தால், நிமிர்ந் ால் தலையைச் சுற்றுகிறது.

வடிவாம்பாள் மெதுவாக எழுந்து சமையல்கட்டுக்குப் பானாள். ஃபில்டரில் ஒரு டீஸ்பூன் காபித் தூளைப் பாட்டு அமுக்கி, அரை லோட்டா வெந்நீர் கொதிக்க வத்து சுழற்றி ஊற்றினாள்.



டிகாக்ஷன் இறங்கும்வரை காத்தாட உட்காரலா என்று பின்கட்டுக்கு வந்து துளசி மாடத்துக்கருகில் கா நீட்டி அமர்ந்தாள்.

காற்று லேசாக முணுமுணுவென்றது.

வெள்ளை வெயில் கண்களைக் கூச வைத்தது.

காகம் ஒன்று வெக்கை தாங்காமல் தவித்து பறந் கிணற்றடியில் தேங்கி இருந்த ஜலத்தில் இரண்டு வா குடித்தது. அப்புறம் கொய்யா மரக்கிளை நிழலி அமர்ந்து வாயைத் திறந்து வைத்துக்கொண்டு, தலை சாய்ந்து காக்காய் பார்வை பார்த்தது.

கொய்யா மரம் நிறைய பிஞ்சு எடுத்திருப்ப வடிவாம்பாளால் இங்கிருந்து காண முடிந்தது.

இந்த மரத்திற்கு இப்போது என்ன வயசிருக்கும்?

இருபது, இருபத்தைஞ்சு வயசு இருக்காது?

இருக்கும்... தாராளமாய்.

மோகன் குழந்தையாய் இருக்கும்போது யாரே ஸ்னேகிதர் தந்தார் என்று மோகனின் அப்பா வாங் வந்து நட்டார்.

அப்புறம் மோகனுக்கு பத்து வயசு ஆவதற்குள் இ திமுதிமுவென்று வளர்ந்து, கிளைகளைப் பரப்பி கொண்டு கூடை கூடையாய் காய்க்கக்கூடத் துவங் விட்டது.

இது அத்தனை பெரிய ராசி என்று சொல்ல முடியாத அடியில் பருத்து, நுனியில் சிறுத்து எலுமிச்சை சைஸ்தா இருக்கும். ஆனால் உள்ளே பிளந்தால், சிவப்பா கொட்டைகள் அதிகம் இல்லாமல் சதைப் பத்தா இருக்கும், வாயில் போட்டால் சர்க்கரையாய் கரையுப்

மோகன் குழந்தையாய் இருக்கையில் இந்த மரத் லேயேதான் குடி இருப்பான்.

பள்ளி விடுமுறை நாட்கள் என்றால் நண்பர்கள் ல்லாம் ஒன்னு சேர்ந்துகொண்டு என்னமாய் ஹதம் ன்னுவார்கள்!

இப்போது அந்த மோகனுக்குக் கல்யாணமாகி, ஆறு ாசத்தில் பிள்ளைகூட பிறந்துவிட்டான்!

பிள்ளையைத் தொடர்ந்து புருஷனின் நினைப்பு னகள் எட்டிப் பார்க்க, கண்களில் நீர் துருத்திக்கொண்டு ழுந்தது.

ராஜா கணக்காய் இருந்த மனிதர் நிமிஷத்தில் போய் ட்டார், நான் இருக்கிறேன் கல்லு குண்டாய், எதுக்கும் பயோகமில்லாமல்...

இந்த ஐப்பசி வந்தால் கணவர் போய் மூன்று வருஷங் ள் நிறையப்போகின்றன என்ற எண்ணம் ஒருவித வதனையை உண்டாக்க வடிவாம்பாள் தூணில் சாய்ந்து ண்களை மூடிக்கொண்டாள்.

கட்டின புருஷர் தவறிப்போய், ஒற்றைப் பிள்ளையும் ண் காணாமல் வடக்கில் இருக்க, இப்படி அனாதையாய், னியாய் இருப்பது வழக்கம்போல இப்பவும் ஏகத்துக்கு றுத்த மூடின கண்களிலிருந்து மெல்லிசாய் நீர் கோடு ாட்டுக்கொண்டு கன்னத்தில் இறங்கியது.

வடிவாம்பாளுக்கு இப்போது ஐம்பத்தெட்டு நடக் றது. பன்னிரண்டு வயசில், பெரியவளாகுமுன் புருஷ ுக்குக் கழுத்தை நீட்டிவிட்டு இந்த வீட்டுக்குள் நுழைந் வள்; நடேசன் இருந்த வரையில் அவள் வேறு உலகம் தரியாத குழந்தையாய் இருந்தாள்; வீடு, தோட்டம், மையல், புருஷன், பிள்ளை இவைதான் அவளுக்குத் தரிந்தவை.

நடேசனுக்கு அந்த கிராமத்தில் பத்து ஏக்கரா நிலம் ண்டு. வஞ்சனை இல்லாமல் விளைச்சல் இருக்கும்.



பத்தாயம் நிறைந்து, விளை நெல் எடுத்து வைத்து, காசுக்கு போடுவதைக் கொண்டு மனைவிக்கு நாலு புடைவை எடுப்பார், கைக்கு வளையல் செய்து போடுவார், வருஷாந்தர சாமான்கள் வாங்கி அடுக்குவார். எதிர் காலத்துக்கு இருக்கட்டும் என்று பாங்கில்கூட கொஞ்சம் போட்டு வைப்பார்,

பிறந்ததும் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று மோகன் ஒருத்தன் என்பதால் எதற்கும் பஞ்சம் இருந்ததில்லை.

கணவரைப்போல, பரம்பரை விவசாயத்தை மேற்கொண்டு பிள்ளையும் ஊரோடு இருப்பான் என்று அசட்டுத்தனமாய் வடிவாம்பாள் நம்பியிருந்தது நடக்காமல், அவன் மேலே மேலே படித்தான். என்ஜினீயர் ஆனான். 'இந்த கிராமம், இந்தப் பக்கம் எதுவுமே பிடிக்கலை'— என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டு பம்பாயில் ஒரு வேலை தேடிக்கொண்டு போனது ஐந்து வருஷங்களுக்கு முன் நடந்த கதை.

'போறான் போ; விருப்பமில்லாதவனை வலுக்கட்டாயமா எப்படி நிறுத்தி வைக்கிறது''— என்று வெளியில் நடேசன் சொல்லிக்கொண்டாலும் உள்ளுக்குள் அவருக்கு குறை இருந்தது வடிவாம்பாளுக்குத் தெரியும்.

சரி, நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனி, காலாகாலத்தில் பிள்ளைக்கு ஒரு நல்ல இடத்தில் சம்பந்தம் செய்து பேரப் பிள்ளைகளை கொஞ்சி மகிழ வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு அப்பாவும், அம்மாவும் மாறி மாறிப் பெண்களைப் பற்றின விவரங்களோடு கடிதாசு போட்டதற்கு மோகன் கிணற்றில் போட்ட கல்லாக இருந்தான்.

ஒரு சமயம் லீவில் ஊருக்கு வந்தவனை இருவருமாய் மடக்கி 'பேசாம இருந்தா என்ன அர்த்தம்? எங்க ஆசை புரியுதா இல்லியா?'— என்று கேட்க உண்மை வெளியானது.

அங்கேயே ஒருத்தியைப் பார்த்து வைத்திருக்கிறானாம்; பேர் உஷாவாம்; படித்தவளாம், வேலை பார்ப்பவளாம், அழகானவளாம், முக்கியமாய் நாகரிகம் தெரிந்தவளாம். ஜாதி விட்டு ஜாதியில் மணப்பது கூடாது என்று அப்பா, அம்மா தடுத்தாலும் மனசை மாற்றிக் கொள்ள தயார் இல்லையாம்.

நடேசனும், வடிவாம்பாளும் ஆடிப்போனார்கள்.

இரண்டு நாட்களுக்கு சாம, தான, பேத, தண்ட முறைகளைக் கிட்டத்தட்டப் பிரயோகித்துப் பார்த்தும் அவன் பிடிவாதமாக இருக்க, இனி என்ன செய்வது என்று புரியாமல் இவர்கள் உடைந்துபோனார்கள்.

பிள்ளையின் அடத்தின் ஆழம் புரிந்ததும் கண்ணால் ஜலம் விட்டுக்கொண்டு இரண்டாம் நாள், ராத்திரியின் தனிமையில், புருஷனின் காலைப் பிடித்தபடி வடிவாம்பாள் கெஞ்சினாள். 'விட்டுக் கொடுத்துடுங்க—மீறிக்கிட்டு அவன் போயிட்டா, உறவும், பாசமும் கசந்து போயிடுங்க, —என்று விசும்பினாள்.

நடேசன் அவள் காட்டிய காரணத்தை ஏற்றுக்கொண்டார். காலையில் எழுந்ததும் எங்கோ பார்த்துக்கொண்டு பிள்ளையிடம் 'உன் இஷ்டம் போலச் செய்' என்றார்.

கல்யாணம் பம்பாயில்தான்.

இவாகள் யாருடைய திருமணத்திற்கோ போகிறவர்கள் மாதிரி முதல்நாள் போய், மறுநாள் கிளம்பி வந்துவிட்டதை ஊர் பூராவும் மூலை மூலையாய், முடிச்சு முடிச்சாய் நின்று வம்பு பேசியது.



—என் மகனாயிருந்தா காலை வெட்டி வெந்நீ அடுப்புலே வைச்சிருப்பேன்—என்றார்கள்.

—என் பிள்ளையாயிருந்தா, போடா நாயேனு வெரட்டி இருப்பேன்— என்றார்கள்.

—'என்னா வடிவு--எதுக்கு அவன் போக்குல போனீங்க? குலம், கோத்திரம்னு எதையும் பார்க்காம எப்படி சரின்னு சொல்ல துணிஞ்சிங்க— என்றார்கள்.

எதற்கும் இவர்கள் வாயைத் திறக்கவில்லை. மௌனம் சாதித்தார்கள். அப்புறம், தனிமையில் கண்ணீர் விட்டார்கள்.

இப்படி ஊமையாய் புழுங்கினதுதான் நடேசனுக்கு எமனாய் முடிந்திருக்க வேண்டும்.

நாலு மாசம்; எண்ணி நாலே மாசம்.

தலைவலி என்று படுத்தார்— உடனே மார்வலி என்றார். இரண்டு தரம் கஷாயம் போட்டு வடிவாம்பாள் தருவதற்குள் பிராணன் போய்விட்டது.

அப்புறம்? அப்புறம் என்ன?

மோகனுக்குத் தந்தி போக, மறுநாள் மனைவியுடன் வந்து இறங்கினான்.

ஒரு தீர்மானத்துடன் வந்திருந்ததுபோல காரியங்களைச் செய்துகொண்டே, எட்டு ஏக்கராவை விலைக்குப் பேசினான். அம்மா வேதனையுடன், 'எதுக்கு மோகன், இப்ப என்ன அவசரம்?' என்று முனகியதை காதில் வாங்காமல் கொட்டிலை அடைத்துக்கொண்டு நின்ற உழவு கறவை மாடுகளை விற்றான்.

ஊர் பெரியவர்களிடம் 'நா இருக்குறது பம்பாய்ல, இனி நினைச்சு நினைச்சு வர முடியாது. அதனால பொறுப்புகளைக் குறைச்சிக்கிட்டு, அம்மாவையும் என்

ளோட அழைச்சிட்டு போயிட வேண்டியதுதானே' என்று சொல்லிவிட்டுப் பெற்றவளுடன் பம்பாய்க்குக் கிளம்பிப் போனான்.

'ஹா'வென்று கொல்லையும், வாசலும், தோட்டமும், உபகார ஜனங்களுமாய் இருந்துவிட்டவளால் பம்பாயை ஜீரணிக்க முடியாது போனதைவிட, நாட்டுப்புற வடிவாம்பாளை விட்டோடு வைத்துக்கொள்ள நாகரீக உஷாவும், மோகனும் அதிகமாய் சிரமப்பட்டுப் போனார்கள் என்பதுதான் நிஜம்.

தரையில் உட்கார்ந்து சாப்பிடுவது, உரக்க ஏப்பம் விடுவது, யார் வந்தாலும் 'வாங்க' என்று சொல்லி தானும் பேச வந்துவிடுவது, என்ற வடிவாம்பாளின் கிராமிய பழக்கங்களெல்லாம் பட்டினத்துக்காரர்களுக்கு எரிச்சலை மூட்ட, வந்து இரண்டு மாசங்கள் ஆவதற்குள் மொண மொணவென்று தலை தூக்கிய கசப்பு, எரிச்சல், ஆறு மாசங்கள் முடிவதற்குள் சுத்தமாய் தலைவிரித்து ஆட முற்பட்டது.

வேலைக்குப் போய்விட்டு திரும்பும் புருஷனும். மனைவியும் அக்கடா என்று தனியாய், உட்கார்ந்து பேச முடிவதில்லை· 'என்னப்பா விஷயம்' என்று வந்து விடுகிறார்.

நைட் ஷோ, நண்பர் வீட்டில் பார்ட்டி என்று போக முடிவதில்லை; 'எனக்கு ராத்திரிலே தனியா இருக்க பயமா இருக்கு...' என்கிறார்.

சமைக்கிறேன் பேர்வழி என்று க்ளேஸ் டைல்ஸ் போட்ட சமையல்கட்டை ஊழலாக்குகிறார்.

உரக்க நாகுக்கு இல்லாமல் பேசுகிறார்.

ச்சே...



மொத்தத்தில் எதுவும் சரியாக இல்லாமல் போக, ஏழாம் மாசம் அம்மாளை அழைத்து அக்கறையுடன் மோகன் பேசினான்.

''இந்த ஊர் ஒங்களுக்கு ஒத்துக்கலே இல்லேம்மா. வந்ததுலேந்து தலைவலி, கால்வலினு ஏதாச்சும் சொல்லிக்கிட்டே இருக்கீங்க! இந்த பாஷை புரியாம, மனுஷங்க கிட்ட பழக முடியாம கஷ்டப்படறீங்க. கோவில் குளம்னு நினைச்சா உங்களால போக முடியலை; அதனால, நா என்ன சொல்றேன்னா, நீங்க பழையபடி கிராமத்துக்கே போயிடுங்க. நாங்க அப்பப்ப வந்து பார்த்துக்கறோம்; என்ன?'' ...

பிள்ளை எதை மனசில் வைத்துக்கொண்டு பேசுகிறான் என்பது புரிய, ஏதும் பேசாமல் வடிவாம்பாள் புறப்பட்டு சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தாள்.

ஏன் வந்திட்டே?'-என்று பிடுங்கின ஊர் ஜனங்களிடம் 'அந்த ஊர் ஒத்துக்கலை' என்று சொல்லி சமாளித்தாள்.

இது நடந்து வருஷம் இரண்டரை ஓடிவிட்டது; நடுவில் ஒருதரம் இரண்டு நாட்களுக்கு மோகன் வந்து போனான். அப்புறம் பேரன் பிறந்து அவனுக்கு ஆறு மாசமும் ஆகிவிட்டது. இன்னும் ஒரு தடை அவர்கள் இங்கு எட்டிப் பார்க்கவில்லை ஒருதரம் வரக்கூடாதா?

பேராண்டியைக் கண்ணில் காட்டக்கூடாதா?

சலிப்புடன் வடிவாம்பாள் எழுந்தாள். சமையல் கட்டுக்குச் சென்று காபி கலந்து, ருசி நாக்கில் இறங்காமல் குடித்தாள்.

மீண்டும் கொல்லை தாழ்வாரத்துக்குச் சென்று உட்கார்ந்துகொண்டாள்.

மோகன், மோகன் என்று சதா சர்வ காலம் மனசு பறவாய் பறந்தது கடவுளுக்கே பொறுக்காதமாதிரி, பெற்ற வயிறு குளிரும் வகையில், மறுநாள் மோகனிட மிருந்து ஒரு கடிதாசு வந்தது.

''உங்களைத் தனியாக அங்கு விட்டிருப்பது எனக்கு கஷ்டமாக இருக்கிறது. நாலாம் தேதி வருகிறேன். என்னோடு புறப்படத் தயாராக இருங்கள்.''

நாலு வரிதான்.

ஆனால் வடிவாம்பாளுக்கு பாலில் முங்கி குளித்த மாதிரி சந்தோஷமாக இருந்தது.

கடிதாசை தூக்கிக்கொண்டு ஒவ்வொரு வீடாய் ஏறி இறங்கினாள்.

''என் மகனைப் பத்தி எவ எவளோ நாக்குல பல்லு பட, 'அம்மாளை வைச்சிக்க துப்பு இல்லை, விரட்டிட் டா'ன்னு பேசினாளே, இப்ப என்ன சொல்றீங்க?' என்று ஆளாளாய் நிற்க வைத்துக் கேட்டாள்.

பிள்ளைக்காக அடுத்து வந்த நாட்களில் சாமான் களை மூட்டை கட்டினாள். பலகாரங்கள், பொடி ஊறுகாய் வகையறாக்கள். இட்லி அரிசி, சாப்பாட்டு அரிசி...அப்பளம், வத்தல்... இன்னும் இன்னும்...

மோகன் சொன்னபடி வந்தான். சொன்னபடி அம்மா வுடன் கிளம்பினான்.

வடிவாம்பாளுக்கு வாயெல்லாம் பல்.

பம்பாயில் சென்று இறங்கினார்கள்.

பேரன் மெலிந்து, கறுத்து 'ஙே' என்று சோனியாய் இருந்தான். வீடு கந்தர கோளமாய் இருந்தது.



உஷாவின் அலுவலகத்தில் ரொம்ப கண்டிப்பாய் இருக்கிறார்களாம். பத்து நாள்கூட லீவு கொடுக்க மறுக் கிறார்களாம்.

பிள்ளை பெற்ற நாற்பத்தைந்தாவது நாளிலிருந்து இதே அவதிதானாம்...

அவர்கள் இருவரும் வேலைக்குப் புறப்பட்டுப்போன பின் குழந்தையைக் குளிப்பாட்டி, பால் புகட்டி, தூளியில் போட்டு வடிவாம்பாள் தூங்கப் பண்ணினாள்.

துணிமணிகளை மடித்து அடுக்கினாள். வீட்டை சுத்த மாய் பெருக்கி மெழுகினாள். எழுந்துவிட்ட குழந்தையை கவனித்துக்கொண்டே பிசுக்கு பிடித்துக் கிடந்த பாத்ரூம், சமையல் கட்டை சோடா போட்டு அலம்பி, சமைத்து, சாப்பிட்டு மூன்று மணி அளவில் அப்பாடி என்று கூடத்து தரையில் உட்கார்ந்து காலை நீட்டியபோது வாசல் மணி அழைத்தது.

எட்டிப் பார்த்தாள்.

எதிர் பிளாட் பென்மணி. முன்பு வந்தபோது பார்த் திருக்கிறாள்.

''வாங்க''—என்றபடி கதவைத் திறக்க, அவர் உள்ளே வந்தார்.

''நல்லா இருக்கிங்களா?''

''இருக்கேன்''

''நேத்து ராத்திரி வந்திங்க போல இருக்கு... ரயில்லே வந்தது களைப்பா இருக்கும். தொந்தரவு பண்ண வேணாம்னுதான் காலைல வரலை...''

பேசியவர், வீட்டை ஒரு பார்வை பார்த்தார்.

''இப்பத்தான் வீடு வீடாய் இருக்கு-இனிமே உஷாக்கு கஷ்டம் இல்லே... நாலு மாசமா வகையா ஆள் யாரும் இல்லாம ரொம்ப திண்டாடிட்டா போங்க... வீடு, சமையல், குழந்தை, ஆபீஸ் வேலைனு நாறிப் போயிட்டா. குழந்தைக்கு தூக்க மருந்து, பிராந்தி கொடுத்திட்டு வெளிலே சுத்தப் போயிடறதா இந்த ஊர் ஆயாக்களைப் பத்தி கதை கதையா கேள்விப்படறதால, நம்பி குழந்தைய விட முடியலை...அவ அம்மாவும் உடம்பு சரியில்லாம படுத்திட்டாங்களா, பாவம் உஷா, தவிச்சி போயிட்டா. 'எங்க மாமியார வரவழிச்சா என்ன?'னு அவ யோசிச்சப்ப 'முதல்ல அதச் செய்'னு நாதான் அடிச்சுச் சொன்னேன்...''

வந்தவர் நீளமாய் பேச, வடிவாம்பாளுள் என்னமோ மளுக்கென்று முறிந்தது.

அம்மாவைப் பிரிந்து இருப்பதும், அம்மா தனியாய் கஷ்டப்படுவதும் நிஜக் காரணம் இல்லையா?

இப்போது இவர்களுக்கு ஒரு ஆயா, நம்பிக்கையான ஆயா தேவைப்படுவதால்தான் என் ஞாபகம் வந்ததா?

கண்களில் ஊறிய ஜலத்தை அவசரமாய் அடக்கி எச்சிலைக் கூட்டி விழுங்கி, ''உட்காருங்க, நின்னுகிட்டே பேசறீங்களே...'' என்றபோது வடிவாம்பாளின் குரல் ரொம்ப தழுதழுத்திருந்தது.

# அன்பே சிவம்

சங்கர் மஹா கோபத்தில் இப்படி அப்படி என்று சொல்ல முடியாத கோபத்தில் இருந்தான்.

பின்னே?

ஐந்தரை வரை இண்டர்வ்யூவுக்காக ஆபீஸில் காத்திருந்துவிட்டு ரயில் போய்விடுமே என்ற பதைப்பில் ஓட்டமாய் சித்தி வீட்டுக்கு வந்து, அவள் நீட்டிய காப்பியை நின்று நிதானித்து குடிக்க அவகாசம் இல்லாமல் ஒரு வார்த்தை சாவகாசமாகப் போய் வருகிறேன் என்று சொல்ல போது இல்லாமல், ஏர்பேகில் அவள் கொடுத்த இட்லி பொட்டலத்தைத் திணித்துக்கொண்டு, ஆட்டோ பிடித்து, அவசரத்துடன் டிக்கெட் வாங்கி, ஒரு பத்திரிகை வாங்க நேரம் இல்லாமல், புறப்படத் தயாராக இருந்த பாண்டிச்சேரி எக்ஸ்ப்ரஸில் தாவ் ஏறி, அப்பாடா என்று பெருமூச்சு விட்டு, ஓடிவந்த களைப்புத் தீர ஒரு சிகரெட் பிடித்து, எழுந்து நின்று சோம்பல் முறிப்பதற்குள், தாம்பரத்தைத் தாண்டின கையோடு வண்டலூருக்கும், கூடுவாஞ்சேரிக்கும் நடுவில் ஒரு அத்வான காட்டில் திடுமென்று நின்ற வண்டி, ஒரு மணி நேரமாகியும் கிளம்பவில்லை என்றால் சிரிப்பா வரும்?

வண்டி நின்றபோது வெளிச்சம் இருந்து காற்று ஜிலுஜிலுத்ததால் மின்சாரம் தடைபட்டு மின்விசிறி நின்றது. அத்தனை உறுத்தலில்லை; ஆனால் இந்த ஒரு மணி

நேரத்தில் இருட்டு அரவணைக்கத் தொடங்கி, கொசுக்கள் ஸ்ருதி சேர்க்க ஆரம்பித்து, காற்று சுத்தமாய் நின்று போனதும்தான் நிலைமை தாங்கமுடியாமல் போயிற்று.

வண்டி ஏன் நின்றுவிட்டது என்று பார்த்தவர்களை விசாரித்தாகிவிட்டது

''ஸிக்னல் கிடைக்கலையாம்.''

''துண்டவாளத்துலே ஏதோ கோளாறாம்''

''முன்னால ஒரு குட்ஸ் ட்ரெயின் டீரெயில் ஆயிருக்காம்''

''ப்ரேக் சரியா இல்லையாம்''

என்னென்னவோ ஊகங்கள். தங்களுக்குத்தான் தெரிந்த மாதிரி தனலக்குத் தலை காரணங்கள்...

என்ஜின் வரையோ, இல்லை கார்ட் பெட்டி வரையோ நடந்துபோனால் ட்ரைவரிடம், கார்டிடம் என்ன சமாசாரம் என்று கேட்டு வரலாம்.

ஆனால், இந்த சகதியில் யார் அவ்வளவு தூரம் நடப்பது?

முதல் நாள் பெய்த மழையில் சொத சொதத்திருந்த தரையில் கால் வைக்கவே பிடிக்காமல் போக, பெட்டியி லிருந்து இறங்கி நின்றுகொண்டவன், திட்டாக இருந்த புல்வெளியில் பத்தடி திரும்பித் திரும்பி நடந்தான். நாலு சிகிரெட்டுகளைப் புகைத்துத் தீர்த்தான்.

ரொம்ப எரிச்சலாக இருந்தது. என்ன நாடு, என்ன மக்கள் என்று நித்தமும் ஆயிரமாயிரம் முறைசள் சலித்துக் கொள்வதைப் போல இப்போதும் சலித்தான்.



கூடவே, 'என்ன ரயில்வே என்ன நிர்வாகம்' என்று மொண மொணவென்று முனகி, ஆசை தீர நெஞ்சுக்குள் தலைகாட்டின அத்தனை சமாசாரங்களையும் திட்டி னான்.

சங்கர் ஒரு எம் ஏ. பட்டதாரி, படிப்பை முடித்த ஆறு மாசமாய் தீவிரமாய் வேலை வேட்டையில் ஈடுபட்டும் பலன் எதுவும் கிட்டாத பட்டதாரி. சரியான இந்தக் கால இளவட்டம். எதிலும் அவசரம், நிதானம் இன்மை, ஆத்திரம், சலிப்பு...

அப்பாவுக்கு விழுப்புரத்தில் வேலை அம்மா, இரண்டு தங்கைகள். வேலை கிடைக்கவில்லை என்று அவன் கோபப் படும்போதெல்லாம் அப்பா 'அட விவரம் கெட்ட பிள்ளை யே' என்கிற தினுசில் சிரிப்பார். பின், ' மெதுவா கிடைக் கட்டும் சங்கர். ஆறு மாசம்தானே ஆறது... அதுக்குள்ள அவசரப்பட்டா எப்படி? நல்ல வேலையா வேணும்னு ஆசை இருக்கு, சுமாரானதை ஒத்துக்க ரெடி இல்லே... அப்ப வெயிட் பண்ணித்தானே ஆகணும்பா? நீ உடனே வேலைக்குப் போகணுங்கற முடை, இப்ப நமக்கு இல்லே. மனசுக்கு பிடிச்சது அமையற வரைக்கும் எங்கூளோட ரிலாக்ஸ்டா இரேன்... வேலை கிடைச்சா எந்த ஊருக்கு போயி எங்கே ஸெட்டில் ஆகப்போறியோ! அது வரைக்கும் ரிலாக்ஸ்டா லைஃபை ஏத்துக்க கத்துக்கோ சங்கர்...''

அதுசரி; அப்பாவுக்கு என்ன, சின்ன சிரிப்போடு ரிலாக்ஸ் என்கிறார். என்னைவிட தகுதி குறைவான பசங்க ளெல்லாம் மஹா மஹா பெரிய வேலையில் சிபாரிசோடு உட்கார்ந்துவிட்டு, காரும், வீடுமாய் இருக்கும்போது எங்கேயிருந்து நான் ரிலாக்ஸ் பண்ணுவது?

இப்போதுகூட ஒருநேர்முக தேர்வுக்குத்தான் போய் விட்டு அவன் திரும்பிக்கொண்டிருக்கிறான்.

மதியம் மூன்று மணிக்கு வரச் சொல்லி இருந்ததால், காலை வண்டியில் புறப்பட்டு வந்தான்.

அவனையும் சேர்த்து வந்திருந்தவர்கள் மொத்தம் பதினோரு பேர்கள்.

அதில் விளக்கெண்ணெய் மூஞ்சியும் அழித்தால் சாதாரண சைசில் இரண்டுபேர் பண்ணலாம் போல இருந்த ஒருவன் 'நான் ஜி.எம் மோட அக்கா மகன்' என்று பெருமை பீத்திக் கொண்டதுமே சங்கருக்கு இந்த இண்டர்வ்யூ ஒரு ஐ வாஷுக்குத்தான் என்பது தெளிவானது.

பல்லைக் கடித்துக்கொண்டு வந்துவிட்டோமே என்ற நினைப்போடு உட்கார்ந்திருந்தவனுக்கு மணி ஐந்தரை ஆனதும் 'இனியும் இருந்தால் வேலையோடு ட்ரெயினை யும் கோட்டை விடுவது நிச்சயம்' என்று தோன்ற 'நீயும் வேண்டாம், உன் இண்டர்வ்யூவும் வேண்டாம்' என்று புறக்கணித்துவிட்டு வந்துவிட்டான்.

அந்த நேர்முகத்தேர்வு அதிகாரியும், அந்த விளக்கெண் ணெய் மூஞ்சியும் நிழலாகக் கண்முன் தோன்ற, பிடித்துக் கொண்டிருந்த சிகரெட்டைக் காலடியில் போட்டு அழுத்த மாக சங்கர் நசுக்கினான்.

''ச்சே... என்ன நாடு, என்ன மனிதர்கள்...

எதிலும் சிபாரிசு.

திறமைக்கு மதிப்பே இல்லாத நாடு...

சுதந்திரம் கிடைத்து என்ன பிரயோஜனம்?

எல்லாவற்றிலும் ஒரு அசமந்தத்தனம் பொறுப் பின்மை, நான் நன்றாக இருந்தா போதும், அடுத்தவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்ற சுயநல மனப் பான்மை...



ச்சே...

மதியத்திலிருந்தே முசுமுசுவென்று குமுறிக் கொண் டிருந்த எரிச்சலுடன் இந்த ரயில் சமாசாரமும் சேர்ந்து கொள்ள ஆத்திரம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே போனதில் என்ன செய்வது என்று புரியாத அவஸ்தையுடன் தவித்தவன் இருட்டத் துவங்கி, கொசுக் கள் காதுக்கருகில் ராகம் பாட ஆரம்பித்ததும், திரும்ப பெட்டிக்குள் ஏறினான்.

உள்ளே அவ்வளவாய் கூட்டம் இல்லை.

மொத்த பெட்டியிலும் பத்துபேர் இருந்தால் அதிகம்.

மங்கிய வெளிச்சத்தில் கண்களை அலைய விட்டபோது சங்கரின் பார்வை அவள்மேல் விழுந்தது.

வண்டி நின்று கீழே இறங்கும்போதே அவளை அவன் பார்த்துவிட்டான்.

வெள்ளைக்காரி

புடைவை, ரவிக்கை, சின்ன கொண்டையில் பாந்த மாக இருந்தாள்.

அத்தனை பேர்களும் புழுக்கம் தாங்காமல் இறங்கி நின்ற பிறகும் இருந்த இடத்தைவிட்டு அசையாமல் அவள் இருந்ததையும் சங்கர் கவனித்திருந்தான்.

இப்போது கதவில் சாய்ந்து சிகரெட் பிடித்தபடி அவளை நன்றாகப் பார்க்கையில், அவள் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருப்பது புரிந்தது.

தூங்குகிறாளா?

இந்த புழுக்கத்திலா?

இது இவளுக்கு எப்படி சாத்தியமாகிறது?

அப்படியே நின்று அவளைக் கவனித்தவன், தன் இருக்கைக்குப் போகலாமா என்று யோசித்த நிமிஷத்தில் 'பாங்' என்று பெரிசாய் குரல் கொடுத்து, தான் புறப்படத் தயார் என்பதை என்ஜின் சொல்லியது.

இறங்கி நின்றவர்கள் அவசரத்துடன் ஏறிக்கொள்ள, சலித்து அமர்ந்திருந்தவர் 'அம்மாடி' என்ற நிம்மதி பெருமூச்சு விட வண்டி கிளம்பியது.

வேகம் எடுத்ததும் மின் விளக்குகளும், விசிறிகளும் வேலை செய்யத் தொடங்கின.

வெளிச்சத்தில் அந்தப் பெண் ரொம்ப நன்றாகவே இருந்தாள்.

அந்தக் கறுப்புத் தலைமுடியும், சிவப்புப் பொட்டும், காவி கலர் புடைவையும் அவளுடைய நிறத்தில் அழகாக எடுபட்டன. இவளிடம் பேச்சு கொடுத்தால் என்ன?

பேசுவாளோ?

கண்களைத் திறந்து ஜன்னலுக்கு வெளியில் தெரிந்த இருட்டை பராக்கு பார்த்தவளின் எதிரில் சென்று நின்று கொண்டான். ''எக்ஸ்க்யூஸ் மி; டு யு மைண்ட் இஃப் ஐ ஸிட் ஹியர்'' என்றான்.

அவள் திரும்பினாள்.

இவனை ஏறிட்டு மெல்ல இல்லை என்று தலை அசைத்தாள்.

உட்கார்ந்தான்.

''ரொம்பப் புழுக்கமாய் இருந்தது. எப்படி நீங்கள் வண்டிக்குள்ளேயே உட்கார்ந்திருந்தீர்களோ? இப்போது தேவலை, இல்லை?''

அவள் பதில் சொல்லாமல் சிரித்தாள்.

''எங்கே பாண்டிச்சேரிக்கா?''



''ம்ம்...''

''அரவிந்தர் ஆஸ்ரமத்துக்கா?''

''ம்ம்...''

மேலே என்ன பேசுவது என்று புரியாமல் விழித்து விட்டு ''ஐம்' சங்கர்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

அவள் அவனை ஊன்றிப் பார்த்தாள். பிறகு ''சம்... நல்லதை, கரன்—செய்பவன், இல்லையா?'' என்றாள் புன்னகையுடன்.

அந்தக் குரல் ரொம்ப மென்மையாக இருந்தது. பட்டுப் போல வழவழவென்று இருந்தது.

அட! இவளுக்கு சமஸ்க்ருதம் தெரியுமா என்ன? என் பேருக்கு இத்தனை கச்சிதமாக அர்த்தத்தை சொல்கிறாளே!

தன் வியப்பைத் தெரிவிக்கும் வகையில் சங்கர் சன்னமாக விஸில் அடித்து கண்களை விரித்தான்.

''என் பேர் ஸிண்டி. நீங்களும் பாண்டிச்சேரிக்குத் தான் போகிறீர்களா?''

''இல்லை... நான் என் பெற்றோருடன் விழுப்புரத்தில் இருக்கிறேன். விழுப்புரத்தைத் தாண்டிதான் நீங்கள் பாண்டிச்சேரிக்குப் போக வேண்டும்...''

''அப்பா, அம்மாவோடு சேர்ந்துதான் வசிக்கிறீர்களா?''

சங்கர் கொஞ்சம் சங்கடப்பட்டான். என்ன நினைத்துக்கொண்டு இவள் இந்தக் கேள்வியைக் கேட்கிறாள்?

ஏண்டா தடியா, இரண்டு மாடு வயசு இருக்கும் போலிருக்கிறது, இன்னுமா பெற்றவரோடு இருக்கிறாய்?

என்னைப் பார், உன்னைவிட சின்னவள், தனிக்காட்டு ராணியாக வாழ்கிறேன்... என்று கேலி பண்ணுகிறானோ?

''ம்ம்...வந்து எம்.ஏ. இப்போதுதான் முடித்தேன்... வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்...''

சங்கரின் அவஸ்தை புரியாத மாதிரி விண்டி தொடர்ந்து அவன் குடும்பத்தைப் பற்றியே நிறைய கேள்விகள் கேட்டாள்.

அப்பா, அம்மா, தங்கைகளைப் பற்றி கூறினபோதும், வேலை கிடைத்துவிட்டாலும் உடனே மணம் செய்து கொள்ளும் உத்தேசம் இல்லை. தங்கைகளுக்குக் கல்யாணம் செய்வித்த பிறகே தன் சொந்த வாழ்க்கையைப் பற்றி யோசிக்க இயலும் என்பதைச் சொன்னபோது அத்தனையும் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டாள். நடு நடுவில் 'தட்ஸ் நைஸ்', 'தட்ஸ் க்ரேட்' என்று கண்ணசுல கூறினாள்.

அவள் இந்தியாவுக்கு வருவது இதுதான் முதல் தடவையாம். வடஇந்தியாவில் சில மாசங்கள் இருந்தாளாம். இப்போது தெற்கே வந்து நாலு நாட்கள் ஆகின்றனவாம். சென்னை, காஞ்சிபுரம் பார்த்துவிட்டு பாண்டிச்சேரிக்கு சென்றுகொண்டிருக்கிறாளாம்; சொன்னாள்.

மணி ஆகிவிட்டதால் சங்கர் எழுந்து சென்று ஏர் பேகை எடுத்து வந்து. சித்தி கொடுத்த இட்லி பொட்டலத்தைப் பிரித்து அவளிடம் நீட்டினான்.

''நன்றி; ஆனால், வேண்டாம்—உங்கள் சாப்பாடு எனக்கு இன்னும் பழகவில்லை...சென்னைக்கு வந்த அன்று ஒரு ஹோட்டலில் இட்லி சாப்பிட்டேன். மறுநாளிலிருந்து வயிற்றுப்போக்குத் தொடங்கிவிட்டது. நீங்கள் சாப்பிடுங்கள். எனக்கு பிஸ்கட் இருக்கிறது''



புன்சிரிப்பு மாறாமல் அவள் பேசினாலும்கூட, சங்கருக்கு எப்படியோ இருந்தது.

''இது எங்கள் நாட்டுக்கு ஒரு பெரிய சாபக்கேடு விண்டி... எதிலும் சுகாதாரம் கிடையாது. சாப்பாட்டில், சூழ்நிலையை சுப்புரவாக வைத்துக்கொள்வதில் என்று எதிலும் சுத்தம் கிடையாது மஹா மோசம். வெளிநாட்டிலிருந்து யார் வந்தாலும மறுநாளே அவஸ்தைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள் ஏழை நாடாயிருந்தால் என்ன? சுத்தமாக இருக்கக் கற்றுக்கொள்வது பெரிய விஷயமா? பேசச் சொல்லுங்கள், பிரமாதமாய் பேசுவோம்... காரியத்தில் ஒன்றும் இல்லை... எல்லா விஷயங்களிலும் நாங்கள் பூஜ்யம்தான். பேச்சைக் குறைத்துக்கொண்டு காரியத்தில் என்று முன்னேறப் போகிறோமோ! ''ஹூம்! எங்கள் நாடு உருப்படும் என்று எனக்குத் தோன்றவில்லை... ஸாரி.

முகத்தைச் சுளித்துக்கொண்டு பேசியவனை 'விண்டி ஏறிட்டாள்.

''சுத்தம், சுகாதாரம் . இந்நாட்டு மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நிஜமான அன்பைக் கொடுக்கத் தெரிகிறதே, இது எத்தனை பெரிய விஷயம்? பந்த பாசங்களை மறந்துவிடாமல் மனுஷர்களாக வாழத் தெரிகிறதே, இது எத்தனை பெரிய விஷயம்? எல்லாவற்றிலும் முன்னேறி இருக்கும் எங்கள் தாய்நாட்டை விட்டுவிட்டு, போலித்தன்மை இல்லாத உங்கள் விவேகம், அன்பால் என்போன்ற ஆயிரக்கணக்கானவர்களை இங்கு வரும்படி கவர்கிறீர்களே, இது எத்தனை பெரிய விஷயம் ...ம்...?

நிறுத்தி நிதானமாக விண்டி பேச சங்கர் பிரமித்துப் போனான்.

ஹோ!

ச்சே! என்ன நாடு, என்ன மக்கள் - என்று நாம் சதா கரித்துக் கொட்டும் இந்த நாடு இந்த மக்கள்மேல் இவளுக்கு இத்தனை பெருமையா?

''அன்பே சிவம் என்று சொல்வது இந்த நாடுதானே? புத்தர், ராமன், ராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தி எல்லாரும் அவதரித்தது இந்த நாட்டில்தானே? ஆன்மாவைப் பற்றியும், ஸ்திதப்ரக்ஞன் பற்றியும் விளக்கமாக புரியும் விதத்தில் விளக்குவது உங்கள் கீதைதானே? வாழ்வின் அர்த்தம் என்ன, மனிதனாகப் பிறந்தவனின் கடமைகள் என்னென்ன என்று சொல்லி வாழ வழி காட்டுவது உங்கள் வேதங்கள்தானே? சொல்லுங்கள் சங்கர் இந்த இந்தியாவையா உருப்படாத நாடு என்று சொல்கிறீர்கள்? கடவுளே... நீங்கள் விளையாட்டாகச் சொல்கிறீர்கள், அப்படித்தானே?''

அசட்டுச் சிரிப்புடன் சங்கர் சமாளிக்க முயல, அடுத்து வந்த இரண்டு மணி நேரங்களும் ஸிண்டி நிறைய பேசினாள். தன்னைப்பற்றி, தன் நாட்டைப் பற்றிச் சொன்னாள். பந்த பாசத்துக்கு அர்த்தம் இல்லாமல் வாழும் பல குடும்பங்களில் தன்னுடையதும் ஒன்று என்று சொன்னாள். அழுத்தமான பிடிப்பு இல்லாமல் வாழ்க்கை நடத்தும் பெற்றோர்களைப் புரிந்துகொள்ள முடியாமல் அவஸ்தைப்பட்டபோது ஹரே ராமா, ஹரே க்ருஷ்ணாவின் தொடர்பு கிடைத்தது என்றும், அதன்மூலம் இந்திய இதிகாசங்களைப் படிக்க நேர்ந்ததையும் கூறி, ஸ்ரீராமனின் கல்யாண குணங்களால் ஈர்க்கப்பட்டு, இந்தியாவுக்கு வந்து ரிஷிகேசத்தில் ஒரு ஆஸ்ரமத்தில் யோகா, தியானம் பயின்றதையும் தற்சமயம் மனசு லேசாக சந்தோஷமாக இருப்பதையும் பற்றி நீளமாகச் சொன்னாள்.

கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த சங்கருக்கு திடுமென்று ரொம்ப அவமானமாக இருந்தது.



'நம்ப பூமி புண்ணிய பூமிடா, என்று அம்மா அடிக்கடி கண்கள் பிரகாசிக்கச் சொல்லுவது...

''இது ஸனாதந தர்மம் தழைக்கிற மண்ணுடா... இதுலே பிறக்கறதுக்கும், வாழறதுக்கும் கொடுத்து வைச்சிருக்கனும்'' என்று அப்பா இவன் தளர்ந்திருக்கும் போதெல்லாம் தட்டிக் கொடுத்துப் பேசுவது...

இன்னும் இங்கேயும் அங்கேயும் ஓயாமல் நம் நாட்டுப் பெரியவர்கள் கசிந்து காதலாகிக் கண்ணீர் மல்கக் கூறுவது எல்லாவற்றுக்கும் அப்போது விளங்காத அர்த்தம், இப்போது இந்த ஸிண்டி பேசப் பேச மண்டையைப் பிளந்துகொண்டு உள்ளே பதிந்து புரிகிறமாதிரி இருந்தது.

விழுப்புரம் வந்துவிட்டது.

வண்டியில் ஏறும்போது இருந்த ஆத்திரம் இல்லை, கோபம் இல்லை, எரிச்சல் இல்லை...

ஸிண்டி சொல்லும் தினுசில் உள்ளுக்குள் என்னமோ பூப்பூவாய் பூத்துவிட்டமாதிரி ரம்யமாய் இருந்தது.

'விழுப்புரம் வந்தால் அவசியம் வீட்டுக்கு வாருங்கள்' என்று சொல்லி விலாசம் தந்துவிட்டு வீட்டுக்கு வந்தான்.

அப்பாவும், அம்மாவும் வாசல்படியிலேயே காத்து நின்று 'ஏம்பா இத்தனை நாழி?' என்று கவலையுடன் விசாரித்தபோது, ஸிண்டி 'உங்கள் நாட்டில் நிஜமான பந்தபாசம் இன்னும் உயிரோடு இருக்கிறதே, இது பெரிசில்லையா?' என்று கேட்டது ஞாபகத்துக்கு வந்தது.

சாப்பிட்டுக்கொண்டே, இண்டர்வ்யூக்கு காத்திராமல் வந்துவிட்டதைச் சொன்னான் ரயில் நின்று ஆத்திரப்பட்டதைச் சொன்னான். ஸிண்டியை சந்தித்ததை, அவள் பேச்சுக்களைச் சொன்னான். அப்புறம் ''வயசாச்சு,

அப்பப்ப கீதையைப் படிக்கப் பழகிக்கோ; வாழ்க்கைக்கு ரொம்ப உதவும்னு சொல்வேள், நா கேட்டதில்லை. ஆனா, நாளையிலேந்து படிக்கப்போறேன்ப்பா'' என்றான்.

அப்பா பதில் சொல்லவில்லை. புரிந்தால் சந்தோஷம் என்கிற திருப்தியோடு மெலிசாகச் சிரித்தார்,

ராத்திரி சங்கர் நிம்மதியாகத் தூங்கினான்.

காலை ஆறு மணிக்கு அப்பா அவனை எழுப்பினார்.

முன்னால நின்றவரின் முகத்தில் வேதனை.

என்ன விஷயம்?

பேப்பரை அவனிடம் நீட்டினார்.

மூனறாவது பக்கத்தில் படத்தோடு ஒரு செய்தி வெளியாகி இருந்தது.

''நேற்று இரவு பாண்டிச்சேரி எக்ஸ்பிரஸில் ஒரு வெளிநாட்டுப் பெண் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். பிரேத பரிசோதனையிலிருந்து இவர் கற்பழித்து, கொலை செய்யப்பட்டிருப்பது புரிந்தது. பாஸ்போர்ட் இவர் அமெரிக்காவைச் சேர்ந்த ஸிண்டி தாம்ஸன் என்பதைத் தெரிவிக்கிறது. போலீஸார் தீவிரமாக புலன் விசாரிக்கின்றனர்...''

ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் சங்கர் செய்தியைப் படித்தான்.

இல்லை... இது பொய்ச் செய்தி; நிஜமில்லை.

மனசு முரண்டியது...

அயோக்கியன் ஒருவனால் கற்பும், பின் உயிரும் பறிக்கப்பட்ட நிமிஷத்தில் ஸிண்டி என்ன நினைத்திருப்பாள் என்ற எண்ணம் திடுமென்று பளபளக்க, சங்கருள் இப்படி அப்படி என்று விவரிக்க முடியாத கோபமும், கூடவே கொஞ்சம் அழுகையும் முட்டிக் கொண்டு கொப்புளிக்கத் தொடங்கின.

1-8100
354768

# வேலை

சுகுணா கண் விழிக்கும்போது மணி ஆறரை என்றது.

ஒருவித அவசரத்துடன் எழுந்து உட்கார்ந்தவளுக்கு ஒரு பக்கமாய் தலை வலிப்பது புரிந்தது.

ராத்திரி ஒரு மணிவரையில் கண் விழித்துப் படித்தது காரணமா?

அவளிடம் உள்ள கெட்ட பழக்கம் இது என்றுகூட சொல்லலாம்; ஒரு நாவலை கையில் எடுத்துவிட்டால் அதை முடித்துவிட்டுதான் கீழே வைப்பாள்; அப்படி ஒரு ஸ்வபாவம்...

ம்ஷு!... இப்படி மண்டையைக் குடைந்தால் எந்த வேலையை ஒழுங்காகச் செய்ய முடியும்?

கட்டிலை விட்டு இறங்கி பிரஷ்ஷுடன் பாத்ரூமை நோக்கி நடந்தபோது, மாமியார் சம்பூர்ணம் குளித்துவிட்டு சமையல் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருப்பது புரிந்தது.

பல் தேய்த்து, முகங்கழுவினபின் சமையல் கட்டில் நுழைந்தாள்.

'நேத்து ஆனாலும் வெயில் அதிகம்... பஸ்ஸிலே இடிபட்டு அல்லாடிகிட்டு போனதுலே ராத்திரிலேந்து தாங்க முடியாம தலைவலி...''

முனகிக்கொண்டே மாமியார் காய்ச்சி வைத்திருந்த பாலில் தனக்கு காபி கலந்து கொண்டவள், அவரிடமிருந்து பதில் ஏதும் வராததால் தொடர்ந்து பேசினாள்.

''மாத்திரை போட்டுகிட்டும் வலி குறையலை தைலம் தடவிகிட்டு, படுக்க கொள்ளாம ரொம்ப நேரத்துக்கு அவஸ்தைப்பட்டேனா, இப்ப காலைல எழுந்திருக்க முடியாதபடி அசதி ஆளை அமுக்குது...''

ராத்திரி விடிய விடிய எரிந்த விளக்கை மாமியார் கவனித்திருந்தாலும், அறைக்கதவு சாற்றி இருந்ததால் தான் படித்துக் கொண்ருந்ததை அவர் அறிந்திருக்க முடியாது என்ற நம்பிக்கை சுகுணாவுக்கு.

காபி டம்ளரைக் கழுவி கவிழ்த்தாள்.

''என்ன சமையல் அத்தே? நாவேணா காய் நறுக்கித் தரவா?''—

குளிக்காமல் எதையும் தொட மாமியார் அனுமதிக்க மாட்டார் என்பது சுகுணாவுக்குத் தெரியும்.

''தலைவலினு சொல்றே... வென்னீர் தயாரா இருக்கு போய் குளிச்சிட்டு வா...''

ரொம்ப சமர்த்தாக 'சரி அத்தே' என்று சொல்லிவிட்டு சுகுணா தன் அறைக்கு வந்தாள்.

விவிதபாரதியை ட்யூன் பண்ணியபின் அலமாரியைத் திறந்தாள்.

இன்றைக்கு என்ன புடைவை?

சிவப்பு கோட்டா?

வெள்ளை ஆர்கண்டி?

வெள்ளையில் பச்சை பிரிண்ட் செய்த சந்தேரி காட்டன்?



அடுக்கி இருந்த புடைவைகளிலிருந்து உடுத்தி, நாளானது என்று நினைத்த ஆர்கண்டியை பொருத்த மான ரவிக்கையுடன் வெளியில் எடுத்தாள்.

லாக்கரிலிருந்து முத்துத்தோடு மோதிரம், வளையை செட்டாக எடுத்து வைத்துவிட்டு, போட்டுக்கொண் டிருந்த தங்க நகைகளை கழற்றி உள்ளே வைத்தாள்.

சுகுணாவைப் போலவே, அவள் உடை, அலங்காரம் கூட அலுவலகத்தில் ஏக பிரபலமான விஷயம்.

''எத்தனை புடவை வைச்சிருக்கே சுகுணா! ஒரு புட வையை இன்னிக்கு கட்டினா திரும்ப இரண்டு மாசத்துக்கு அதைக் கண்ணுலே காட்டறதில்லயே!''—

''புடவையை நீட்டா உடுத்தறதுகூட பெரிசில்லே, சாயங்காலம் வரைக்கும் துளி கசங்காம காலைல உடுத்தின மாதிரியே வைச்சிருக்கியே... ஹவ் ஈஸ் இட் பாஸிபிள்? ம்...''

''கொடுத்து வைச்சவம்மா நீ... புருஷன், மனைவி இரண்டு பேரும் சம்பாதிக்கிறீங்க... வீட்டுப் பொறுப்பை மாமியார் பாத்துக்கிறார்... எந்த கவலையும் இல்லே... வாங்கற சம்பளத்துலே புடவையும், நகையுமா வாங்கி அடுக்க முடியுது... ஹூம்...''

தலைக்குத் தலை கூட வேலை பார்க்கும் சிநேகிதிகள் ஆற்றாமையுடன் பாராட்டும்போது சுகுணாவுக்கு பெருமையாக இருக்கும்...

சுகுணாவுக்கு அரசாங்க அலுவலகம் ஒன்றில் வேலை. மாசம் ஆயிரத்து நூறு ரூபாய் சம்பளம் சமுத்திரம் மாதிரி ஆபீஸ். எக்கச்சக்கமாய் நண்பர்கள்.

கல்யாணமாகி, இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகிவிட் டாலும், 'வேண்டாம்' என்று இருப்பதால் குழந்தை குட்டி எதுவும் கிடையாது, நிம்மதி.

சதா சர்வகாலம் மூக்கொழுக நான்றுகொண்டு, வைத்த சாமான் வைத்த இடத்தில் இருக்கவொட்டாமல் ஹதம் பண்ணிக்கொண்டு, ஆபீஸுக்குப் புறப்படும் நாழிகையில், 'அம்மா' என்று புடவையை இறுகப் பற்றி காக்கி, அழுதுகொண்டு...

ஹோ... டிஸ்கஸ்டிங்...

இந்த சங்கடங்களெல்லாம் இல்லாமல் இருப்பது எத்தனை பெரிய விஷயம் என்று அடிக்கடி நினைத்துக் கொள்வது போல இப்போதும் எண்ணியபடியே சுகுணா குளித்தாள். அக்கறையுடன் அலங்கரித்துக் கொண்டாள். சாப்பிட வந்து உட்கார்ந்தாள்.

''தலைவலி தேவலியா சுகுணா?''

''ம்...''

''ரகுபதி என்னிக்கு டூர்லேந்து வர்றானு தெரிஞ்சிதா? போய் பத்து நாளாவுதே... அவனோட ஆபீஸுக்கு போன் பண்ணி கேட்டியா?''

''வேலை முடிஞ்சா தானா வரமாட்டாரா? உங்க பிள்ளை என்ன சின்ன பாப்பாவா? ம்? எதுக்கு கேக்க றீங்க?''

''இல்லே... வந்து...'

என்ன என்பது போல சுகுணா நிமிர்ந்தாள்.

''கஸ்தூரியோட மாமனாருக்கு உடம்பு முடியலை யாம்... போய் பார்த்துட்டு வந்தா தேவலை. ரகுபதி இருந்தா போவான். என்னால் தனியா பஸ்ஸிலே போக முடியாது. நீ வேணா சாயங்காலமா ஆபீஸ்லேந்து வர்றப்ப பாத்திட்டு வறியா? இல்லேன்னா நாளைக்கு தப்பா போயிடும்...''

சுகுணா முகத்தைச் சுளித்துக்கொண்டாள். கஸ்தூரி அவளுடைய நாத்தி... உள்ளூரில்தான் வாசம். பெரிய



குடும்பம். மாமனாரில் தொடங்கி கடைக்குட்டி கொழுந்தன் வரை மொத்தம் பத்துக்கும் மேற்பட்ட உருப் படிகள். கத்தலும், ஊழலுமாய் வீடு எப்போதும் அமர்க் களப்படும். போனால் நண்டும், சிண்டும் மடியில் ஏறி உட் கார்ந்து துவம்சம் பண்ணும்

''ம்ம்...பாக்கிறேன். ஆபீஸ்லே வேலை எக்கச்சக்கம்... ஒழியுமோ என்னவோ...''

கை கழுவிக்கொண்டு எழுந்தாள்.

ஆபீஸுக்காகக் காத்து நின்றபோது அடுத்த தெரு மாலினிவந்தாள்.

''ஹாய்—யு லுக் ஸ்மார்ட் டுடே.''

''தாங்க்யூ.''

''கையிலே என்ன புஸ்தகம்?''

''டெனிஸ் ராபின்ஸ்...''

''நல்லா இருக்கா?''

''வழக்கம்போல லைட் ரொமான்ஸ்!''

''பரவாயில்லேப்பா நீ... தினமும் ஒரு புக் எப்படி யாவது படிச்சிடறே...லக்கி...''

பஸ் வந்தது. ஏறிக்கொண்டாள்.

கூட்டத்தில் இங்கும் அங்குமாய் சில கண்கள் தன்மேல் மேய்வதை உணர்ந்தாள். சந்தோஷமாக இருந்தது.

இவளுக்கு முன்னால் இருந்த பெண் 'லீவைஸ்' ஜீன்ஸ் அணிந்திருந்தாள்,

'லீவைஸ்'

சிங்கப்பூரிலேயே நூறு டாலர்களாம்! அடேயப்பா... அத்தனை காசு இருக்க இதில் என்ன இருக்கிறது?

ஜீன்ஸும், ப்ளௌவுஸும் போட்டுக்கொண்டால் தனக்கு எப்படி இருக்கும் என்று ஒரு நிமிஷம் எண்ணிப் பார்த்தாள்.

ம்ம்...ஃபிகர் கச்சிதமாக இருப்பதற்கு நன்றாகத்தான் இருக்கும்...

ஆனால் யார் விடுவார்கள்?

ஸ்லீவ்லெஸ் போட்டுக் கொள்வதற்கும், தோளோடு முடியை வெட்டிக் கொள்வதற்குமே ரகுவிடம் என்ன கெஞ்சு கெஞ்சவேண்டி இருந்தது!

ஆபீஸுக்கு எதிரில் பஸ் நிற்க, இறங்கி நடந்தாள்.

''ஹாய்...''

''ஹாய்...''

''குட்மார்னிங்.''

''வெரி குட்மார்னிங்.''

விசிலடித்த 'வால்' என்ற சுரேஷுக்கு பதில் சொல்லாமல் சிரித்தாள்.

''லேடி இன் வொய்ட்...பராக்.''

மாது கட்டியம் கூற டிபார்ட்மெண்டில் நுழைந்தாள்.

ரிஜிஸ்டரில் கையெழுத்து போட்டுவிட்டு இருக்கைக்கு வந்தாள்.

சுந்தரம், மோனி, நாணா என்னமோ டிஸ்கஷனில் ஈடுபட்டிருந்தனர்.

''ஹேய்,—என்ன சண்டை, காலை நேரத்துலே?''

''சண்டை இல்லே சுகுணா—ஜாஸ் படம் பத்தி டிஸ்கஷன்.,'

''ஜாஸ் படமா? மைகாட்! மஹா பழைய படம் ஆச்சே! இப்ப அதுக்கு என்ன?''—



''நேத்துதான் நாணா பார்த்தானாம்—புக் அளவு நல்லா இல்லேனு சொல்றான். நா புக்கைவிட நல்லா இருக்குனு சொல்றேன்...''

''அப்கோர்ஸ், புக் ஈஸ் பெட்டர்.''

''அ! ஒண்ணும் இல்லே... படம்தான் நல்லா இருக்கு''

கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் சேர அடுத்த பத்து நிமிஷங்களுக்கு இரண்டு குழுக்களாகப் பிரிந்து காரசாரமாக, வரி வரியாகப் புத்தகத்தையும், காட்சி காட்சியாகப் படத்தையும் விமர்சித்தனர்.

''ஆபீஸர் வராருங்க''—

ப்யூன் பழனிசாமி குரல் கொடுக்க சட்டென்று அவரவர் கலைந்து ஸீட்டுக்குச் சென்றனர்.

ஆபீஸர் வந்தார். கொஞ்ச நாழிகை இருக்கையில் அமர்ந்து யாரிடமோ போனில் பேசிவிட்டு ஸீனியர் அஸிஸ்டெண்ட் தண்டபாணியிடம் ''அர்ஜெண்ட் வேலை ஒண்ணை கவனிக்கணும். லஞ்சுக்கப்புறம் வந்திடறேன்'' என்று சொல்லிப் போனார்.

அவர் தலை மறைந்ததும் கொஞ்சம் தலை காட்டின டிஸிப்ளின் மறைய, இடம் பழையபடி சந்தைக் கடை ஆயிற்று.

மாலதி எழுந்து சுகுணாவிடம் வந்தாள்:

''கான்டீனுக்குப் போலாமா?''

அப்போதுதான் பிரித்த பைலை மூடிவிட்டு சுகுணா எழுந்தாள்.

இரண்டாவது மாடியில் இவர்கள் டிபார்ட்மெண்ட். நாலாவதில் கான்டீன். அவசரப்படாமல் நிதானமாகப் படியேறி மாடிக்குப் போனார்கள்.

ரஜினி மனைவி லதாவுக்கு இது எத்தனாம் மாசம், அவரைப் பார்க்கும் லேடி டாக்டர் யார், கமல் பாம்பே போனால் எங்கு தங்குகிறார், ஸ்ரீப்ரியாவின் நூறாவது படம் 'வசந்தத்தில் ஒரு நாளா!' இல்லை 'ஒரு வாரிசு உருவாகிறதா''— என்றெல்லாம் பேசியபடி காண்டீனை அடைந்தார்கள்.

காலை நேரமானாலும் காண்டீனில் கூட்டம் இருந்தது.

''குட்மார்னிங் நாயர், இரண்டு ஸ்பெஷல் காபி...''

''என்ன நாயர்—இன்னிக்கும் ஸமோஸா போடலியா? போங்க ரொம்ப மோசம் நீங்க... என்ன... கட்லெட்டா? சரி ஒரு ப்ளேட் குடுங்க...''

''ஆர்கண்டி சாரிக்கு நீ என்ன கஞ்சி போடறே சுகு?''

''ஆர்கண்டிக்கு மட்டுமில்லே, எல்லாத்துக்கும் ஜவ்வரிசி கஞ்சிதான் பெஸ்ட். திட்டு திட்டா ஆகாது...பளபளனும் இருக்கும்.''

பர்ஸனல் டிபார்ட்மெண்டிலிருந்து ஒரு கும்பல் உள்ளே நுழைய சுகுணா ''ஹாய் ராணி'' என்று கை ஆட்டினாள்.

ராணி இவர்கள் அருகில் வந்தாள்.

''என்ன ட்ரிப்பெல்லாம் எப்படி இருந்தது? சிங்கப்பூரைப் பாக்கி வைச்சிருக்கியா இல்லே... ஒட்ட சுருட்டிக்கிட்டு வந்திட்டியா?''—

ராணி சிரித்தாள். பிறகு, ''ஓ! இட் வாஸ் எ வொண்டர்புல் ட்ரிப் யார்... நீதான் வரலை...'' என்றாள்.

சுகுணாவுக்கு உண்மையில் வருத்தம்தான். ஆபீஸ்லேயே மலிவாக ஏற்பாடு பண்ணப்பட்ட ட்ரிப். போக வர, சாப்பாடு, தங்குமிடம் அத்தனையும் சேர்த்து பதினைந்து நாட்களுக்கு நாலாயிரத்து எழுநூறுதான்...



''கஸ்தூரி கல்யாணத்துக்கு வாங்கின லோன் இன்னும் அடைபடலே... ஆச்சுனு அடைச்சிட்டா தேவலை... சரி, அது வேணாட்டியும் கல்வளை வேணும். நீ ரொம்பநாளா கேக்கறே... அதை பண்ணிச்சிட்டாலும் பிரயோஜனம் உண்டு... எல்லாத்தையும் விட்டுட்டு இப்ப அத்தனை கொடுத்து எதுக்கு இந்த ட்ரிப்? அதுவும் தனியா?''

கணவனின் பேச்சை மீற முடியவில்லை.

நாத்தியின் கல்யாண கடன் என்றதும் முளைக்கத் துவங்கிய எரிச்சல் கல்வளை என்றதும் சட்டென்று அடங்கிப்போகத்தான் போகவில்லை என்று சொல்லிவிட்டாள்.

ஹூம்! பிடிவாதம் பண்ணி போயிருக்க வேண்டுமோ?

ராணியுடன் சிங்கப்பூரை ஒரு அலசு அலசிவிட்டு டிபார்ட்மெண்டுக்கு வந்தபோது மணி பதினொண்ணரை.

பத்து நிமிஷங்கள் பைல் பார்த்திருப்பாள்.

சுகுமாரனுக்கு கல்யாணம் நிச்சயமாகி இருப்பதாக சேதி வர, போட்டது போட்டபடி கிடக்க, அவன் கணக்கில் ஐஸ்க்ரீம் ஆர்டர் பண்ணி வரவழைத்து, சாப்பிட்டு, அத்தனை பேர்களும் கொண்டாடினார்கள்

அப்புறம் லஞ்ச்.

அதை முடித்துக்கொண்டு வந்தபோது இரண்டேகால்.

சமீபத்தில் தன் பக்கத்து வீட்டில் நடந்த சம்பவத்தை மாலதி கூற, சுகுணா காதை அதற்குக் கொடுத்தவண்ணம் பைல்களைப் படித்தாள்.

தன்னைவிட எட்டு வயசு சின்னவளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்து நிற்கிறானாம் பக்கத்து வீட்டுப் பிள்ளை; இரண்டு நாளாய் வீட்டில் யுத்த களேபரமாம்.

''காலம் மாறிட்டது சுகு... அவனுக்கு அக்காமாதிரி இருக்கா. இப்பவே அவ, பார்க்க சகிக்கலை...''

பேப்பரில் படித்த அரசியல் கிசுகிசுவை சுந்தரமும், காமுவும் பேச இவள் சுவாரஸ்யமாகக் கேட்டாள்.

மஞ்சுவும், சுகுமாரனும் சுஜாதாவையும் சிவசங்கரியையும் கொஞ்சம் அலசினதில் சுகுணாவும் தீவிரமாய் பங்கு கொண்டாள்.

டிஸ்பாட்ச் டிபார்ட்மெண்ட் வம்பு ஒன்றை மோனா முணுமுணுக்க, அதை தன்னால் ஆன உதவியாய இன்னும் நாலுபேருக்கு பரப்பினாள்.

''உம்மிடி பங்காரு கடைக்குப் போய் ஒரு மோதிரம் ஆர்டர் கொடுக்கணும். தனியா போக எப்படியோ இருக்கு, நீயும் லா சுகு'' என்று மஞ்சு அழைக்க, இரண்டு பேருமாய் முகம் கழுவி பௌடர், லிப்ஸ்டிக் எட்ஸ்ட்ரா பூசி நாலே முக்காலுக்குக் கிளம்பினார்கள்.

ரொம்ப நெருக்கடியில்லாத பஸ்ஸில் பயணம் செய்து, ஒருமணி நேரம் உம்மிடி பங்காரு கடையில் செலவழித்து விட்டு, பஸ் பிடித்து சுகுணா வீட்டுக்குள் நுழைந்தபோது ஏழடிக்க பத்து நிமிஷம்.

கூடத்தில் ரகு.

''அட, எப்ப டூர்லேந்து வந்தீங்க?''

''ஆறு மணி பஸ்ல... ஆமா... ஏன் இன்னிக்கு இவ்வளோ லேட்? ம்?''—

சுகுணா பதில் சொல்வதற்குள் சம்பூர்ணம் கூடத்துள் எட்டிப் பார்த்து ''வந்திட்டியா சுகுணா... கஸ்தூரி மாமனாரைப் பாத்தியா? உடம்புக்கு என்னவாம்?'' என்றதும் அடியோடு அவர் சொன்னதை தான் மறந்து விட்டது நினைவுக்கு வர ஒருகணம் பேந்தப் பேந்த விழித்தாள்.



அப்புறம் சட்டென்று முகத்தை சிணுக்கிக்கொண்டு ''என்ன அத்தே! நுழையறதுக்கு முன்னால நூறு கேள்வி கேக்கறீங்க...? ஆபீஸ்ல மாடு கணக்கா லோல் பட்டுட்டு, அப்பாடினு வீட்டுக்கு வந்து உட்காரக்கூட விடாம... ஏன் தான் இப்படித் தொந்தரவு பண்ணுவீங்களோ...'' என்று எரிச்சலோடு முணுமுணுக்க ரகுபதி தலையை நிமிர்த்தி அம்மாவையும், மனைவியையும் மாறி மாறிப் பார்த்தான்.

சுகுணாவின் கலைந்த முடியும், சோர்ந்த முகமும் 'ஐயோ பாவம்' என்ற உணர்வை அவனுள் உண்டாக்கின.

''ஏம்மா நீ தொண தொணன்றே? கஸ்தூரி மாமனார் உடம்புதான் இப்ப பெரிசா போச்சா? பாவம்... நாள் பூரா இந்தக் குடும்பத்தோட நன்மைக்கா உழைச்சி, அசந்து வரா... அவ கஷ்டம் புரியாம... நீ வேற... போய் காபி கலந்து எடுத்திட்டு வாம்மா... எதுவானாலும் அப்புறமா பேசிக்கலாம்...''

விடிகாலையில் ஐந்துக்கு எழுந்து காபி போட்டு, டிபன், சமையல் செய்து, வேலைக்காரி மட்டம் என்பதால் துணிகளைத் தோய்த்து, சர்க்கரைக்குக் க்யூவில் நின்று, பால் டிப்போக்குச் சென்று வந்து, மாலை டிபனுக்கு பூரி கிழங்கு செய்து, இரவு சாப்பாட்டுக்கான முஸ்தீபுகளில் இறங்கி இருந்த சம்பூர்ணம், சிடுசிடுப்புடன் தன்னிடம் பேசிய கையோடு ''என்ன சுகு, ரொம்ப டயர்டா இருக்கா? பாவம்மா நீ... காபி சாப்டுட்டு காலை நீட்டி அரை மணி படுத்து ரெஸ்ட் எடுத்துக்க. சிவாஜியோட புது படம் சாந்திலே ரிலீஸ் ஆகியிருக்கு... உனக்கு பிடிக்குமே... நைட்ஷோவுக்கு போலாமா? என்னம்மா சுகு?'' என்று மிகுந்த பரிவோடு மகன் கூறுவதை காதில் வாங்கியபடி ஆபீசில் உழைத்துக் களைத்து வந்திருக்கும் மருமகளுக்குக் காபி கலக்க சமையல்கட்டில் நுழைந்தாள்.

# ச்சே... பாவம்

அவனுக்கு செமை போர் அடித்தது.

ஆனாலும் மஹா த்ராபை ஊரில் வந்து மாட்டிக்கொண்டு விழிக்க நேர்ந்ததை நினைக்கும்போது எரிச்சல் முசுமுசுவென்று மண்டியது.

அவன் ஒரு மெடிகல் ரெப்ரஸன்டேடிவ். டார்க் கலர் பாண்ட், வெள்ளை சட்டை, பட்டை டை, கருப்பு பை சகிதம்—அவன் புறப்பட்டுவிட்டாலே அவனது தொழில் என்னஎன்பது நெற்றியில் எழுதி ஒட்டியிருக்கிறது என்று நண்பர்கள் அவனை கேலி செய்வதுண்டு.

அவனுக்கு இந்த உத்தியோகத்தில் அத்தனை ஈடுபாடு இல்லை. இருக்கிற வரையில் இருக்கலாம், அப்புறம் ஏதாவது நல்ல ஒபனிங் கிடைத்தால் தாவிவிடலாம் என்பதே அவன் அபிப்பிராயம்...

பின்னே என்ன?

லோ லோ என்று மாசத்தில் இருபத்து ஐந்து நாட்கள் ஊர் சுற்றி, வகையாய் சோறு தண்ணீர் இல்லாமல் அவஸ்தைப்பட வேண்டும். ஒரு இடத்தில் சோறு வேகாமல் கொட்ட கொட்ட விழிக்கும். இன்னொரு இடத்தில் காரம் மண்டையில் அடிக்கும். மாறி மாறி சேனையும், வாழைக்காயும் விடாமல் ஆளைப் பயமுறுத்தும். ஊளை நாற்றமடிக்கும் மோர் என்கிற வெள்ளைத் தண்ணீர்... ச்சே... காசைக் கொடுக்க ரெடியாக இருந்தாலும் நல்ல சாப்பாடு எங்கே கிடைக்கிறது?



அப்புறம், இந்த லாட்ஜுகள். இவற்றைப் பற்றி ஒரு புராணமே எழுதி விடலாம்.

லாட்ஜ் என்று பிரமாதமாய் பேர்தான் இருக்கும். உள்ளே நர்விசாய் ஒரு அறை இருக்காது.

பாதி இடங்களில் சமையற்கட்டிலிருந்தோ, கக்கூஸுக்குப் போகும் ரேழியிலிருந்தோ மாடிப்படிகள் துவங்கும். தேங்கிக் கிடக்கும் பாசி ஜலத்தில் வழுக்கி விழுந்து விடாமல், தேய்க்கப் போட்டிருக்கும் கரி அப்பின அண்டா குண்டாக்களில் இடராமல் மாடிப்படிகளை அடைந்து குறுகலான படிகளில் உடம்பை முறுக்கித் திருகி ஏற வேண்டும். காற்றோட்டமில்லாத ஏழெட்டு புறாக்கூண்டு அறைகள். கதவு ஒழுங்காக சாத்தாது... ஒட்டடை அடித்து மாமாங்கம் ஆன தினுசில் தோரணமாய் ஒட்டடை தொங்கும். பானையில் 'லரர்வா' இருந்தாலும் ஆச்சரியப்படக் கூடாது. ஹைதர் காலத்துக் கட்டில். அதில் கல்லாக கனத்துப்போன தேங்காய் நார் மெத்தை. 'சலவைக்குப் போட்ட விரிப்புதாங்க' என்று லாட்ஜ் சொந்தக்காரன் சத்தியம் பண்ணும் பிசுக்கு ஷீட...

ஹோ... காட்! மாசத்தில் முக்கால்வாசி நாட்களை இந்த மாதிரி வேகாத சோற்றைத் தின்னு, ஊழலான இடத்தில் படுத்து கழிக்க வேண்டும் என்றால் அவனுக்குக் கோபம் வராமல் வேறு என்ன வரும்?

இப்போது அவன் தங்கியிருப்பதும் மேலே வர்ணிக்கப் பட்ட லாட்ஜின் அப்பட்டமான பிரதிபலிப்புதான்...

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், திருச்சி என்று ஒரு சுற்றுக்குக் கிளம்பினவன் வகையாய் இன்று இந்த ஊரில் மாட்டிக்கொண்டு விட்டான்.

இந்த ஊருக்கு அவன் அடிக்கடி வந்ததுண்டுதான்... ராத்திரி தங்காமல் இத்தனை நாட்களாக டபாய்த்தவன் இன்று எப்படியோ சிக்கிக்கொண்டு விட்டான்.

மதியம் மூன்று மணி சுமாருக்கு அவன் பயணித்த பஸ் இந்த ஊருக்கு வந்தது. அரை மணியில் மீண்டும் கிளம்ப வேண்டியவனுக்கு என்னமோ உடம்புக்கு வந்துவிட புறப் பட மாட்டேன் என்று சண்டி பண்ணிக்கொண்டு உட் கார்ந்து விட்டது

ஐந்து மணி பஸ் ஃபுல்லாக வந்தது.

ஒரு டிக்கெட்... ஒன்றே ஒன்று என்று கையில் சில்லறையை வைத்துக்கொண்டு அவன் கெஞ்சினது பலிக்க வில்லை.

''ஒண்ணே ஒண்ணுனு இதுவரைக்கும் எட்டுபேர் கேட்டுட்டாங்க சார், பாவப்பட்டு உங்களை ஏத்திக் கிட்டா செக்கிங் இன்ஸ்பெக்டருக்கு யாரு பதில் சொல்லறது?''—

அந்த பஸ் போய்விட்டது. என்றுமில்லாத அதிசய மாய் பஸ் ஸ்டாண்டிலும், ஊரிலும் ஜனங்கள் ஏகமாக இருக்கிற மாதிரி தெரிந்தது. ரொம்ப புழுங்கியது. அசதி யாய் இருந்தது.

அப்புறந்தான் யோசித்தான். இனி எட்டுக்குத்தான் பஸ். அதைப் பிடித்து நாலுமணி நேரம் பயணம் செய்து அர்த்த ராத்திரி பிசாசாக திருச்சியில் சுத்துவதைவிட இங்கே லாட்ஜில் தங்கிவிட்டு, காலையில், முதல் பஸ்ஸில் போவது தேவலை என்று தோன்ற பஸ் ஸ்டாண்டிலிருந்து நகர்ந்து, கொஞ்சம் சுமாரானது என்று சிலர் கை காட்டின எதிர் சாரி லாட்ஜை அடைந்து ரூம் வாங்கிக் கொண்டான்.

பையன் கொண்டுவந்த காபியைக் குடித்துவிட்டு மாலைப்பொழுதை எப்படி ஓட்டுவது என்ற நினைப் போடு அந்த ஊரின் படக் கொட்டகைகளைப் பற்றி அந்தப் பையனிடமே விசாரித்தான்.



''ரெண்டு கொட்டகை இருக்குதுங்க. ஒண்ணு நல்லா இருக்கும், இன்னொன்று பாடாவதிங்க—அதுலே 'ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி', இதுலே 'ஜகன் மோகினி' ஆடுதுங்க... ஜகன்மோகினிக்குப் போங்க ஸார்' ஜெயமாலினி படா ஷோக்கா ஆட்டங் காட்டுது.''

இரண்டு படங்களையுமே பார்க்க வேண்டும் என்று தோன்றாததால் அவன் ஐந்து ரூபாய் நாளை பையனிடம் நீட்டி ''ஒரு சிகரெட் பாக்கெட், வத்திப்பெட்டி, ஏதாவது இந்த வாரத்து புது பத்திரிகை இருந்தா வாங்கிட்டு வா'' என்றான்.

போன பையன் பத்து நிமிஷத்தில் திரும்பி வந்தான்.

''புது பத்திரிகை எதுவும் இல்லிங்க. எல்லாம் போன வாரத்துதுங்கதான்... நாளைக்குத்தான் வருமாம்...''

பையனை அனுப்பிவிட்டு ஜன்னல் வழியாக சில நிமிஷங்களுக்கு பராக்கு பார்த்தான்.

ஜகஜகவென்று தெரு சந்தடியுடன் காணப்பட்டது.

உர மூட்டைகளைச் சுமந்துசெல்லும் கட்டைவண்டி கள், வேட்டியை வரிந்து கட்டி, வெற்றுடம்புடன் நடந்த ஆண்கள், சிவப்பு, நீல, கைத்தறி புடைவையில் தலையில் மிளகாய் தூள், காய்கறி நிறைந்த கூடை, இடுப்பில் அம்மணக் குழந்தையுடன் மார்பு குலுங்க நடந்த பெண்கள்...

ஓரமாய் குந்தி கொய்யாப்பழமோ, பேரிக்காய் களையோ கூறு கட்டி விற்கும் கிழவி; கை வண்டியில் ஸோன்பப்டி விற்கும் ஆள், முடி கயிறு, எலி மருந்தை கூவி விற்கும் தாட்டியான ஆள்...

வழக்கமாகக் காணப்படும் இவர்கள் நடுவில் நாலு பேராய் எட்டு பேராய் சின்னச் சின்ன கும்பலாய் வறுவிறு வென்று நடந்து கிழக்கு பக்கமாய் பலர் போனதைக் குறிப்பிட்டு அவனால் பார்க்க முடிந்தது.

என்ன விசேஷம்?

சினிமாவுக்குப் போகும் கூட்டமா?

மணி ஆறேமுக்கால் ஆகிறதே... ஆரம்பித்திருப்பானே!

கண்களை அலையவிட்டு பார்த்தபோது இது நாழிகை பார்க்காத கலர் கலர் தோரணங்களை, இங்கும் அங்குமாய் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களை அவனால் பார்க்க முடிந்தது.

அரசியல்வாதி யாராவது வரப் போகிறார்களா?

அதுதான் இத்தனை சந்தடியா?

இருட்டிவிட்டதால் போஸ்டரில் இருந்த படமும், வாசகங்களும் அவனுக்குத் தெளிவாகவில்லை.

எந்த கட்சி கூட்டம் இது?

எந்தத் தலைவர் வருகிறார்?

தோரணங்களின் கலரைப் பார்த்தபோது பிரபலமான ஒரு கட்சியின் கூட்டம் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அந்தக் கட்சியா? யார் வருகிறார்?

யோசனையுடன் திரும்பியவன், அறைக்கு வெளியே எட்டிப் பார்த்து, அந்தப் பக்கமாய் போன பையனை அழைத்தான்.

''என்னா ஸார்?''

''ஜனங்க கூட்டமா எங்கேடா போறாங்க? ஏதாவது மீட்டிங்கா?''—

''ஆமா ஸார், தலைவர் வராரே, தெரியாதா?''

பையன் சொன்ன அரசியல்வாதியின் பேரைக் கேட்டதும் அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

அவரா? அந்தத் தலைவரா?



இந்தியா முழுவதும் கொட்டி முழக்கிய அவரா? இந்த சின்ன ஊருக்கா? என்னடா இது அதிசயம்?

இல்லை, இந்தப் பையன் தப்பாக உளறுகிறான்... அந்தத் தலைவராவது இங்கு வருகிறதாவது.

ம்ஹூம்... இருக்காது.

அறைக்குள் சென்று தலையை வாரி, பர்ஸை எடுத்துக் கொண்டவன் கீழே வந்தான்.

கல்லாவில் இருந்த மனிதரிடம் ''ஏன் ஸார், தலைவரா இன்னிக்கு இங்கே வரார்? பையன் சொல்றானே!'' என்றான்.

அவர் ஆமாம் என்று தலை ஆட்டினார்.

அவனுடைய வியப்பு அதிகமானது.

''என்ன ஸார் இப்படி சாதாரணமா சொல்லிட்டீங்க? வழக்கமா தலைவர் வரார்னா அமர்க்களப்படுமே ஸார்.''

''அதெல்லாம் முன்னே தம்பி, அவர் பதவியிலே இருந்தப்ப... இப்ப ஒண்ணும் இல்லே... அவர் தேர்தல்லே தோத்து நாலு மாசமாயிட்டதே, தம்பி. இத்தனை மாசமா எந்த ஊர்லே இருந்தீங்க? ம்...? தோத்துட்டப்புறம் தலைவா செய்யற முதல் பயணம் இதுதான். லவுத் இண்டியா பூரா ஒரு சூறாவளி பயணம் செய்யப் போறாராம். திருச்சிக்கு போற வழிலே ராத்திரியே நாலு மீட்டிங் இருக்காம்...''

அவன் வெளியில் வந்தான்.

ஒரு மாசமாய் தங்கைக்குக் கல்யாணம், அது, இது என்று, தகப்பன் இல்லாத குடும்பத்தின் மூத்த மகனாய் பொறுப்புடன் இருந்ததில் பேப்பர் படிக்க அவகாசம் இல்லாமல் இருந்தது நிஜம்தான். ஆனாலும் தலைவர்

இந்த தம்மாத்துண்டு ஊர்சுளில்கூட மீட்டிங் போட்டு பேசுமளவுக்கு நாட்டின் நடப்பு இருப்பது தனக்குத் தெரியாமல் போனதை நினைத்தால் அவனுக்கு அவமான மாக இருந்தது.

கூட்டத்தோடு கலந்து மைதானத்தைப் பார்க்க நடந்தான்.

தூரத்தில் மைதானம் தெரிந்தது. இதுவா, இங்கா கூட்டம்?

என்னடா இது?

இந்தத் தலைவர் என்றால் முன்பு மனித வெள்ளம் புரண்டு ஓடும்... இப்போது ஏதோ கூட்டம் என்று சொல்லலாமே தவிர, குறிப்பிடும்படிகூட இல்லியே, ஏன்? அப்படியென்றால தலைவர் வருகிறார் என்றால் லாரி வைத்து ஆள் சேர்ப்பார்கள் என்று பேசிக்கொண்டதெல்லாம் நிஜம்தானா?

தலைக்கு ஐந்து ரூபாய், போக வர சவாரி, இலவச சாப்பாடு என்று ஆள் சேர்த்துதான் வரலாறு காணாத கூட்டத்தை நடத்தினார்களா?

மைதானத்தை அவன் நெருங்கிவிட்டான்.

ஆயிரம் பேர்கள் இருப்பார்களா?

ம ம்...

மாங்காய் பத்தை, சுண்டல், கடலை, ஐஸ்காரர்களுக்கு நல்ல வியாபாரம்.

இந்தப் பக்கமாய் திரும்பி முன்னேறியபோது சாரி சாரியாய் சிலர் கையில் கறுப்புக் கொடியுடன் நிற்பதை அவன் பார்த்தான். கைகளில் வாசகங்கள எழுதப்பட்ட அட்டைகள்...

''ஊழல் தலைவரே... திரும்பிப் போ''—



''வீட்டில் உட்கார் என்ற மக்கள் தீர்ப்பை மீறாதே!''

''உன் ஊழல் சேவை, நாட்டுக்குத் தேவை இல்லை!''

வெளிச்சம் குறைவாக இருந்ததால் அதற்குமேல் அவனால் வாசகங்களைப் படிக்க இயலவில்லை.

வேறு பக்கமாய் நகர்ந்து அதிக கூட்டமில்லாத ஒரு இடத்தில் அமர்ந்தான்.

சப்தம் அதிகமாக இருந்தது. ஏதேதோ கத்தல்கள், ஏசல்கள், உரத்த த்வனி பேச்சுக்கள்.

பேருக்கு நாலைந்து போலீஸ்காரர்கள்.

திடுமென்று அவனுக்குள் ஐந்து மாதங்களுக்கு முன்னால் இதே தலைவரின் கூட்டம் ஒன்றை கோயமுத்தூரில் பார்த்தது ஞாபகத்துக்கு வந்தது.

அப்போதும் சூறாவளிப் பயணம்தான்; ஆனால் தலைவர் பதவியில் இருந்த சமயம்...

ஹெலிகாப்டரில் தலைவர் வந்து இறங்க வேண்டி, ஒரு பொட்டல் காட்டை சமப்படுத்தினார்கள்; ஹெலிபேட் அமைத்தார்கள்; டெண்ட் போட்டு வெஸ்டர்ன்க்ளாஸ்ட், பேஸின் பொருத்தி தண்ணீர் குழாய், மின்சாரம் எல்லாம் ஸ்பெஷலாய் இழுத்தார்கள். கட்டில், ட்ரெஸிங் டேபிள் போட்டு கால்மணி தலைவர் ஓய்வெடுக்கவென டெண்ட்டை அலங்கரித்து அமர்க்களப்படுத்தினார்கள். அரசாங்க அதிகாரிகள் நாலு நாட்கள் மைதானத்தில் பழி கிடந்து ஏற்பாடுகளைக் கவனித்தார்கள்.

அன்று அப்படி ஒரு தடபுடல்.

இன்று?

அவனுக்கு பசக்கென்று சிரிப்பு எழுந்தது.

ஸோ—எல்லாம் பதவிக்குத்தானா?

மரியாதை, கௌரவம், செல்வாக்கு எல்லாம் அந்த நாற்காலிக்குத்தானா?

ஆளுக்கு ஒன்றும் கிடையாதா?

எந்த கொம்பனாய் இருந்தாலும் நாற்காலி இல்லாவிட்டால் ஜீரோ தானா?

கூட்டத்தின் நுழை வாசலில் சலசலப்பு...

தலைவர் வந்துவிட்டாராம்...

நாலு கார்கள் மேடைக்கருகில் வந்து நிற்க, பத்து ஆட்கள் புடை சூழ தலைவர் மேடையில் ஏறி அமர்ந்தார் .

ஒரே கத்தல்...

வாழ்த்து, எதிர்ப்பு...

இன்னவென்று புரியாமல் குழப்பம், கூச்சல்...

கூட்ட அமைப்பாளர் எழுந்து 'மதிப்புக்குரிய தலைவர் அவர்களே'...என்று பேசத் துவங்கிய கணத்தில் சட்டென்று மின்சாரம் நின்றுபோனது

இங்கொன்றும், அங்கொன்றுமாய் பளிச்சிட்ட பெட்ரோமாக்ஸ் தவிர, மற்ற இடங்களில் ஏக இருட்டு...

ஆளும் கட்சியின் சூழ்ச்சியா?

தலைவரை அவமானப்படுத்த செய்யப்படும் திட்டமிட்ட காரியமா?

ஹேய்...டேய்... என்ற கத்தல், கூச்சல், குழப்பம்...

மேடைக்கு அவசரமாய் இரண்டு பெட்ரோமாக்ஸ் கொண்டு வரப்பட்டன.

கூட்டத்தை சமாளிக்க வேண்டி தலைவரே எழுந்தார்.

கைகளை உயர்த்தி "என் உயிரினும் மேலான தொண்டர்களே" என்று மிகுந்த சிரமத்துடன் நாவிலிருந்து தம்மெடுத்துக் கூவ, எங்கிருந்தோ வீசப்பட்ட அழுகின தக்காளி ஒன்று அவர் நெற்றியில் சொத்தென்று பட்டு முகமெல்லாம் தெறித்தது.



தொடர்ந்து ஒரு அழுகின முட்டை, செருப்பு...

கூட்டத்தில் ஹோ என்ற சிரிப்பு... கேலி... கலவரம்...

என்னடா, இது!

அவன் திடுக்கிட்டுப் போனான்...

அசல் காட்டுமிராண்டித்தனமாக அல்லவா இருக்கிறது!

ஆறு மாசம் முன் தலையில் வைத்துக் கொண்டாடிய கொண்டாட்டம் என்ன? இன்று காலில் போட்டு நாகரிகமில்லாமல் மிதிக்கும் கேவலம் என்ன?

திடீரென்று வேதனை மனசை ரொம்பப் பிறாண்டுகிறமாதிரி தோன்ற அவன் தலையை நிமிர்த்தி தலைவரைப் பார்த்தான்.

அந்த அடிபட்ட முகமும், கண்களும்...

நீங்களுமா? என் தொண்டர்களே நீங்களுமா? என்ற பரிதவிப்பும்...

ச்சே... பாவம்... ரொம்ப பாவம்...

இது நாழிகை சின்ன சிரிப்பு அதரத்தில் விளையாட உட்கார்ந்திருந்தவனுக்கு இனியும் தன்னால் அப்படி உட்கார முடியாது என்று தோன்ற அவசரமாக எழுந்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

# மூத்தவர்

மூத்தவர் வெறும் வேடத்தின் நிற்குங்கால்
மூடப்பிள்ளை அறமெவண் ஓர்வதே?''

அப்பு புத்தகத்தை மூடி வைத்தான். மனசு சலனப் பட்டது; அப்புறம் சங்கடப்பட்டது.

மூத்தவர் வெறும் வேடத்தில் நிற்குங்கால்...

நிஜம்தானா?

பெரியவர்கள் வேஷதாரிகளாக இருப்பதால்தான் இளைய தலைமுறை எது சத்தியம், எது நேர்மை, எது நிஜம், எது பொய் என்று புரியாமல் பாழ்பட்டு சீரழி கிறார்களா?

சில நாட்கள் முன் சீனு ஆக்ரோஷமாக வாதித்ததி லிருந்து அப்புவுக்குள் சின்னதாக ஒரு குழப்பம்.

என்ன சொன்னான் அவன்?

''நீத்திறன் கொள் அறிவற்ற பொய்ச்செயல்,
செய்து மற்றவை ஞான நெறியென்பர்,
மூத்தவர் வெறும் வேடத்தின் நிற்குங்கால்,
மூடப் பிள்ளை அறமெவண் ஓர்வதே—''



அடேயப்பா! என்னமாய் சொல்லிட்டு போயிருக்கார்டா இந்த பாரதி! மனுஷர் உயிரோட இருந்தா மூட்டை சர்க்கரையை எடுத்துண்டு போய் 'வாயைத் திறங்கோ ஸ்வாமி'னு சொல்லி, அள்ளி கொட்டணும்போல பரபரக் கறது... என்ன சத்தியமான வார்த்தைடா! ஊருக்கு ஒரு நீதி, தனக்கு ஒரு நீதினு வாழறவாளோட முகமூடியை எப்படி உரிச்சு காண்பிக்கிறார் பாரு... எனக்கு என்ன ரொம்ப ஆச்சர்யமா இருக்குன்னா, அன்னிக்கு அவன் உணர்ந்து சொன்னது, இன்னிக்கு என்னமா மனுஷா ளுக்குப் பொருந்தறதுதான். அறுபதுகளிலே அமெரிக் காலே ஹிப்பி மூவ்மெண்ட் ஆரம்பிச்சதே பெரியவர் களோட வேஷங்களை எதிர்க்கத்தான், அது தெரியுமா உனக்கு? சொல்றது ஒண்ணு, செய்யறது ஒண்ணுங்கற வேஷம் அதிகமானதும் பார்த்தான்—சரி, இந்த முகமூடி யைப் போட்டுண்டா மூச்சு முட்டி நாம் சாகறது நிஜம்— எதிர்த்து, மீறிண்டு போறதுதான் நிம்மதிக்கு வழினு புரிஞ் சுண்டு அவனவன் சதுரத்தை விட்டு வெளிலே வந்து சுதந் திரமா இருக்கப் பார்த்ததும் ஹிப்பினு சொல்லி அவனை தள்ளி வைக்கப் பாத்தது சமூகம்... நடந்ததா? அந்த மாதிரி ஒரு எதிர்ப்பு நம்ப நாட்டுலேயும் ரொம்ப சீக்கிரம் வரணும்—வரும்... வந்து இந்த வேஷதாரி மூத்தவா எல்லாரோட சுயரூபத்தையும் உரிச்சுக் காட்டணும்... இல்லேன்னா இந்த நாடு உருப்படாது. நிச்சயம் உருப் படாது...''

சீனு அன்று ஆவேசமாக பேசியபோது அப்பு குறுக்கே எதுவும் பேசாமல் மௌனமாய் இருந்துவிட்டான்.

சீனுவின் வேதனைக்குக் காரணம் அவனுக்கு ஓரளவு தெரிந்ததுதான்.

அப்பா பெரிய தொழிலதிபர். நாலுக்கு ஒரு ஊர், கான்பரன்ஸ் என்று சுத்துபவர். குடி, கூத்தி எல்லாம் தண்ணீர் பட்டபாடு,

அம்மா ஊரில் உள்ள முக்கியமான சமூக சேவகிகளில் ஒருத்தி.

சேரியை சுத்தம் பண்ணுகிறேன், ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுக்கிறேன், விலைவாசியை எதிர்த்து ஊர்வலம் நடத்துகிறேன் என்று முக்கால்வாசி நேரம் வீட்டில் தங்காமல் திரிந்து கொண்டிருப்பாள்.

''இருக்கிறது நா ஒருத்தன். என்னையும், இந்த வீட்டையும் முழுசா கவனிக்க இவளுக்கு துப்பு இல்லே... ஊரை சீர்பண்ணறாளாம்... ஊரை... நான்சென்ஸ்...''

ஒரு தரம் ஜுரம் வந்து காலேஜுக்கு வர முடியாமல் சீனு வீட்டில் தங்கி, அப்பு போய்ப் பார்த்தபோது அவன் கண்ணில் நீர் தேங்க எரிச்சலுடன் பேசியது இவனுக்கு ஆயுசுக்கும் மறக்காதுதான்.

அந்தக் குரலிலதான் எத்தனை ஆத்திரம்? கசப்பு? வெறுப்பு?

இன்னிக்கு எங்க அப்பன் எங்க போயிருக்கான் தெரியுமாடா? வடபழனிலே பத்து ஏழைகள் கல்யாணத்த தன் செலவுல நடத்தி வைக்க... அங்க போய் 'இல்வாழ்க்கை என்பது'னு திருக்குறள்லேந்து கொட்டேஷன் கொடுத்து பிரமாதமா பேசி கைதட்டல் வாங்கிண்டு வருவான். ஆனா, ராத்திரி குடிச்சுட்டு, பொண்டாட்டிகிட்ட அசிங்கமா சண்டை போட்டு, நீ இல்லாட்டா எனக்கு ஆளே இல்லையா—னு கத்திட்டு எவளையாவது தேடிண்டு போவான். லையர்... ப்ளடி ஹிபோக்ரட்...''

—மூத்தலர் வெறும் வேடத்தில் நிற்குங்கால்,
மூடப்பிள்ளைகள் அறமெவண் ஓர்வதே?...

நிஜம்தானா?



பாரதி அன்று சொன்னதும், இன்று நடப்பதும் நிஜம் தானா?

அப்பு ஆயாசத்துடன் கண்களை மூடிக்கொண்டான்.

எல்லாப் பெரியவர்களும் வேஷதாரிகள் என்று ஏதோ ஒன்று சின்ன குரலில் முணுமுணுக்க, அவன் தன் வீட்டு மூத்தவர்களை மனசுக்குள் கொண்டு வந்தான்.

அப்பா... ஐம்பது வயதிலேயே அறுபது வயதுகாரர் மாதிரி ஒரு தோற்றம்.

குடும்பத்துக்கு அரைவயிறு சோறாவது போட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் லோ லோ என்று ராத்திரி இல்லை, பகல் இல்லை, நல்ல உணவு இல்லை, தூக்கம் இல்லை என்று காடு மேடு சுத்தி சம்பாதிக்கும் ஜீவன்...

அம்மா... நினைவு தெரிந்த நாளிலிருந்து பாதி நாட்களுக்கு பாயோடு பாயாய் படுத்து, இருமல் இழுப்பில் அவஸ்தைப்படும் நோயாளி...

அப்புறம் அத்தை...

பெரியவளாகு முன்னரே கல்யாணமாகி, கணவனை இழந்து, தாலியை அவிழ்த்து, மொட்டை அடித்து, வண்ணப் புடவையை உருவி போட்டுவிட்டு, நார்மடியும், ருத்திராட்சமும், விபூதியுமாய் அந்த வீட்டுப் பொறுப்புகளை வாய் திறவாமல் ஏற்றுக்கொண்டவள்...

இவர்களில் யார் வேஷதாரி?

''அமெரிக்காலே ஹிப்பி மூவ்மெண்ட் முளைச்ச மாதிரி, நம்ப நாட்டுலேயும் ஒருநாள் இல்லாட்டா ஒரு நாள் ஒரு இளைஞர் புரட்சி வெடிச்சுண்டு கிளம்பணும்... கிளம்பும்... அப்பத்தான் இந்த வேஷதாரிகளோட சாயம் வெளுக்கும்... தாங்க பண்றதை எல்லாம் பண்ணிட்டு

பழியமட்டும் இளைய தலைமுறைமேல போடறா பாரு... இதுக்கெல்லாம் ஒரு விடிவு வரணும்! பெரியவா எல்லாரும் சுயநலவாதிகள், வேஷதாரிகள்... நா அடிச்சு சொல்லு வேண்டா''

அப்பு இருப்புக் கொள்ளாமல் எழுந்தான்.

வரவர சீனுவின் ஆத்திரமும், வேகமும் ரொம்பத்தான் அதிகமாகிவிட்டன.

எந்தப் பேச்சை எடுத்தாலும் அதை எப்படியாவது—மூத்தவர் வெறும் வேடத்தில் நிற்குங்கால் என்ற கேள்வியில் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறான்.

அவன் ஆத்திரமும், கோபமும் நியாயம்தானோ?

இந்தியாவின் நிலை தற்சமயம் அவன் சொல்வது போலத்தான் இருக்கிறதோ?

யோசிக்க யோசிக்க குழப்பம் அதிகரிக்கிற மாதிரியே இருந்தது.

எழுந்து கொல்லை கட்டுக்குப் போய் தோய்க்கிற கல் மேல் உட்கார்ந்து கொண்டான்.

இட்லிக்கோ, தோசைக்கோ அரைத்துக்கொண்டிருந்த அத்தை பார்வையை நிமிர்த்தி இவனைப் பார்த்துவிட்டு, கை காரியத்தைத் தொடர்ந்தாள்.

...மூத்தவர் வெறும் வேடத்தில்...

அப்பு பிடிவாதமாக கவனத்தைத் திருப்ப முயன்றான்.

ஒரு பக்கமாய் உட்கார்ந்து தண்டால் பஸ்கி எடுத்துக் கொண்டு, வரும் போகும் எறும்புகளை ஸ்வாஹா செய்த ஓணானை அரை நிமிஷம் பார்த்தான்.

கூட்டமாய் நித்யமல்லி பந்தல் கீழ் அமர்ந்து, காச் கூச்சென்று உரக்கப் பேசும் தவிட்டுக் குருவிகளில் கொஞ்சம் லயித்தான்.



திடுமென்று வாசப் பக்கத்திலிருந்து கல்யாணி, அவன் கடைசி தங்கை, ஓடி வந்தாள். பின்னாலேயே துரத்திக் கொண்டு தம்பி கோபாலன்...

''அண்ணா...அண்ணா பாரு, கோபு அடிக்க வரான்.''

கல்யாணி எட்டிப் பிடிக்கப் பார்த்த சின்னண்ணனின் கைக்கு அகப்படாமல் அப்புவைச் சுற்றிச்சுற்றி ஓடினாள்.

''ராஸ்கி-வாடி இங்க... ஏண்டி என் பேனாவ எடுத்த? நிப்ப பிளந்து வைச்சிட்டு, சாதுமாதிரி எனக்குத் தெரியாதுன்னு சாதிக்கறியா?''—

''சத்தியமா நா உடைக்கலை...''

''பொய் சொன்னா கொன்னுடுவேன்.''

''அண்ணா, பாருண்ணா...''

''செய்யறதையும் செஞ்சிட்டு, பொய் சொல்றவற்றைப் பாருண்ணா...தடிச்சி...மொட்டச்சி...''

கையில் அகப்பட்டவளை அப்பு தடுக்கும்முன்-இன்னொருதரம் அழுத்தமாக 'மொட்டச்சி' என்று சொல்லி ஓங்கி கோபு குட்ட,

''டேய்...''

அரிசி மாவு கையோடு அத்தை பதட்டத்துடன் எழுந்தாள்.

அவசரமாய் கோபாலனை நெருங்கி, அவன் தோளைப் பற்றி சப்பென்று கன்னத்தில் மாவு கையாலேயே அறைந்தாள்.

''சொல்லாத, அந்த வார்த்தைய இன்னொரு தரம் சொல்லாத...''

அத்தையா?

வாயைத் திறந்து, உரக்க குரல் எடுத்துப் பேசாத அத்தையா?

"செத்துப்போனா சொல்லி திட்டுடா, நா வேண்டாங்கலை...ஆனா அந்த வார்த்தைய மட்டும் சொல்லி வையாதடா... அஸ்வினி தேவதைகள் ஆகாசத்துல நின்னுண்டு யார் எது சொல்லுவா, நாம ததாஸ்துனு சொல்லுவோம்னு காத்திண்டு இருப்பாடா... நீ எதையாவது திட்டி...அவா அப்படியே நடக்கட்டும்னு சொல்லிட்டா, நாளைக்கு இல வீணாப் போறதோட, உனக்கு தான்டா ஆயுசு பர்யந்தம் சுமையாயிடுவா...இப்ப நா உங்கப்பாக்கு ஆயிட்டாப்பல...அந்த வார்த்தைய சொல்லி மட்டும் வையாதடா...வேணான்டா பாவி..."

கோர்வை இல்லாமல் எதையோ குரல் செம்ம கத்தி விட்டு, கிணற்றடியில் அத்தை அப்படியே குந்தி, முழங்கால்களில் முகத்தைப் பதித்துக்கொள்ள, எதுவும் புரியாமல் அரை நிமிஷம் விழித்துவிட்டு, கோபுவும், கல்யாணியும் உள்ளே போக, அப்பு மாத்திரம் இருட்டாய் இருந்த அறையில் ஜகஜகவென்று விளக்கை ஏற்றிவிட்ட தினுசில் சிலிர்த்துப் போனான்.

தான் வீணாகப் போய்விட்டோமே என்ற ஆதங்கம், ஆத்தாமை இல்லை. ஆனால் கூடப் பிறந்தவனுக்கு சுமையாகிவிட்டோமே என்ற வேதனை.

அறியாமையால் திட்டும் மருமகனுக்கு, நாளைக்கு தங்கை பாரமாகிவிட அவனுடைய வாய் வார்த்தையே காரணமாகிவிடக் கூடாதே என்ற கரிசனம்.

எத்தனை அன்பு, அக்கறை இருந்தால் இப்படி ஒரு பேச்சு வெளிப்படும்?

மூத்தவர் வெறும் வேடத்தில் நிற்குங்கால்...

இல்லை யில்லை...இல்லை...

இந்த நாட்டில் உள்ள அத்தனை பெரியவர்களும் வேஷதாரிகள் இல்லை, சுயநலவாதிகள் இல்லை.



இருக்க முடியாது...

மனதை புண்படுத்திய ஒரு சிலரை முன் உதாரணமாகக் கொண்டு ஒரு வேதனை மிகுந்த நிமிஷத்தில் பாரதி அந்த வரிகளை எழுதி இருக்கலாம்—அதற்காக அவைகளைக் காட்டியே இந்த மண்ணின் முதியவர்களை ஒட்டுமொத்தமாக எடை போடுவது, கயவர் என்று பழிப்பது, மேடையில் பேசுவது, தன் வாதத்தை நியாயப்படுத்தி கதைகள் எழுதுவது, எப்படி நியாயமாகும்?

ம்ஹூம் இல்லை—

—பாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு,
நல்லன யாவையும் நாடுறு நாடு.

அடுத்தமுறை சீனுவைப் பார்க்கும்போது, பாரதியின் இந்த வரிகளைச் சொல்லிக் காட்ட வேண்டும். உன் ஒருத்தன் அனுபவத்தை வைத்துக்கொண்டு எல்லாரையும் எடை போடாதேடா என்று சொல்ல வேண்டும். நல்லதும் கெட்டதும் எங்கும் இருக்கும், ஆனாலும் நீ எதிர்பார்க்கும் 'ஹிப்பி' புரட்சி இந்த மண்ணில் ஒருபோதும் தோன்றாது! உன் ஆத்திரங்களுக்குக் கடிவாளம் போடப் பழகிக்கொள் என்று சொல்ல வேண்டும்.

கிணத்தடியை நெருங்கி, குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்த அத்தையிடம் குனிந்து "எழுந்திரு அத்தை வெயில் சுள்ளுனு அடிக்கறது பாரு"—என்று சொன்னபோது, தன் குரல்கூட புதுசாக ஒலிக்கிற மாதிரி அப்புவுக்குப் பட்டது.

# தாய்

''அம்மா''—

''என்ன இந்து குட்டீ?''—

''என்னம்மா பண்ணிட்டு இருக்கீங்க''—

''ஒரு க்ளயண்டோட முக்கியமான விஷயம் பேச வேண்டியிருக்கு—அதுக்காக பாயிண்ட்ஸ் தயாரிச்சிகிட்டு இருக்கேன்...என்ன வேணும்மா?''—

''இல்லேம்மா...வந்து...''

''சொல்லு டார்லிங், அம்மாக்கு நாழியாவுது பாரு...''

''நாளன்னிக்கு எங்க ஸ்கூல்ல ஸ்போர்ட்ஸ் டே. மம்மி...நீங்களும், டாடியும் வரணும் மம்மீ...''

''நாளன்னிக்கா? ஏழாம் தேதியா? சாயங்காலமா? ஸாரிடா—அன்னிக்கு போர்ட் மீட்டிங் இருக்கு. முடிய ஏழு, எட்டு ஆயிடுமேடா, ஏன் முன்னாலியே சொல்லலை? ம்...? அப்பாவும் லண்டன்லேந்து அடுத்த வாரம்தான் வர்றார்...''

''ப்ளீஸ் மம்மி... எல்லார் அப்பா, அம்மாவும் வருவாங்க மம்மி...''



''முடிஞ்சா வரமாட்டேனா இந்தும்மா? மறுநாள் ஸண்டே தானே? அன்னிக்கு நீயும் நானும் 'சோழா'க்குப் போய் ஒண்ணா ஸ்விம் பண்ணிட்டு சாப்பிட்டுட்டு வரலாம்...ஓ.கே?''—

''ப்ராமிஸ்?''—

''பிராமிஸ்''—இப்ப அம்மாவத் தனியா விட்டுட்டு ஓடிடுடா...''

''மம்மி.''

''எஸ் இந்து?''—

''வெளிலே போகப் போறீங்களா?''—

''ம்ம்—ரோட்டரி கூட்டத்திலே விமன் ஆஃப் இண்டியாவைப் பத்தி பேசப்போறேன்''—

''மாலை போடுவாங்களாம்மா?''—

''போடுவாங்கடா!''—

''அப்பாவும் வர்றாராம்மா?''—

''வரார் ஸ்வீட் ஹார்ட்...''

''நா...நானும் வரட்டுமா?''

''இது பெரியவங்க கூட்டம் இந்து. உனக்கு போரடிக்கும். உமாவை விட்டு உன்னை பீச்சுக்கு அழைச்சிட்டுப் போகச் சொல்றேன். ஹவ் அபௌட் ஐஸ்கிரீம்?''

''உங்க மடிலே நா உக்காந்துக்கட்டுமாம்மா?''

''வேணாம் டார்லிங்...புடவை கசங்கிடும். கிட்ட வா... அம்மா உனக்கு ஒரு கட்டி முத்தா கொடுக்கறேன்... உமா, இவளை அழைச்சிட்டு பீச்சுக்குப் போயிட்டு, வர்றப்போ தாஸப்ரகாஷ் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடு, என்ன?''

''இந்து தூங்கிட்டாளா, உமா?''

''இப்பத்தான் படுக்க வைச்சேன். தண்ணி கேட்டா, எடுக்க வந்தேன்...''

''அந்த டம்ளரை என்கிட்ட குடு. நா எடுத்திட்டுப் போறேன்.''

''ஹாய் மம்மி...''

''ஹலோ—குட்டிம்மா...ஸர்பரைஸ் பாத்தியா?''

''மம்மி...மம்மி...மம்மி...மம்மி...''

''ஷ்...ஷ்...போதும்...போதும்டா...இந்தா தண்ணி...''

''வேணாம்...கிஸ் வேணும்...நிறைய...அம்மா. இப்ப உங்க மடிலே நா உட்காரலாமா? புடவை கசங்கினா பரவாயில்லையா?''

''உட்காருடா...வா...இந்தக் கன்னத்துக்கு ஒரு கிஸ்—அந்த கன்னத்துக்கு ஒரு கிஸ். போதுமாடா?...இந்தா தண்ணி; குடிச்சிட்டு சமர்த்தா படுத்துக்கோ...மம்மி, இன்னிக்கு உனக்கு ஜோரா ஒரு கதை சொல்லப் போறேன்...''

''ஹைய்யா...மம்மி...என்...ம...ம்...மி...''

''ஓ. கே. ஓ. கே. கழுத்தை விடுடா...படு...படுத்தாச்சா?...ஒரு ஊர்ல ஜாக் ஜாக்னு ஒரு பையனாம்... அவனுக்கு ஒரு அம்மாவாம்...''

''மம்மி...நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க...''

''தாங்க்யூடா கண்ணா— நீயும்தான் கொள்ளை அழகு...சரி...பேசாம கதையைக் கேளு...அந்தப் பையன் ஒரு நாள்...என்ன உமா?''

''மிஸ்டர் ராமன் போன்ல கூப்பிடறார்... அர்ஜெண்டா பேசணுமாம்...''

''பத்து நிமிஷம் கழிச்சி நா பேசறேன்னு சொல்லேன். இரு. இரு, வேணாம், நானே வரேன்.''



''கதை மம்மி?''

''மிஸ்டர் ராமன் ஒரு முக்கியமான க்ளயண்ட் இந்து. அவசியம் இல்லாட்டி கூப்பிடமாட்டார். இன்னொரு நாள் அம்மா கதை சொல்றேன்...குட் நைட் டார்லிங்...''

''கேக் ரொம்ப நல்லா இருக்கு மாலினி...வாங்கினதா இல்லே, வீட்டுலே செய்ததா?''

''வாங்கினதுதான் ராஜி... வீட்டுல செய்ய நேரம் எங்கே?''

''எம்.பி.ஏ. படிச்சிட்டு, ஹஸ்பண்ட்கூடவே ஆபீஸ்லேயும், பார்ட்னரா இருந்து, எல்லாத்தையும் கவனிச்சுக்கறே—நேரம் இருக்காதுதான்... ஆண் பிள்ளைக்கு சரியா பெரிய வேலையும் பார்த்துகிட்டு வீட்டையும் இத்தனை அழகா நீ எப்படித்தான் கவனிக்குறியோ... என்னால முடியாதும்மா...''

''கஷ்டமாதான் இருக்கு...ஆனாலும், நம்ம வீட்டு வேலய நாமதானே கவனிக்கணும்.''

''இதான் உன் பெண்ணா?''

''இந்தா—குளிச்சிட்டு வந்திட்டியா... இங்க வா டார்லிங். ஸே ஹல்லோ ஆண்ட்டி...இது அவங்க டாட்டர் அனுராதா...அழைச்சிகிட்டுப் போய் விளையாடுடா...''

''இந்த பொம்மை மாதிரி நா பார்த்ததே இல்லே—இந்தா...'

''எங்கப்பா லண்டனிலேந்து வாங்கிட்டு வந்தார்...''

''அந்த வீடு?''

''அது பம்பாய்ல வாங்கினது...உன் ஃப்ராக்லே இது என்ன பொம்மை, பொம்மையா?''

''எங்கம்மாவே எம்பராய்டரி பண்ணி தைச்சது...''

''உங்கம்மாவேவா?''

''ஆமா—என் ஃப்ராக்ஸ் எல்லாம் அம்மாவே தைப் பாங்க...எங்கம்மா ரொம்ப நல்லவங்க, தெரியுமா...''

''எங்கம்மாவும்தான் நல்லவங்க; ரொம்ப கெட்டிக் காரங்க...ஆபீஸிலே அப்பா மாதிரி எங்கம்மாவும் வேலை பண்ணறாங்களே...''

''எங்கம்மா கேக் பண்ணுவாங்க... என்னோட பீச்சுக்கு வருவாங்க...என்னை குளுப்பாட்டி, ட்ரெஸ் பண்ணுவாங்க...கதை சொல்லுவாங்க...எப்பவும் என் கூடவே இருப்பாங்களே...''

''எங்கம்மாவும்தான் கதை சொல்லுவாங்க...ஆமா, வந்து வந்து உங்கம்மா எப்பவும் உன்கூடவே இருப்பாங் களா அனு?''

''எ...ப்...ப...வும்...''

''உமா, டாக்டர் வந்திருக்கார்னு சொல்லி இந்துவை கூட்டிட்டு வா...என்னமோ தெரியலை டாக்டர், ஒரு வாரமா இந்து சரியாவே இல்லே. எது கேட்டாலும் சரியா பதில் சொல்லறது இல்லே... 'ம்'முனு இருக்கா—ஒழுங்கா சாப்பிடறதில்லையாம், விளையாடறதில்லையாம்—உமா சொல்றா...கிட்ட நின்னு கவனிப்போம்னா முடியாதபடி எனக்கும் இப்பப் பாத்து ஆபீஸ்லே எக்கச்சக்க வேலை...''

''சுந்தர் எங்கே?''

''அவர் ஊர்ல இல்லே டாக்டர். ஒரு செமினாருக்காக கல்கத்தா போயிருக்கார்... நாளைக்கு வந்திடுவார்... கூப்பிட்டா வராளா பாருங்க, இந்தூ...''

''வந்துட்டேன் மம்மி...''

''என்னம்மா பண்ணிட்டு இருந்தே? உன்னை செக்அப் பண்ண டாக்டர் அங்கிள் வந்திருக்கார்—ஸே, குட் மார்னிங்''



''குட் மார்னிங்''—

''குட் மார்னிங் இந்தூ; இப்படி வா...ஆ...சொல்லு''

''ஆ...''

''இங்க வலிக்குதா? இங்க?''

''ம்ஹூம் இல்ல...''

''என் பக்கத்திலே உட்காரு. அடேயப்பா...என்னமா வளர்ந்திட்டம்மா! உன்னை இத்துனூண்டு குழந்தையா வெளிலே எடுத்துப் போட்டவன் நான்தான், தெரியுமா?''

''அம்மா தொப்பைலேந்து என்னை வெளிலே எடுத்தது நீங்கதானா அங்கிள்?''

''நானேதான்-''

''எப்படி எடுத்தீங்க? அம்மா தொப்பைல ஜிப் இருக்கா...திறந்து எடுத்திங்களா?''

''அது...அ...அப்படி இல்லே இந்தூ...அதை விளக்கிச் சொன்னா உனக்கு இப்பப் புரியாதும்மா...''

''டாக்டர் படிப்பு படிச்சாதான் புரியுமா?''

''ம்—ஆமா—பெருமூச்சு விடு...திரும்பு...''

''அங்கிள்...''

''என்னம்மா?''

''வந்து...வந்து...தொப்பைலேந்து எடுக்குற மாதிரி, திரும்ப தொப்பைக்குள்ளியே என்னை வைச்சிட முடியுமோ?''—

''ஆ? அது எப்படி முடியும் இந்து?''—

''என் முடியாது அங்கிள்?''—

''இப்ப நீ பெரிசா வளர்ந்திட்டயே!''—

''மருந்து கொடுத்து பெரியவளை சின்ன பாப்பாவா சுருக்க முடியாது?''

''ம்ஹூம்—முடியாது...''

''ஏன் முடியாது?''

''வந்து—அ, இன்னும் அந்த மருந்தை யாரும் கண்டு பிடிக்கலையே''—

''நீங்க பெரிய டாக்டர்னு மம்மி சொல்வாங்களே, நீங்ககூட கண்டுபிடிக்கலியா அங்கிள்? சுருக்க கண்டு பிடிச்சி, அந்த மருந்தை எனக்குக் கொடுத்து திரும்ப அம்மா தொப்பைக்குள் போக வைச்சிடுங்க அங்கிள். அப்பத்தான் அம்மாவோட எப்பவும் என்னால இருக்க முடியும். ப்ளீஸ் அங்கிள், ப்ளீஸ்...''

கெஞ்சலாக, ஆனால் தீவிரமாக இந்து பேசி நிறுத்த, மாலினி திடுக்கிட்டுப் போனாள். இந்துவின் உடம்பில் கோளாறு இல்லை, மனசில்தான் என்பது அப்பட்டமாய் புரிய எதிரில் அமர்ந்திருந்த டாக்டரை ஒரு கணம் வெறித்துவிட்டு பார்வையை தழைத்தாள்.

சில நிமிஷங்கள் மௌனித்து, யோசித்து, நாளைக்கு சுந்தர் கல்கத்தாவிலிருந்து வந்ததும் சொல்ல வேண்டியது என்ன என்பதை தீர்மானித்து விட்டவளாய், மகளை எட்டிப் பிடித்து இழுத்து ''புடவை கசங்கினா பரவா யில்லை, அம்மா மடிலே உட்காருடா...'' என்று மெதுவாக அவள் கூற, அதை நம்ப முடியாதது போல இந்து கண்களை விரித்தாள். அப்புறம், 'ஐ லவ் யூ மம்மி' என்று சொல்லி அழுந்த தாயைக் கட்டி முத்தமிட்டாள்.

# மரம் வைத்தவன்

எதிரில் நிழலாடியது.

பேனாவை கீழே வைத்துவிட்டு நிமிர்ந்தேன்.

முத்தாத்தா...

ஒட்டின முகம். பெரிசாய் குங்குமப் பொட்டு, ஏகத்துக்கு எண்ணெய் தடவி இழுத்து முடியப்பட்ட முடி, மஞ்சளும் பிசுக்குமாய் தாலிக்கயிறு. கையிலும், காலிலும், வெள்ளி காப்பு, மெட்டி. வாய் நிறைய புகையிலையோடு கலந்த வெற்றிலைச் சாறு. நிறை மாச கர்ப்பத்தை உணர்த்தும் வகையில் கூட்டிகுமிந்து இறங்கிவிட்ட வயிறு.

''ஸ்ஸ்... யப்பாடி...'' தன் கனம் தனக்கே தாங்காத தினுசில் சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள்.

இந்த முத்தாத்தாளைப் பத்து வருஷங்களுக்கும் மேலாக நான் அறிவேன்.

இந்த ஊருக்கு நாங்கள் வந்த புதிதில் என் வீட்டு வேலைகளை இவள் செய்ய வந்ததிலிருந்து பழக்கம்.

கிட்டத்தட்ட முத்தாத்தாளுக்கும் எனக்கும ஒரு வயசாக இருக்கும் என்பது என் அபிப்ராயம்.

''உன் வயசென்ன முத்து?'' என்று கேட்டால், ''ஆருக்குத் தெரியும்? அது ஆச்சு நாலு கழுதைக்கு ஆவுறது'' என்று வேடிக்கையாய் பதில் சொல்வாள்.

திருமணமாகி நான் இங்கு இருபது வயசில் வந்த போது முத்தாத்தாளுக்கு ஏற்கெனவே நாலு, இரண்டு வயசில் இரண்டு பிள்ளைகள் இருந்தன.

புருஷன் வேலாயுதத்துக்குப் பக்கத்து உரத் தொழிற் சாலையில் வேலை. நானூறு சொச்சம் சம்பளம்—போனஸ் எதற்கும் குறைவில்லை.

முத்தாத்தாளைப் பற்றி இங்கே தனியாய் கொஞ்சம் சொல்ல வேண்டும். கண் கண்டால் கை செய்யும் ரகம் என்பார்களே, இவள் அந்த ஜாதிதான். பெருக்குவதும் மெழுகுவதும், பத்து தேய்ப்பதும், துணி துவைப்பதும் படு நெறுவிசு. தரையில், ஜன்னலில், தூசி, துரும்பு, பாத்திரத்தில் பிசுக்கு? ம்ஹூம்... கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு பார்த்தாலும் அகப்படாது. முறுக்கு சுற்ற மாவு இடிக்க வேணுமா? ரெடி; மெஷினுக்குச் சென்று வர வேண்டுமா? தயார். இப்படி எந்த வேலையை எப்போது சொன்னாலும் நிமிஷத்தில் பாங்குற செய்தவள் மூன்றாவதை உண்டாகி, அது பிறப்பதற்கு சில மணி நேரங்கள் வரையிலும்கூட அத்தனை வேலைகளை சுறுசுறுப்பாகப் பார்த்தவள்; குழந்தை பிறந்த பிறகு ''நா இனிமே வேலைக்கு வரலைம்மா'' என்றாள் எட்டாம் நாள்.

''ஏன் முத்தூ?''—

''பச்சை உடம்புக்காரி, பசங்களை கவனிச்சு, ஆக்கிப் போட்டுகிட்டு வீட்டோட கிட, எதுக்காவ லோல் படறேனு புருஷன் சொல்றாரும்மா...''

பேசியவள் கண்களில், கணவன் தன்னை பூமாதிரி தாங்குகிறான் என்ற சந்தோஷ ஜொலிப்பு.

அதற்குப் பிறகு அவ்வப்போது மதிய நேரங்களில் கைக்குழந்தை ஜோதியுடன் வீட்டுக்குப் பின் பக்கமாய் வந்து தாவாரத்தில் காலை நீட்டி உட்கார்ந்து கொள்வாள்.



போனவில் வேலாயுதம் குழந்தைக்கு கொலுசு பண்ணிப் போட்டிருப்பதை, தனக்கு கால் சவரனில் மூக்குத்தி செய்து கொடுத்திருப்பதை, பெருமையாய் கூறுவாள்.

ஜோதிக்கு எட்டாம் மாசம் நடக்கையில் முத்தாத்தாவின் உடம்பு மறுபடி பூசினமாதிரி ஆக, சந்தேகத்துடன் கேட்டேன்.

''என்ன முத்தூ... குளிச்சிக்கிட்டுதானே இருக்குறே?''

அவள் வெட்கத்துடன் தலை குனிந்தாள்.

''என்ன முத்து?''—

''இப்ப எனக்கு மூணு மாசம்மா...''

கைப் பிள்ளைக்கு எட்டு மாசம்— வயிற்றில் மூன்று மாசம்!

என்ன கஷ்ட காலம் இது!

மூத்தது சவலையாய் போய்விடாதோ?

சின்னதாக எழுந்த எரிச்சலுடன் நான் பேசினேன்.

''லட்சணமா இரண்டு பிள்ளைங்க, ஒரு பெண்ணுனு ஆயாச்சு... அதுங்களைப் படிக்க வைச்சி முன்னுக்குக் கொண்டு வர்றதைப் பத்தி கவலைப்படாம என்ன அசட்டு காரியம் இது முத்தூ? பிள்ளைங்களை நினைச்சிக்கிட்டு கொஞ்சம் கவனமா இருந்துக்கக் கூடாதா?''

''இது பொறக்கறதால, மூத்ததுங்களுக்கு சோறு போடாம இருந்திடப் போறமா? இல்லை, துணிமணி வாங்கித் தராம ஒதுக்கிடுவமா? என்னம்மா சொல்றீங்க நீங்க?''

''சோறு போட்டு, துணி வாங்கிக் கொடுத்தா ஆச்சா? முன்னுக்கு வர படிப்பு வேணாமா?...மூத்தவன் மலை

யனுக்கு இப்ப என்ன வயசாச்சி? ஆறா? பள்ளிக்கோடத்துக்கு அனுப்பறதா உத்தேசம் இருக்கா, இல்லியா? படிச்சாதானே நாளைக்கா நல்லா சம்பாதிக்கலாம்?''

முத்தாத்தா கையைக் கொட்டிக்கொண்டு சிரித்தாள்.

''என் ஊட்டுக்காரர் என்னத்தம்மா பெரிசா படிச்சிருக்கிறார், அவுரு கை நிறைய சம்பாதிக்கலையா? எம் புள்ளைங்களும் அப்பனாட்டம் ராசாவா வளர்ந்திடும். ஊடு நிறைய புள்ளைங்க இருக்க கொடுத்து வைச்சிருக்க வேணாமா? என்னம்மா நீங்க?''

அன்றைக்குப் பேச்சு அதோடு முடிந்தது.

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் எதையும் கேட்க, ஏற்றுக்கொள்ள மறுப்பவளிடம் என்னவென்று பேசுவது?

அந்தப் பிள்ளை பிறந்த ஆறாம் மாசம் ஒன்று குறைப் பிரசவமாய் போனது. அடுத்த வருஷமே இன்னொன்றை முத்தாத்தா வயிற்றில் சுமந்தபோது, சோகை பிடித்துப் போன அவள் உடம்பின் பலவீனத்தைக் காண சகியாமல் கோபித்தாலும் கோபிக்கட்டும் என்று கேட்டுவிட்டேன்.

''மறுபடி உண்டாயிருக்கியா முத்து? உடம்பு சுத்தமா நல்லா இல்லேனு மூக்கால அழுதுகிட்டு, வருஷத்துக்கு ஒன்னை பெத்துக்கிட்டே போனா எப்படி? அப்புறம், எப்பத்தான் தேறி வர்றது? ம்...? நா ஒண்ணு சொல்வேன், கேப்பியா? டவுன் ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டரம்மாவைப் பாரு... உடனடியா இதுக்கு வழி சொல்வாங்க... இன்னும் ஐம்பது நாள் தாண்டலை... சுலபமா முடிச்சிடலாம்...''

முத்தாத்தா கண்களை அகல விரித்தாள்.

''என்னம்மா சொல்றீங்க, நீங்க?''

''சொல்றேன் சோத்துக்கு உப்பில்லேனு—அட, என்ன முத்து, இதுகூடவா புரியலை? இது உனக்கு அஞ்சாவது



குழந்தை நடுவுலே, குறையா போனது வேற... டாக்டரம்மாவைப் பார்த்து, கருவக் கலைச்சிட்டு குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்துக்குறது உனக்கும் நல்லது; உன் குடும்பத்துக்கும்...''

என்னை முடிக்கவிடாமல் முத்தம்மா ''வலவ'' என்று உள்ளங்கையால் வாயில் தட்டினாள். காதைப் பொத்தினாள். கேட்கக்கூடாத எதையோ கேட்டுவிட்ட மாதிரி துடித்தாள்.

''இந்த வார்த்தையைச் சொல்ல உங்களுக்கு எப்படிம்மா மனசு வருது? நீங்களும் புள்ளை குட்டிங்களைப் பெத்தவங்கதானே? மனசறிஞ்சுதான் பேசறீங்களா? குழந்தைங்க, சாமியாப் பாத்து கொடுக்கற வரம்... அதப்போயி வேணாம்னு தடுக்க நாம யாரு?''—

''அதான் ஏற்கனவே நாலு வரத்தைக் கொடுத்திட்டாரே, முத்து... அஞ்சாவதா எதுக்குன்னுதான் கேட்கறேன்...''

''அ? அப்படி சொன்னா சரியா? அதது தானா வர்றப்ப, நாம தடுக்கறது பாவம்.''—

''என்ன பாவம்! இரண்டு குழந்தைங்க போதும்னு நாங்க தடுத்திடலியா? பெத்து வளர்க்க சிரமப்படறத்துக்கு பதிலா, பெறாம இருக்கிறது நல்லது இல்லியா?''

''ஊடு நிறைய புள்ளைங்க இருக்குறதுதான் நாளைக்கு நமக்கு சொத்து தலைவலி, கால் வலின்னு நமக்கு ஆதரவு ஆரு? அத மறந்திட்டு பேசக்கூடாதும்மா, ஆமா, சிரமம், சிரமம்னு சொல்றீங்களே, இன்னாமா சிரமம்? அதுங்களா பொறக்குது, அதும்பாட்டுக்கு வளருதுங்க. இதுல நமக்கு இன்னா?''—

அவளுடைய அஞ்ஞானப் பேச்சு எனக்கு சிரிப்பை வரவழைத்தது.

''அதுங்களா பொறந்து வளருதா? என்ன முத்து அசடாட்டம் பேசறே? பெத்து, வளர்த்து, ஆளாக்குற பொறுப்பு பெத்தவங்களுக்கு இல்லியா? காலம் இருக்குற நிலைலே, விலைவாசி எல்லாம் தாறுமாறா ஏறிட்ட இந்த நாளில இரண்டைப் பெத்து, நல்லவிதமா ஆளாக்கறத்துக்குள்ள அவனவனுக்கு விழி பிதுங்கிப் போவுது... நீ என்னடான்னா...''

''வேணாம். இந்தப் பேச்சை இதோட விடுங்கம்மா. மரம் வைச்சவன் தண்ணி ஊத்தாமலியா இருந்திடுவான்? பட்டணத்துக்காரங்க மாதிரி மனசை கல்லாக்கிக்கிட எங்களால முடியாது. நடக்குறது நடக்கட்டும்...''

அதன்பிறகு வந்த வருஷங்களில் முத்தாத்தா முழுசாக இரண்டே பெற்றாள். அரைகுறையாக மூன்றை வாரிக் கொடுத்தாள்.

இதனடுவில் கேட்பார் பேச்சைக் கேட்டுக்கொண்டு வேலாயுதம் குடிக்கத் துவங்க, வீட்டுக்கு வரும் பணம் பத்தாமல், தோடையும், காப்பையும் அடகு வைத்து, மேற்கொண்டு கடன் வாங்கி இரண்டு பசு மாடுகளை வாங்கிக் கட்டி, பால் வியாபாரம் பண்ண முற்பட்டாள் முத்தாத்தா.

அவளுடைய பிரதான வாடிக்கை, நான்தான்.

காலையில் இரண்டு, மாலையில் இரண்டு என்று நாளுக்கு நாலு லிட்டர்.

பாலை ஊற்றிவிட்டு வைக்கோல் வாங்க காசில்லை என்று பாதி நாட்களுக்கு, குறுவாள் பொட்டுக் கூடையுடன் வந்து தோட்டத்தில் முளைத்திருக்கும் புல்லை அறுத்துக்கொண்டு போவாள்.

அதிசயமாய் இரண்டு வருஷ இடைவெளிக்குப் பின் வயிற்றில் இப்போது ஏழாவது...



எதிரில் உட்கார்ந்திருந்தவளை ஊன்றிப் பார்க்கையில் நமநமவென்று உள்ளுக்குள் கோபம் கனன்றது.

திடகாத்திரமாய் இருந்தவள், இன்று எப்படி ஆகிவிட்டாள்?

பதினைந்து வயசில் கல்யாணம். முப்பது ஆவதற்குள் முழுசாய் ஆறு போனது மூன்று. வயிற்றில் ஒன்று. போதுமான நகையும் நட்டுமாய் தலைநிமிர்ந்து நடமாடியவள், இன்று கிழவிபோல தளர்ந்து, ஒட்டிப்போய் விட்டாளே!

''என்ன முத்து, வேளை கெட்ட வேளைல வந்திருக்கே? முகம் சுணுங்கி இருக்கே? இடுப்பு நோவுதா? சூடா காபி தரட்டுமா?''—

அவள் பதில் பேசாமல் இருக்க, உள்ளே சென்று காபி நிறைந்த டம்ளருடன் வந்தேன்.

''இந்தா... குடி...''

மெதுவாகக் குடித்துவிட்டு, லோட்டாவைக் கழுவிக் கொண்டு வந்தவள், முந்தானையால் முகத்தைத் துடைத்தாள்.

''மாடுங்க பட்டினியா கிடக்குது... பொட்டு வாங்கி வச்சா தாவலை... பத்து ரூபா பணம் தர்றிங்களா?''—

''ஏன், மேய்ச்சலுக்கு அனுப்பலியா?''

''மலையன் ஊர்ல இல்லம்மா... மாமா வூட்டுக்குப் போயிருக்கான்... ஏளுமலைக்கு காய்ச்சலா இருக்குது. வெயில்ல போமாட்டேனுட்டான்...''

''ஏழுமலைக்குக் காய்ச்சலா? நேத்துகூட அவனை சினிமா கொட்டகைல பார்த்தேனே!''—

முத்தாத்தா பதில் கூறாமல் தலையை குனிந்துகொண்டாள்.

முத்தாத்தாவின் மூத்த பையன் மலையனுக்கு பதினாலும், இளையவன் ஏழுமலைக்கு பன்னிரண்டும் ஆகிறதே ஒழிய, ஒரு வேலைக்கும் துப்புகெட்டதுகளாக இரண்டும் வளர்ந்து விட்டன.

படிப்பு ஏறவில்லை; கைக்காரியம் எதுவும் வகை இல்லை. பீடி குடிக்கும்; சினிமா பாட்டு ஒன்று விடாமல் பாடும்—இஷ்டம் இருந்தால் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்று வரும். அவ்வளவுதான்.

''சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே முத்து! உம் பசங்க போக்கு கொஞ்சம்கூட நல்லா இல்லே. ஐயாகூட இரண்டு நாள் முந்தி வருத்தப்பட்டுக்கிட்டார். கண்டிக்கக் கூடாதா?''

முத்தாத்தா பெருமூச்சுடன் எழுந்து நின்றாள்.

''விளையாட்டுப் பசங்க... அதுங்களுக்கா ஒண்ணும் புரியலை... கேட்பார் பேச்சைக் கேட்டுக்கிடுதுங்க... ம்ம்... வயசு வந்தா தானே தெளிஞ்சிடும்மா... இதுக்காக வீணா ஏன் லோல் படணும்?''—

சமாளிப்புப் பேச்சாக எதையோ கூறிவிட்டு, முத்தாத்தா பணத்துடன் போய்ச் சேர்ந்தாள்.

அடுத்த வாரம் அவளுக்கு ஏழாவது குழந்தை பிறந்தது. ரொம்ப நேரத்துக்கு நஞ்சு விழாமல் வலியும், உதிரப்போக்கும் அதிகமாய் இருந்ததில் அந்த பத்து நாட்களும், மலையனும், ஏழுமலையும் பாலைக் கறந்து மாற்றி மாற்றி எடுத்து வந்தார்கள்.

பால் ஒரே ஜலம்.

ஏன் இப்படி?—என்ன சமாசாரம், என்று தோட்டக்காரனை அனுப்பி விசாரிக்க, அவன் போய்விட்டு வந்து, பாதி பாலை அம்மாவுக்குத் தெரியாமல் டீ கடைக்கு விற்று விட்டு தண்ணீர் கலந்து எடுத்து வருவதையும், வயசு



பதினைந்து ஆகவில்லை. அதற்குள் மாமா பெண்ணை மணப்பேன் என்று மலையன் பிடிவாதம் பிடிப்பதையும், அடுத்தவன் தீபாவளிக்கு தமிழ் சினிமா கதாநாயகன் ஒருவன் அணியும் டீ ஷர்ட் போலவே நூற்றி பத்து ரூபாய் கொடுத்து வாங்கினால்தான் சரி என்று அடமாக இருப்பதையும், ஜோதி பேதி கண்டு எழுந்திருக்காமல் படுத்திருப்பதையும், வரவர தலைகால் புரியாமல் வேலாயுதம் குடித்துவிட்டு வந்து ரகளை பண்ணுவதையும், முத்தாத்தா கண்ணால் ஜலம் விட்டு அழுவதையும் நீளமாய் கூறினான். கேட்கக் கேட்க என் மனசு கனத்துப் போனது.

நன்றாய் வாழ வேண்டிய குடும்பம் அறியாமையால் சீரழிந்து போகிறதே என்ற வேதனையால் விடாமல் நாலு நாட்களாய் நான் அவஸ்தைப்பட்டதற்கு சிகரம் வைத்த தினுசில் அன்று காலை தூங்கி எழுந்ததும் அந்த சேதி காதில் விழுந்தது.

வெறும் வயிற்றில் சாராயத்தை அதிகமாய் குடித்து விட்டு, பிதற்றலும், தள்ளாட்டமுமாய் வீட்டுக்குப் புறப்பட்ட வேலாயுதம் கண்மண் தெரியாமல் வந்த லாரியின் அகோரப் பசிக்கு இரையாக, இருட்டை சாதகமாக்கிக் கொண்டு லாரிக்காரன் நிற்காமல் ஓட., அப்புறம் என்ன? வேலாயுதத்தின் கதை இப்படித்தான் யாரும் எதிர்பார்க்காத வகையில் முதல்நாள் இரவே முடிந்திருந்தது.

தொழிற்சாலை நண்பர்களும், இதர குடிசைவாசிகளுமாய் சேர்ந்து, எக்கச்சக்கமாய் வேட்டு வெடித்து, மோளம் கொட்டி, பூப்பல்லக்கில் வேலாயுதத்தை தூக்கிச் சென்று புதைத்தார்கள்; அதன்பின் சுத்தமாய் அவனை மறந்து போனார்கள்.

அடுத்து வந்த மாசங்களில் மளமளவென்று முத்தாத்தாளின் குடும்பம் சந்திக்கு வந்து நாற்றமாய் நாறத் தொடங்கியது.

பிரசவம் ஆனதிலிருந்து விடாமல் உதிரம் பட்டுக் கொண்டிருந்ததோடு, கணவன் இறந்த அதிர்ச்சியும் சேர்ந்துகொள்ள நடமாடும் சக்திகூட இல்லாமல் முத்தாத்தா ஒடுங்கிப்போக; மூத்தவன் பொறுப்பில்லாமல் மாமா வீட்டோடு உட்கார்ந்துகொள்ள; சினிமா சான்ஸ் வாங்கித் தருகிறேன் என்று யாரோ ஆசை காட்டியதில் பதின்மூன்று வயசு ஏழுமலை கறவை மாடு ஒன்றை ராவோடு ராவாக கால் விலையில் விற்று, பணத்துடன் ஓடிப்போக, இரண்டாங்கெட்டான் ஜோதி என்னைத் தேடிக்கொண்டு வந்து, ஒருநாள் அத்தனையும் சொல்லி விட்டு பிழியப் பிழிய அழுதது.

''காரியம் பண்ணறேன், அது செய்யறேன்று வந்து உட்கார்ந்துகிட்ட உறவுக்காரங்க நெல்லு, கேழ்வரகு, அத்தனையும் சுத்தமா காலி செய்திட்டு போயிட்டாங்க... வைச்சி சாப்பிட சாமான் எதுவும் இல்லே... கம்பெனி பணமும் வரலை. அம்மாவுக்குக் காய்ச்சல், மாடு கறக்க எனக்குத் தெரியலை... தம்பிங்க ஒண்ணும் புரியாம அளுவுதுங்க... நா என்னாங்க பண்ணுவேன்......'' என்று வெடித்துக் கதறியது.

என் கணவரிடம் கலந்து பேசிவிட்டு நூறு ரூபாய் பணத்தையும், காய்ச்சலுக்கான மாத்திரையும் ஜோதியிடம் கொடுத்தேன்.

''போய் பத்து நாளைக்குத் தேவையான மளிகைச் சாமானை வாங்கிட்டு வந்து, முதல்ல வயிறாரச் சாப்பிடுங்க. இந்த மாத்திரைகளை அம்மாகிட்டக் கொடுத்து டீ வைச்சி சாப்பிடச் சொல்லு. ரொட்டி வேணா வாங்கிக் கொடு. கொஞ்சம் உடம்பு முடிஞ்சா என்னை வந்து பார்க்கச் சொல்லு...''

ஜோதி மூக்கையும், கண்களையும் துடைத்துக்கொண்டு புறப்பட கூடத்துக்கு வந்து நாற்காலியில் அமர்ந்தேன்.



முத்தாத்தாவையும், அவள் குடும்பத்தையும் நினைக் கையில் பெருங்குடலில் முடிச்சுப் போட்டுக்கொண்டது.

முத்தாத்தா மாதிரி இந்த நாட்டில் இன்னும் எத்தனை ஆயிரம், லட்சம்பேர்கள் தம் தலையில் தாங்களே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கிறார்களோ?

குடும்பத்தைக் கட்டுப்படுத்துவது முக்கியம், பிறந்ததை நன்றாகப் பேணிவளர்ப்பது கடமை என்பதை என்றைக்கு இந்த நாட்டு மக்கள் உணரப் போகிறார்கள்?

மரம் வைப்பவன தண்ணீர் ஊற்றாமல் விடுவானா— என்று பழமொழி பேசிப் பொறுப்பை உதறுவது தவறு. தேர்ந்த விதைகளை விதைத்து, தண்ணீர் ஊற்றி அக்கறை யுடன் விவசாயி பராமரிக்க, கடவுள் கிருபையால் நல்ல மகசூல் கிடைப்பதுபோல, குழந்தைகளைப் பெறுவதும், வளர்ப்பதும் பெற்றவர் பொறுப்புதான். அவன் நல்ல குணவானாக, புத்திமானாக வாழ வேணுமானால் கடவுளின் துணையை வேண்டலாம் என்பதை எல்லாரும் என்று ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

நாட்டின் பலப் பிரச்சினைகளுக்கு இந்த ஜனத்தொகை பெருக்கம் அடிப்படைக் காரணமாக இருப்பதையும், தனி மனிதன் கட்டுப்பாடால் குடும்பம் நலனுண்டாகும், குடும்பநலத்தால் சமுதாய வளம் பெறும், சமுதாய வளத்தால் நாடே மேன்மையுறும் என்பதையும் என்று இந்நாட்டு மக்கள் உணர்ந்து செயலாற்றப்போகிறார்கள்?

என்னென்னவோ கேள்விகள் மனசைப் பிறாண்டிய வேகத்தில் கண்ணோரங்களில் நீர் திரண்டுவிட, அதை மறைக்கும் பாவனையுடன் நான் தலைகுனிந்து கண்களை மூடிக்கொள்கிறேன்.

# தேனடை

அது எனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

கிட்டத்தட்ட இருபத்தைந்து நாட்களாய் எனக்குள் சுழண்டு கொண்டிருக்கும் ரகசியம்

என் சகதர்மிணி அம்புலு—லோகல் ஆல் இண்டியா ரேடியோவுக்கும், வீட்டுக்கார கிழத்துக்கும்கூட இன்னும் கண்ணில் படாத சமாச்சாரம் எனக்கு மட்டும் தொிந்து போனது சாதாரணமாக நடக்கக்கூடியதா?

எங்கள் வீட்டுக்காரக் கிழம் இருக்கிறதே, அது சரியான எமன். வயசு ஆகிறது கிட்டத்தட்ட எழுபது. ஆனாலும் உருவிலிட்ட அப்பளக் குழவி மாதிரி டைய்ங் என்று இருக்கும்.

பெண்டாட்டி செத்து ஒரு மாமாங்கம் ஆகிறதாம்; பிள்ளைக்குட்டிகளுடன் போய் இருந்தால் மானக் குறைச்சல் என்று இதுபாட்டுக்கு இங்கு தனியாக இருக்கிறது.

தன் ஒண்டிக்கு இத்தனாம் பெரிய வீடு எதற்கு என்ப தோடு உபரி வருமானத்தையும் ஏன் விட வேண்டும் என்ப தால், சின்ன போர்ஷனை தான் வைத்துக்கொண்டு, பெரிசை எங்களுக்கு நூத்தி எண்பது ரூபாய்க்கு விட்டிருக் கிறது.



இந்த உள்ளங்கை போர்ஷனை வாடகைக்கு விட்டு விட்டு, என்னமோ சலவைக்கல்லால் இழைத்த அரண் மனையைக் கொடுத்திருக்கிற மாதிரி இது பண்ணும் அட்டஹாஸம் இருக்கிறதே; தாங்க முடியாது.

''டொக்டொக்குனு சத்தம் கேட்டுதே, என்னது? ஆணி அடிச்சியா? இல்ல, தரைல எதையாவது வைச்சிண்டு இரும்பு உலக்கையால தட்டுனியா? அதெல்லாம் பண்ணக் கூடாதுன்னு சொல்லி இருக்கேனோல்லியோ! மீறி நடந்தா காலி பண்ணுடானுடுவேன்... அவ்வளவுதான்...''

''ஏண்டிம்மா, பொம்மனாட்டி குடுத்தனம் பண்ற வீடா இது தோணலியே! வாச வராந்தால லாலி லாலியா ஒட்டடை தொங்கறதே! எங்காத்துக்காரி இருக்கறப்போ நீ பார்த்திருக்கணும், வீடு முத்துமாதிரி மின்னும்...''

''கார்த்தாலதான் பம்பு போட்டேன்; மணி இப்ப பதினொண்ணு ஆகலை, அதுக்குள்ள டாங்க் காலியா யிடுத்து. அப்படி என்ன பண்ணுவேள்? இரண்டு பேரும் குழாய திறந்துவிட்டுட்டு ''ராவணா'னு கூடத்துல வந்து உட்கார்ந்திண்டிருக்கேளோ? இன்னிக்கு போனாப் போற துனு திரும்பப் போடறேன். நாளைலேந்து சாயங்காலத் துக்கு முன்னால போடமாட்டேன். ஆமா, சொல்லி விட்டேன்.''

இப்படி எதையாவது சொல்லி கழுத்தறுக்கும் இந்தக் கிழத்தையும் இந்த வீட்டையும் விட்டால் எனக்கு வேறு போக்கிடம் இல்லையே, இதை யாரிடம் சொல்லி முட்டிக் கொள்ள?

டவுனும் இல்லாமல், கிராமமும் இல்லாமல் ஒரு ஊர். இதற்கு ஒரு பாங்க். ஒரு ஏஜெண்ட், ஒரு க்ளார்க், அடியன்தான் அந்த க்ளார்க்.

வாடகைக்கு வீடு பார்த்து, எதுவும் தோது படாமல், கடைசியில் ஊருக்கு வெளியில் கொஞ்சம் தனிபாய் இருந்த

இந்த வீடுநான் சரிபட்டு... அட, இப்போது இந்தக் கதை எதற்கு? ரகசியத்தைப் பற்றிச் சொல்ல வந்துவிட்டு வேறு எங்கோ போய்விட்டேனே!

இந்த வீட்டைச் சுற்றி கொஞ்சம் தோட்டம் உண்டு.

இரண்டு தென்னை மரங்கள்; ஒரு மாமரம்; ஒரு வேப்பமரம்...

இந்தப் பக்கமாய் துளசி புதர், அரளிச்செடி, நந்தியாவட்டைச்செடி, இத்தியாதிகள்.

தூங்கி எழுந்ததும் கிழம் இந்தத் தோட்டத்தை நாலு தரம் சுற்றி சுற்றி வரும்; ஊட்டி பொட்டானிகல் கார்டன்ஸ் என்று பெருமையுடன்.

ஸ்வாமிக்கு நாலு அரளி, நாலு நந்தியாவட்டை பூக்களைப் பறித்துக்கொண்டு மேலும் கீழுமாக செடிகளை ஆராயும்.

தென்னைமரத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே கிட்டத்தட்ட பத்து நிமிஷம்போல நின்று காய்த்திருக்கும் காய்கள், புதுசாய் பாளை வெடித்துவிட்டிருக்கும் குரும்பைகள் என்று ஒன்றுவிடாமல் தன் நொள்ளைக் கண்ணை வைத்துக்கொண்டு, வெயிலை மறைக்கக் கையை நெற்றியில் வைத்தபடி எண்ணிவிட்டுப் போகும்,

பன்னாடை, காய்ந்த மட்டைகள் கீழே விழுந்தால் கவனமாய் பொறுக்கிக்கொண்டு போய் பின் கொட்டகையில் போடும்...

மாம்பழ காலங்களில், மரம் பூ எடுத்த கையோடு, பகல் பூராவும் ஒரு கயிற்றுக்கட்டிலை மரத்தடியில் போட்டுக்கொண்டு அந்த மூன்று நான்கு மாசமும் காவலான காவல் இருக்கும்.

இப்படி கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு இது இருக்கையில் இதற்குத் தெரியாத ஒரு விஷயம் என்னிடம் அசப்பட்டுக்கொண்டு இருக்கையில் அதைக் குறித்து பெருமை படாமல் எப்படி இருப்பது!

போன மாசம்.

அமாவாசை ஆன நாலாம் நாள்.

கிழத்தின் தொண தொணப்பு பொறுக்கமாட்டாமல் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு, ஏணியை சாற்றி மொட்டை மாடிக்கு ஏறிப்போய் தண்ணீர் தொட்டியை சுத்தம் பண்ணிவிட்டு நிமிர்ந்தவன் அதைப் பார்த்தேன்!

வீட்டை ஒட்டி இருந்த தென்னை மரத்தின் உள் மட்டையில், அதன் தண்டைக் கவ்விப் பிடித்துக்கொண்டு, முறம் அகலத்துக்கு என்ன அது!

எக்கிப் பார்க்கையில் புரு புருவென்று சின்னச் சின்ன கரும் புள்ளிகளாய் ஈக்கள் பறப்பதும், உட்காருவதும் புரிகிறது.

அட, தேன் அடையா!

ஒரு நிமிஷம் அப்படியே நின்று அந்த தேனீக்களின் சுறுசுறுப்பை அனுபவித்தவன், கீழே இறங்கி வந்தேன்.

''மொட்டை மாடி சுவத்தண்ட நின்னு, என்னத்தை அப்படி எட்டிப் பார்த்தே?''

கிழம் தன் கழுகு கண்களை வைத்துக்கொண்டு கேட்க அண்ணாந்தேன்.

இங்கிருந்து பார்க்கையில் கீழ் மட்டைகள் மறைத்ததால் அந்த தேனடை பார்வைக்குத் தட்டுப்படவில்லை.

சட்டென்று இந்தக் கிழத்துக்குத் தெரியாத ஒரு சமாசாரம் நமக்கு மட்டும் தெரியும் என்கிற நினைப்பு சந்தோஷத்தைத் தர 'ஒண்ணுமில்லியே' என்றேன்.

போன வருஷம் பூனாவிலிருந்து வந்த கிழத்தின் பிள்ளை, ஒரு பெரிய பாட்டில் நிறைய தேனைக் கொண்டு வந்து 'சுத்தமான மஹாபலேஷ்வர் தேன். உடம்புக்கு

நல்லது. பக்கத்தாத்துக்கு பாதி கொடுத்துட்டு நீங்களும் எடுத்துக்கோங்கப்பா' என்று நீட்டியதை, 'கொடுத்தால் போச்சு' என்று அவனிடம் சொல்லி வாங்கி வைத்துக் கொண்டுவிட்டு, அவன் ஊருக்குப் போனதும் 'மாமா, தேன் தரேன்னு சொன்னேளே' என்று நான் துவங்கியதும் 'உனக்கெதுக்குடா அது! ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்ய எனக்கு வேணும்...கடைல கிடைக்கறதெல்லாம் வெறும் வெல்லப் பாகான்னா இருக்கு! சுத்த தேன் எங்க கிடைக்கறது' என்று படக்கென்று அறைந்து சொல்லிவிட்டதற்கு இப்போது பழி வாங்க ஒரு நல்ல சந்தர்ப்பம்.

வீட்டிலேயே இருக்கும் தேன் அடையிலிருந்து கிடைப்பதை விடவா கடைத்தேன் உசந்ததாக இருக்கும்?

'வா கிழவா...சுத்த தேன் உனக்கு வேண்டுமா? லொட்டு லொசுக்கு...

அந்தக் கடைத்தேனை நீயே வைத்துக்கொள்; நான் உன் மரத்திலிருக்கும், உனக்கு சொந்தமான அடையிலிருந்து சுத்தமான தேனை எடுத்துக் கொள்கிறேன்.

உன் பிசுனாரித்தனத்துக்கு இப்படி செய்வதுதான் சரி.

அன்றிலிருந்து இந்தத் தேன் அடையை எப்போது, எப்படி எடுக்கலாம் என்பதிலேயே என் சிந்தனை பூராவும் இருந்தது.

அமாவாசைக்கு முன்னால் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தேனீக்கள் தேனைக் குடித்துவிடும் என்பார்களே? இது சாத்தியமா?

அமாவாசைக்கு நாட்களை விரல்விட்டு எண்ண ஆரம்பித்தேன்.

கிழம் வீட்டுக்குள் இருக்கும்போது தோட்டத்துக்குச் சென்று, கீழே இருந்து பார்த்தால் அடை தெரிகிறதா என்று வேவு பார்த்தேன்.



கிழம் அதிசயமாய் கோவிலுக்குப் போயிருந்த ஒருநாள் அவசரமாய் ஏணியை சாற்றி, மொட்டை மாடிக்குச் சென்றால்...

மூச்சு நின்றுவிடும்போல ஆகிவிட்டது!

இருபது நாட்களில் அடை இரண்டு மடங்காக வளர்ந்திருந்தது.

நிச்சயம் அரைபாட்டில் தேனாவது இருக்கும்.

சுத்தத் தேன்.

ஒரு மூடி எலுமிச்சம்பழத்தை டம்ளர் ஜலத்தில் பிழிந்து ஒரு ஸ்பூன் தேன் விட்டு கலக்கிக் குடித்தால்... ஆஹா!

ஏன், பசும்பாலை பொறுக்கும் சூட்டில் எடுத்து தேன் கலந்து சாப்பிட்டாலும்...ஆஹா!

இதெல்லாவற்றையும்விட சப்பாத்திக்குத் தொட்டுக் கொள்ள, வாட்டிய ரொட்டியல் தடவி சாப்பிட...ம்ம்... நினைக்கும் போதெல்லாம் நாக்கில் நீர் சுரந்தது.

அந்த ஞாயிறு, அதிருஷ்டம் என்னைப் பார்த்து ஜமாய்டா ராஜா என்று புன்னகைத்தது.

மாமா பெண்ணின் மச்சினன் பிள்ளைக்கு கல்யாணம் என்று அம்புலு கிளம்பிப் போக, 'என் சம்பந்தி தவறிப் போயிட்டாராம். சேதி வந்திருக்கு...போயிட்டு சாயங்காலம் வந்துடறேன். வீட்டைப் பார்த்துக்கோ. ஞாயித்துக் கிழமைனு எங்கயாவது ஊர் சுத்தக் கிளம்பிடாதே'' என்று சொல்லிவிட்டுக் கிழமும் புறப்பட்டது.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை.

இப்படிக்கூட ஒளி அடிக்குமா என்ன?

அமாவாசைக்கு சரியாய் இன்னும் இரண்டு நாட்கள்; வீட்டில் ஒருத்தரும் இல்லை; வகையாய் ஆன்று விடுமுறை நாள் வேறு!

கிழமும், பெண்டாட்டியும் அந்தப் பக்கம் நகர்ந்ததும் நான் காரியத்தில் இறங்கினேன்.

எப்படி தேன் அடையை எடுக்கலாம்?

மரத்தில் ஏறி ஒரு குச்சியால் ஈக்களை விரட்டிவிட்டு?

ச்சி...அத்தனைக் கிட்டப் போனால் அவை கொட்டி விடுமே...

தீப்பந்தம் காட்டினால், தேனீக்கள் ஓடிவிடும் என்று சொல்வார்களே?

மொட்டை மாடியில் நின்றபடி நீளமான குச்சியில் பந்தத்தைக் காட்ட வேண்டியது; ஈக்கள் ஓடினதும், மரத்தின் மீது ஏறி அடையை எடுத்துவிட வேண்டியது

ஈஸி...

தேன் எடுக்க ஒரு தாம்பாளம், வடிகட்ட துணியை எடுத்து வைத்துவிட்டு குச்சியைத் தேடினேன்.

இரண்டு நாட்கள் முன்பு ஒட்டடை அடிக்கவென அம்புலு புதிதாய் வாங்கி வைத்திருந்த ஒட்டடைக் கொம்பு கண்ணில் பட்டது.

இது போதும்.

அதன் அடிப்பகுதியில் நாலு பழைய பனியன்களை வார் வாராய் கிழித்து கனமாய் கட்டினேன். ஒட்டடை குச்சி வரை தீ போகாமல் இருப்பது முக்கியமாயிற்றே!

மண்ணெண்ணெயில் அதை முக்கி தீப்பெட்டியுடன் ஏணி வழியாக மொட்டை மாடிக்குப் போனேன்.

காற்று ஒஷ் ஒஷ் என்று விசியது...

இன்னும் சில நிமிஷங்களில் சுத்தமான தேனை ருசிக்கப் போகும் குஷியுடன் பந்தத்தைக் கொளுத்தினேன்.

மெல்லியதாய் விஸில் அடித்துக் கொண்டு குச்சியை தென்னை மரத்துப் பக்கம் நீட்டினேன்.



எட்டவில்லை.

சுவரில் சாய்ந்துகொண்டு நன்றாய் கையை நீட்டினேன்.

புகையுடன் கூடிய நெருப்பு தகதகவென்று எரிய, ஈக்கள் வெப்பம் தாங்காமல் பறக்க முற்பட்டன.

இன்னும் கிட்டத்தில் சாய்ந்தேன்.

காற்று பலமாக வீசியதில் புகை கண்களைத் தாக்கி, எரிய வைக்க, சில கணங்களுக்கு விழிகளை மூடித் திறந்தா...ஹா...

ஹா...இது என்ன?

பந்தத்தின் ஜ்வாலை நாக்குகள் காற்றில் அலைந்து ஆடியதில் அருகில் தொங்கின பன்னாடையில் தீப்பற்றிக் கொள்ள...

ஐயோ...

ஐயோ...

கண் மூடி கண் திறக்கும் நாழிகையில் பல மாசங்களாய் மழை காணாமல் கருவாடாய் காய்ந்திருந்த அடிமட்டைகளில் தீ பரவி...

தொப்பென்று கையில் பிடித்திருந்த குச்சியை கீழே நழுவ விட்டேன்.

அரக்க பரக்க டாங்க்மேல் ஏறி நின்று இரண்டு கைகளாலும் தண்ணீரை வாரி இறைத்தேன்.

ம்ஹூம்...பயன் இல்லை.

பதறிக் கொண்டு ஏணியில் இருந்து இறங்கி வீட்டுக்குள் ஓட்டமாய் ஓடி இரண்டு பிளாஸ்டிக் வாளிகளை தூக்கிக்கொண்டு, தட்டுத் தடுமாறி, விழுந்து எழுந்து, மீண்டும் மாடிக்கு ஏறினேன்.

மூச்சிறைக்க வாளி வாளியாய் ஜலத்தை இங்கிருந்து மரத்தின்மேல் வீசினேன்.

முக்கால் டாங்க் தண்ணீரை ஊற்றின பின் ஒரு தினுசாய் ஜ்வாலை அடங்கி மரம் புகையத் துவங்கியது.

கால் மணியில் தொட்டியை சுத்தமாக காலி பண்ணிய பிறகு அசதியுடன் எதிரில் நின்ற மரத்தை வெறித்தேன்...

பாதி கருகின மரம்...

கரியாய் தொங்கின பச்சை மட்டைகள்.

எட்டிப் பார்த்தேன்.

அமளியில் கீழே விழுந்துவிட்ட இளநீர் காய்கள்...

ஒட்ட எரிந்துபோய் முழு நீளத்துக்குக் கிடந்த ஒட்டடைக் குச்சி.

எப்படி சமாளிக்கப் போகிறேன்.

என்ன சொல்லி சமாதானம் செய்யப் போகிறேன்?

சாயங்காலம் கிழம் வந்து ''என்னடாது, அக்கரமமா இருக்கு! தொட்டித் தண்ணீரும் காலி; மரமும் எரிஞ்சிருக்கு? என்னடா சமாசாரம்?''—என்று சாளேஸ்வர கண்களை உருட்டினால்?

போறாத குறைக்கு அம்புலுவும் 'புதுசாய் வாங்கின ஒட்டடைக் குச்சி எங்கே?'' என்றால்?

தொப்பலாகிவிட்ட பனியன், வேஷ்டியுடன், மொட்டைமாடி சுவரில் சரிந்துகொண்டு எப்படி சமாளிக்கப் போகிறேன் என்று பதறத் தொடங்கின போது, ஓரமாய், தரையில் கிடந்த தேன்டை என் ஞாபகத்திலிருந்து அறவே வழுக்கி மறைந்தது.

# போதி மரம்

''ப்ளீஸ்ம்மா...''

''............''

''இந்த தடவை பொறுத்துக்க...அடுத்த முறை கண்டிப்பா நிறைவேத்திடறேன், ப்ளீஸ்ம்மா...''

''போன வருஷமும் இப்படித்தான் சொன்னீங்க: பொங்கல் சமயத்துல ஏதோ நொண்டிச் சாக்கு...இப்ப திரும்ப பொறுத்துக்கம்மா...நா என்ன மிஷின்னு நினைச்சிங்களா? எனக்குனு ஆசை, விருப்பு, வெறுப்பு எதுவும் இருக்கக் கூடாதுனு ஆர்டர் போடறீங்களா?''—

''என் நிலைமையப் புரிஞ்சிக்கிட்டு அனுசரிச்சு...''

அவனை முடிக்க விடாமல் அவள் சீறினாள்.

''போதுங்க...புரிஞ்சுகிட்டும், அனுசரிச்சி நடந்தும் பெரிசா என்ன பரிசை தூக்கிக் கொடுத்திட்டீங்க! திரும்ப அதே பொறுத்துக்கன்ற பல்லவிதானே பாடறீங்க! குனிய குனிய குட்டினா, நானும் எத்தனை நாளைக்குத்தான் பொறுக்கிறது? எதுக்கும் ஒரு லிமிட் வேணாம்?''

''ஸாரி...உன் ஆதங்கம் எனக்கு நல்லாவே புரியுது. இந்த தீபாவளிக்கு நீ ஆசைப்பட்டதை கண்டிப்பா வாங்கியே தீரணும்னு நானும் உறுதியாதான் இருந்தேன். ஆனா, இப்படி ஒரு இக்கட்டு வரும்னு யார் எதிர்பார்த்தாங்க?''—

''அதுக்காக? அதுக்காக? ஒவ்வொரு தரமும் நானே தான் விட்டுக் கொடுக்கணுமா?''—

''சமயத்துல விட்டுக் கொடுக்கறதுதானே மனுஷத் தனம்மா?''—

''வேணாங்க எனக்கு அந்த மனுஷத்தனம் வேணாம்... நா சுயநலவாதியாவே இருந்திட்டுப் போறேன்... இந்த முறை என்னை ஏமாத்தினீங்கன்னா கண்டிப்பா நா ரொம்ப உடைஞ்சி போயிடுவேன்...நீங்களும் அதை புரிஞ்சிகிடறது நல்லது...''

கை நகங்களை ஆராய்ந்தபடி அவள் தீர்மானமாக பேச, அவன் பரிதாபமாக ஏறிட்டான்.

''ப்ளீஸ்...ப்ளீஸ்...''

''எத்தனை ப்ளீஸ் போட்டாலும் என் முடிவு மாறாதுங்க...''

''இன்னிக்கு சனிக்கிழமை; ஆபீஸ் அரை நாளா, வீட்டுக்கு வர வழில டாக்டரைப் பார்த்தேன். 'நாட்களைக் கடத்தாம உடனடியா அட்மிட் பண்ணிடறதுதான் அப்பாக்கு நல்லது'னு சொன்னார். உன்னை ஒரு வார்த்தை கேட்டுட்டு, நாளைக்கு ஞாயித்துக்கிழமையாச்சே, கிராமத்துக்குப் போய் ஆஸ்பத்திரிலே சேர்றதைப் பத்தி அப்பாகிட்ட பேசலாம்னு நினைச்சேன். ப்ளீஸ் புரிஞ்சிக்கம்மா ...இந்த முறை மட்டும்...''

அவள் எழுந்து நின்றாள்.

'வீணா கெஞ்சறதுல அர்த்தம் இருக்கிறதா எனக்குத் தோணலை. என் இஷ்டத்தைக் கேட்டீங்க, சொன்னேன். மாத்திக்கச் சொல்லி வற்புறுத்தறது நியாயம் இல்லை... இனி உங்க இஷ்டம்... இதுபத்தி நா மேல பேச விரும்பலை...''

தோள்களைக் குலுக்கி நான் என்ன செய்வேன் என்ற பரிதவிப்புடன் அவனும் எழுந்து நின்றான்.



''உன் மேல எனக்குக் கோவம் வரலைம்மா... ஆனா என் வேதனை, அவஸ்தையை நீ சரியா புரிஞ்சிக்கலைனு வருத்தமா மட்டும் இருக்கு... நா முயற்சி பண்ணேன்; தோத்துட்டேன்... என்னை நம்பி வந்த உன்னையும் நா மதிக்கணும்... ஆல்ரைட், உனக்கு விருப்பம் இல்லாட்டி வற்புறுத்த மாட்டேன்... நடக்கறது நடக்கட்டும்...''

பேசியபடி உள் அறைக்குச் சென்றவன் உடைகளைக் களைந்து வேட்டியை உடுத்திக்கொண்டான்.

கட்டிலில் காலை நீட்டிப் படுத்து அலுப்புடன் கண்களை மூடிக்கொண்டான்.

அவள் ஹாலில் சில நிமிஷங்களுக்கு இப்படியும் அப்படியும் நடந்தாள், நின்றாள்.

நகத்தைக் கடித்தாள். உள்ளே போய் அவனை சமாதானப்படுத்தலாமா என்று யோசித்தாள். பின், நான் ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஜன்னலிடம் சென்று நின்றுகொண்டாள்.

மாலை நேர வெயில் வெளியில் மஞ்சளாக விரிந்திருந்தது.

மனசு இருக்கும் நிலையில் விறுவிறுவென்று ஒரு சுற்று நடந்தால் என்ன என்று தோன்றியது.

செருப்பை மாட்டிக்கொண்டவள் படுக்கை அறைக் கதவிடம் நின்று 'நா வாக் போயிட்டு வரேன்...' என்று சொல்லிவிட்டு அவனுடைய பதிலுக்குக் காத்திராமல் படிகளில் இறங்கி நடந்தாள்.

வழக்கமாக அவளும், அவனும் வாக் போனால் மெயின் ரோடில் சென்று, இடது பக்கம் திரும்பி, பார்க் வரை நடந்து, திரும்பி வரும் வழியில் கடைத்தெருவில் வாங்க வேண்டிய பொருட்களை வாங்கி வீடு திரும்புவார்கள்.

இன்றைக்கு மெயின் ரோட் வந்ததும் அவள் சில கணங்கள் நின்று, வலது பக்கமாய் திரும்பி, மலையடி வாரத்தை நோக்கிச் செல்லும் பாதையில் நடக்க ஆரம்பித்தாள்.

மனசின் சூடு ஆறுகிற தினுசில் கால்களை எட்டிப் போட்டு, வியர்வை பெருக நடந்தவள், பாலம் வந்ததும் நின்றாள்.

பாலத்துக்கு அந்தப்பக்கம் பாதை ரொம்ப அத்வானமாக இருக்கும். ஜன நடமாட்டம் மருந்துக்குக்கூட இருக்காது.

தனியாக அதற்குமேல் நடந்துபோக தயக்கமால் இருந்து பாலத்து சுவர்மேல் உட்கார்ந்தாள்.

ஏழெட்டு மைனாக்கள் கூட்டமாய் தலைக்கு மேல் பறந்து போயின.

எங்கேயோ, ஒற்றை எருமை ஒன்று வொய்ய் என்று கட்டைக் குரலில் இழுத்தது.

மூச்சைப் பெரியதாக இழுத்து, வெளியில் விட்டு, இன்னும் உள்ளுக்குள் கனன்ற கோபத்தை அடக்கப் பார்த்தாள்.

பின்னே?

போன வருஷம் கல்யாணம் ஆன கையோடு பரிசாய் வந்த பணத்தை வைத்துக்கொண்டு, டி வி., மிக்ஸி வாங்க கணக்குப் போட்டது நடக்க இயலாமல், சற்றும் எதிர்பாராத வகையில் அவன் தங்கையின் திருமணம் கூடி வந்தது

—பெரிய இடம்மா... கோவில்ல இவளைப் பார்த்தானாம். யாருனு விசாரிச்சி, வலிய வந்து பெண் கேக்கறாங்க. விடக் கூடாதும்மா... அப்பா எப்படி சமாளிப்பேனு தயங்கறார். நாம, இந்தப் பணத்தைக்



கொடுத்து தைரியம் சொல்லி நல்லபடியா நடத்திட்டா; தீபாவளி சமயத்துல எனக்கு போனஸ் வரும், அப்ப சேர்த்து வைச்சி வாங்கிடலாம்... என்ன டார்லிங்?''

அந்தப் பேச்சில் நியாயம் இருக்க, பதில் பேசாமல் அவள் தலை ஆட்டினாள்.

தீபாவளி சமயத்தில் மிக்ஸி மட்டும்தான் வாங்க முடிந்தது; தங்கைக்கும் தலை தீபாவளி இல்லையா? செலவு இல்லாமலா போகும்!

பொங்கல் அட்வான்ஸ் எடுத்து டி வி. வாங்கிவிடலாம் என்று திட்டம் திட்டியது, வீடு மாறி புது வீட்டுக்கு எக்கச்சக்க அட்வான்ஸ் கொடுக்க வேண்டி வந்ததில் அடிபட்டுப் போயிற்று.

இப்போது தீபாவளி போனஸ் வர இரண்டு நாட்கள் இருக்கின்றன. அதற்குள் கழுகுக்கு மூக்கில் வியர்த்தமாதிரி டாணென்று இன்னொரு பெரிய செலவு வந்துவிட்டது.

அவனுடைய அப்பாவுக்கு நாலைந்து மாசமாய் வயிற்றில் வலி. சாப்பிட்டது ஜீரணம் ஆவதில்லை. ராத்திரி தூக்கம் இல்லாமல் வாந்தி, ஏப்பம்.

கிராமத்தில் கை வைத்தியம் செய்து, பொறுத்துப் பார்த்துவிட்டு இங்கே வந்து டாக்டரிடம் காண்பித்தால் 'அல்சர் அதிகமாக இருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக அறுவை சிகிச்சை செய்கிறோமோ அத்தனை நல்லது' என்று அவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இந்த முறையும் டி.வி. வாங்க முடியாமல் போய் விடுமோ என்று அவளுக்கு பயம்.

ஏன், பிள்ளை ஒருத்தர்தான் அத்தனை செலவையும் இழுத்துப் போட்டுக்கொள்ள வேண்டுமா? லட்சாதிபதி வீட்டில் புகுந்துகொண்ட மகள் இருக்கிறாளே, 'இந்தாப்பா இரண்டாயிரம்' என்று கொடுத்தால் என்னவாம்?

எப்போதும் நாங்கள்தானா அகப்பட்டோம்!

ஒரோர் பெண்களைப்போல நான் புடைவை கேட்கிறேனா, இல்லை நகை கேட்கிறேனா? குடும்பமாய் உட்கார்ந்து பார்க்க டி.வி... சாயங்கால வேளைகளில் போர் அடிக்காமல், வெளியில் சென்று சினிமா, ஹோட்டல் என்று தண்டமாக செலவழிக்காமல் இருக்கத்தானே டி.வி. கேட்கிறேன்?

இதைக்கூட புரிந்து கொள்ளாவிட்டால்?

அவர் கோபித்தாலும் சரி; இந்த முறை கண்டிப்பாய் விட்டுக் கொடுக்கப் போவதில்லை..

யோசனையுடன் உட்கார்ந்திருந்தவள், தனக்கு வலது பக்கத்தில், சற்று தள்ளி யாரோ நடமாடுவதை அப்போது தான் உணர முடிய, திரும்பினாள்.

ஒரு பெண். நிறைமாத கர்ப்பிணி என்பது நன்றாகவே தெரிந்தது.

கிழிந்த புடைவை. பிரி பிரியாய் தொங்கின தலை மூடி.

கையில் ஒரு தகர டப்பா.

குனிந்து மும்முரமாய் எதையோ பொறுக்கி டப்பாவில் போட்டுக்கொண்டிருந்தாள்.

ஒரு நிமிஷம் கவனமாகப் பார்த்தபின் அவள் வேப்பங் கொட்டைகளைப் பொறுக்குவது புரிந்தது.

அவ்வப்போது அந்தப் பெண் இடுப்பில் கை வைத்து நிமிர்ந்து தன்னை ஆஸ்வாசப் படுத்திக்கொண்டாள்.

தலைக்கு மேலே தொங்கின காய்களை ஒடித்து மடியில் கட்டிக்கொண்டாள்.

மீண்டும் குனிந்து பொறுக்கினாள்.



வயிற்றுப் பிள்ளைத்தாச்சி அப்படி குனிந்து நிமிர்ந்து வேலை பண்ணுவது பார்க்கக் கஷ்டமாய் இருக்க அவள் உட்கார்ந்த இடத்திலிருந்து கத்தினாள்

''ஏய்... என்ன பொறுக்கறே?''

பெண்மணி நிமிர்ந்தாள். சிரித்தாள்.

''வேப்பங் கொட்டைங்க...''

''மேலேந்து காய எதுக்குப் பறிக்கறே?''

''கொட்டை, பழம், காயினு எத்தினி கிடைச்சாலும் நல்லதுதானே தாயி...''

''என்ன பண்ணுவே இதை வைச்சிகிட்டு?''

''என்னா பண்ணுவேன்? வூட்டுக்கு எடுத்திட்டுப் போயி காய்களை குமுக்கமாப் போட்டுப் பழுக்க வைப்பேன். பழங்களைக் காலால துவைட்டி கொட்டைங்களை எடுத்து காய வைச்சி, கொண்டு டவுன் கடையிலே கிலோ எனுவது பைசானு போடுவேன்... அதான்...''

''வேப்பங் கொட்டைக்குக் கூடவா காசு?''

''என்னங்க தாயி அப்படிக் கேட்டுட்டீங்க... இந்த மூணு மாசமும், எங்க வூட்டுல அடுப்பெரியறதே இந்தக் கொட்டை போட்டு வர்ற காசால தாங்க...''

இப்போது அவளுக்கு ஸ்வாரசியம் அதிகமாகிப் போனது.

எழுந்து, பக்கவாட்டில் நடந்து வேப்ப மரத்தடிக்குச் சென்றாள்.

சாணி பூசின கூடை ஒன்று அரைக்கும் மேலாக வேப்பம் பழம் கொட்டைகளால் நிரப்பப்பட்டிருந்தது.

''இத்தனையுமா இன்னிக்குப் பொறுக்கினே?''

''ஆமா தாயி... வெள்ளனப் புறப்பட்டு, ஆறு எழு மரத்துல பொறுக்கியிருக்கேன், இல்லே?''—

அவள் நகத்தைக் கடித்தாள்.

''நிறை மாச பிள்ளைதாச்சியா இருக்கிறே, இப்படி சுத்தறது உனக்குக் கஷ்டமா இல்லே?''—

அந்தப் பெண்மணி கண்களை இடுக்கிக்கொண்டு பேசினாள்.

''கஷ்டத்தைப் பார்த்தா, கூழு காச்ச காசு?''

''ஏன், உன் புருஷன் சம்பாதிக்கலியா?''—

''அவுரு இல்லிங்க... போயிட்டாரு... நாலு மாசம் மின்னால லாரி வண்டிலே ஆப்டுகிட்டுப் போயிட்டாரு...''

கையிலிருந்த தகரக் குவளையை வெறித்தபடி அந்தப் பெண்மணி பேச, அவள் அதிர்ந்தாள்.

''ஓ! மன்னிச்சிக்க, தெரியாமக் கேட்டுட்டேன்... மன்னிச்சிக்க...''

''............''

''உனக்குனு மனுஷங்க வேற யாருமே இல்லியா?''...

''ஏன் இல்லே? எம் புருஷனோட ஆயி, தம்பி, தங்கச்சி எல்லாரும் இருக்காங்களே''—

''நா அவங்களைக் கேக்கலை... உன் மனுஷங்க... உன்னைப் பெத்...''

''என்ன தாயி அப்படிக் கேக்கறீங்க? எம் புருஷன் சனங்க என் மனுஷங்க இல்லியா?''

''அதுக்குக் கேக்கலை... இப்படி நீ உழைச்சிக் கஷ்டப் படறியே; பிரசவம் ஆற வரைக்குமாவது சிரமப்படாம இருக்கக்கூடாதானுதான்...''

''இதுல என்ன கஷ்டம் தாயி? எம் மாமியாருக்குக் கண்ணு தெரியாது... சின்னத் தம்பி பள்ளிக்கோடம் போவது... படிக்குறப் பிள்ளைய கொட்டை பொறுக்க போவச் சொல்லலாமா? தங்கச்சிக்கு வாதம் வந்து காலு இளுத்துகிட்டது. அது சப்பையால நவந்து நவந்து வூட்டு



வேலை செய்யுமே காட்டியும், வெளிலே வர முடியாது. பாவம்... அப்பால இருக்குறது நா ஒண்டிதானே! தம்பி தலை எடுக்குற வரைக்கும் நா தான் கஷ்டப்பட்டு உளைச்சி குடும்பத்தைக் காப்பாத்தணும்; என் புருஷன் இருந்தா செய்யுமில்லே!'

சட்டென்று யாரோ ஓங்கி கன்னத்தில் அறைந்த மாதிரி அவளுக்கு பொறி கலங்கிப் போயிற்று.

பணம் காசு இல்லை, படிப்பு இல்லை, ஆதரவாய் புருஷனும் இல்லை. உடுக்க ஒரு நல்ல புடைவை இல்லை; வயிறார ஒருவேளை சுடு சோறு இல்லை—என்று இத்தனை இல்லைகள் இருந்தாலும் நாளைக்குப் பிறக்கப் போகும் குழந்தையின் எதிர்காலம் என்ன என்று கவலைப்பட்டு இடிந்து உட்காராமல், காலையில் எழுந்து காடு கழனி சுற்றி அரை கூடை வேப்பங்கொட்டைகளைப் பொறுக்கி, அவற்றை மிதித்து, காய வைத்து, கடையில் போட்டு, அந்தக் காசில் தன் குருட்டு மாமியார், படிக்கும் கொழுந்தன், சப்பாணிக் கொழுந்தியாளை சம்ரட்சிக்கும் பொறுப்பை மனசார ஏற்று உழைக்கும் அந்தப்பெண்மணி முன், தான் ஒரு புழுவாய் சிறுத்துவிட்ட மாதிரி தோன்ற, திடுமென அவள் ரொம்பத்தான் கூசிப் போனாள்.

அப்படியே கொஞ்ச நேரம் ஸ்தம்பித்து நின்று; வேப்ப மரத்தையும், அந்தப் பெண்மணியையும் அழுந்தப் பார்த்துவிட்டு, திரும்பி நடக்கையில், கணவனின் முன் நின்று சிரித்த முகத்தோடு 'எழுந்திருங்க; கிராமத்துக்குப் போயி ஆஸ்பத்திரியிலே சேர அப்பாவுக்கு எப்ப சௌகரி யப்படும்னு கேட்டுட்டு வரலாம்' என்று தான் கூறப் போகும் நிமிஷத்தில் அவன் முகத்தில் பிரசவிக்கப் போகும் சந்தோஷ, அதிர்ச்சியைக் கற்பனை பண்ணியபோது, அது நாழிகை கூனி குறுகிக்கொண்டிருந்த மனசு கொஞ்சமாக நிமிர முயல்வதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

# கடைசியில்

''என் விசாலம், இன்னிக்குமா சாம்பார் பண்ணலை?''—

''பண்ணலை.''

''அதான் தெரியறதே, என்னு கேட்டா?''

''தொவரம் பருப்பு என்ன வெலை விக்கறது தெரிமா? எட்டு ரூபா அறுபது பைசா... இந்த லட்சணத்துல தோட்டத்துல காய்ச்சு கொட்டறமாதிரி தெனமும் பருப்பு அள்ளிப் போட்டு சாம்பாரா வைக்க முடியும்?''—

''தெனம் எங்கடீ வைக்கறே! கடைசியா வெள்ளிக் கிழமை அன்னிக்கு வைச்சு குத்தினே... நாலைஞ்சு நாளாச்சேனு கேட்டாக்க...''

''நீங்க மாசம் இன்னும் ஆயிரம் ரூபா கூட சம்பா திங்கோ, அப்பறம் தினமும் இரண்டு வேளையும் சாம்பாரா வைச்சு ஜமாய்க்கறேன்.''

பஞ்சு நிமிர்ந்து அவளை வெறுப்புடன் வெறித்தான்.

''கிழிச்சே... எத்தனை வந்தாலும், இல்லே பாட்டு பாடிண்டு தரித்திர நாராயணனா இருக்கறதைத் தவிர ஒனக்கு வேற என்ன தெரியும்?''

''என்ன மொண மொணக்கறேள்?''—

''ஒண்ணுமில்லே, நீ மோரை ஊத்து...'



நீர் மோர்... தொட்டுக்க காய்ந்த நார்த்தங்காய்.

தினமும் கொட்டு ரசத்தையும் நீர் மோரையும் சாப்பிட்டு சாப்பிட்டு அலுத்திருந்த நாக்கு அடம் பண்ண மீண்டும் நிமிர்ந்தான்.

''என்ன விசாலம், ரூபாய்க்கு பத்துனு எலுமிச்சை விக்கறது... ரெண்டு ரூபாய்க்கு வாங்கி உப்பொரைப்பா ஊறுகாய் போடுனு நானும் எத்தனை நாளா சொல்றேன்?''

''ப்பா... நாக்கை பாரு மொழ நீளத்துக்கு! எட்டு தினுசு ஊறுகா போட்டு வைச்சாலும் சப்பு கொட்டிண்டு சாப்பிட ஐயா ரெடி... ஆனாலும் இவ்வளவு நாக்கு சபலம் கூடாதுன்னா... வயசாயிட்டா அல்சர், சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம் எல்லாம் எங்கே எங்கேனு காத்துண்டு இருக்குமாம். வாயக் கட்டிட்டா பாதி வியாதி ஓடியே போயிடும்னு அன்னிக்கு எதிராத்து டாக்டர் மாமா சொல்லலை?''

''வயசாயிட்டப்புறம்தானே விசாலம்; இப்பவே என்ன?''

—'அ? இப்ப பழக்கலைன்னா கஷ்டம், ஞாபகம் வைச்சுக் கோங்கோ. அஞ்சுல விளையாதது அம்பதுல விளையுமா''?

எக்கேடு கெட்டு ஒழி. உன் அல்ப குணத்துக்கு சப்பைக் கட்டு வேற! வாயத் திறந்தா பழமொழி, பெரிய விவேகியாட்டம்! உன்னைத் திருத்த அந்தப் ப்ரும்மா வந்தாலும் முடியாது. கஞ்சத்தனம்னா என்னனு உன்னைப் பார்த்து ஒரு டிக்ஷனரியே எழுதிடலாம்... தரித்திரம்...

''என்ன, திரும்ப மொணமொணங்கறேள்? வர வர பைத்தியமாட்டம் தனக்குத்தானே பேசிக்கறேளே' சரி சரி, சாப்டாச்சுன்னா எழுந்திருங்கோ... எனக்கு வேலை தலைக்கு மேல கிடக்கு...''

''என்னடி அப்படி தலைக்கு மேல வேலை?''

''மூணாவதாத்து சுந்தரிக்கு அர்ஜெண்டா ஒரு ஒயர் பை வேணுமாம். ரெண்டு நாள்ல முடிச்சுத்தாங்கோ மாமினு சொல்லி இருக்கா. அப்புறம் கோமதி பெண்ணுக்கு ஆண்டு நிறைவு வரதாம். ப்ராக் தைக்கணும்னு துணி கொடுத்திட்டு போயிருக்கா. மூணும் ரெண்டும் அஞ்சு. வர்ற வரும்படிய விடுவானேன்.''

நீயா காசை விடுவே—சோறு தண்ணி இல்லாமல் இருந்தாலும் இருப்பியே தவிர, இப்படி சம்பாதிச்சு, சேக்கறதை விடுவியா?

ஆத்திரம் அதிகமாக பஞ்சு எழுந்து கைகளைக் கழுவிக் கொண்டான்.

ஏழு வருஷங்களுக்கு முன், திருமணமான புதுசில், விழுந்து விழுந்து வேலை செய்து, சிக்கனமாய் குடித்தனம் பண்ணி, நாலு காசு சேர்ப்பவளாக மனைவி அமைந்து போனதில் அவனும் பெருமைப்பட்டிருக்கிறான்.

ஹா! என் பெண்டாட்டிமாதிரி ஊர் உலகில் உண்டா என்ற குஷியில் சம்பளத்தை அப்படியே விசாலத்திடம் கொடுத்து 'செட்டும் கட்டுமா நடத்துடீ' என்று ஆசிர் வதித்து, அன்றாடம் பஸ், காபிக்காக இரண்டு ரூபாய் என்று அவள் தந்ததை நிறைவோடு வாங்கிச் சென்றிருக் கிறான்.

ஆனால் எல்லாம் முதல் சில மாசங்களுக்குத்தான்...

சிக்கனம் ஒரு பழக்கமாக இல்லாமல், வெறியாகவே விசாலத்திடம் குடி கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த பின் சந்தோஷம் போய் எரிச்சல்தான் மண்டத் துவங்கியது.

—சோப்பு விக்கற வெலைல தினம் ரெண்டு வேளையும் தேய்ச்சு குளிக்கறது நடக்கிற காரியமா? ஒருவேளை வெறும்மன கையால அழுத்தி தேச்சு குளிங்க போறும்.



—ஆபீஸ்ல காபி குடிக்கறதை மொதல்ல நிறுத் துங்கோ. கண்டதை குடிச்சா பித்தம் வருங்கறதோட காசும் தண்டமாகாம இருக்கும்.

—லாண்டிரிக்கு துணிய போடறது வேஸ்ட். சாக் கடை தண்ணில அலசி, துளி நீலத்தைப் போட்டு அவன் இஸ்திரி பண்றதை உடுத்திக்கறதைவிட, அழகா நாமளே ஆத்துல தோச்சு போட்டுக்கலாம்.

—என்னது! ஒரு டர்க்கி டவல் வெலை பதினெட்டு ரூபாயா? இந்தப் பணத்துக்கு மூணு வருஷத்துக்கு காசித் துண்டு வாங்கி உபயோகிக்கலாமே! இனிமே இப்படி தாம் தூம்னு செலவு பண்றதை விட்டுடுங்கோ—

—ஸினிமா, என்னன்னா ஸினிமா? பார்க்குலேயும் ரோடுலேயும், ஆம்பிளையும், பொம்பளையும் கைய புடிச்சிண்டு கெக்கே பிக்கேனு பாடிண்டு ஓடும்! இதைக் காசு கொடுத்து யாராவது பாப்பாளா? எதிராத்துல டி.வி. இருக்கு. வெள்ளிக்கிழமை ஒளியும் ஒலியும், ஞாயித்துக்கிழமை சினிமாவும் பார்த்துண்டா போச்சு... போனா, போடி, வராதனு யாராவது கழுத்தைப் பிடிச்சு தள்ளிவிடுவாளா என்ன!

—பழசா? இதுவா? இந்த பனியனா? ஒண்ணு ரெண்டு பொத்தல் இருக்கு, அவ்வளவுதானே! இன்னும் ஒரு மாசம் தாராளமா போட்டுக்கலாம். பெரிய மகாராஜாங்கற நினைப்புல தூர எறிஞ்சுடாதீங்கோ...

இப்படிப் போக வர விசாலம் குளவியாய்க் கொட் டினதில் ரொம்ப சீக்கிரமே தன்னையும் அறியாமல் பஞ்சு மாறித்தான் போனான். சோப்பு போட்டுத் தேய்த்துக் குளிப்பதை விட்டான். ஆபீஸ் நண்பர்களுடன் ஜாலியாய் அரட்டை அடித்துக்கொண்டு இங்கே, அங்கே போவதை நிறுத்தினான். லாண்டரிக்குத் துணி போடுவதைத் தவிர்க்க ஆரம்பித்தான்.

மஞ்சள் ஏறின வேட்டி. சிவப்பு காசித் துண்டு சகிதம் எதிர் வீட்டுக்குப் போய் ஒஸியில் டி.வி. பார்க்கக்கூட பழகிப் போனான்.

ஆனால், எல்லாவற்றையும் விட்டொழித்து முக்கால் விசாலமாக மாறிவிட்டாலும், நாக்கைக் கட்டுப்படுத்த மட்டும் அவன் தவித்துதான் போனான்.

வக்கணையாய் சமைத்துப் போட மறுப்பதுடன் எல்லாம் தெரிந்த கிழவி மாதிரி விசாலம் தன் கஞ்சத் தனத்துக்கு சப்பைக்கட்டு கட்டி, அறிவுரை வேறு தரும் போது ஆத்திரம் கலந்த கையாலாகாத்தனம் குபுகுபு வென்று பொங்கும்

''ஏண்டி சனியனே—இது காபியா, இல்ல தேத்தாங் கொட்டை தண்ணியா? வெந்நீர்ல ஒரு ஸ்பூன் பாலையும், வெல்லத்தையும் கலந்து கொடுத்த மாதிரி என்னடி காபி இது, எழவு?'

விசாலம் பதில் சொல்லமாட்டாள். முறைப்பாள், கடுவன் பூனை மாதிரி முகத்தை வைத்துக்கொண்டு.

பஞ்சுவுக்கு நன்றாகத் தெரியும், காபியின் லட்சணம் ஏன் இப்படி இருக்கிறது என்று.

இரண்டுபேர் இருக்கும் குடித்தனத்துக்கு விசாலம் ஒரு நாளுக்கு வாங்கும் பாலின் அளவு, சிக்கா நீர்கள், அரை லிட்டர்.

இதற்குள்தான் இரண்டு வேளை காபியும், சாப்பாட் டுக்கு ஊற்றிக்கொள்ளும் மோரும் அடக்கம்

கால் கிலோ காபிப் பொடியை பதினைந்து நாட்களுக்கு தார் காட்டி வைத்துக்கொண்டு, தினம் ஒரே ஒரு ஸ்பூன் பொடியை பில்டரில் போட்டு, கொட கொட வென்று ஜலத்தை விட்டு நீர்க்க இறங்கப் பண்ணி,



டிகாஷன் என்ற பெயரைச் சூட்டி, கரண்டி பாலுடன் கலந்தால் அந்த காபி தேத்தாங்கொட்டை கஷாயம் மாதிரி இல்லாமல் வேறு எப்படி இருக்கும்

தரித்திரம். மஹா தரித்திரம்.

உழைத்து கொட்டுகிற புருஷனின் வயிற்றுக்கு சரியாக போடாமல் அது என்ன கஞ்சத்தனமோ?

பஞ்சுவுக்கு பற்றிக்கொண்டு வரும்.

ஆரம்ப காலத்தில் தாங்க முடியாது போய் விசாலத் திடம் சண்டை போட்டது உண்டுதான். ஆனால் அன்றைக்கெல்லாம இந்த தேத்தாங்கொட்டை காபியும், சீரக ரசமும்கூட கிடைக்காமல் போனதுதான் நடந் திருக்கிறது. அக்கடா என்று ஈரத் துணியை வயிற்றில் பிழிந்து போட்டுக்கொண்டு, பூனையை அடுப்பில் தூங்க வழி பண்ணிவிட்டு ஜடமாய் படுத்துவிடுவாள் மகராசி.

சரியான அமுக்கு...அழுத்தம்.

ஆரம்பத்தில் ஆஹா என் பெண்டாட்டி பெண்டாட்டி தான் என்று புகழ்ந்து தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, வேண இடம் கொடுத்தாயிற்று.

இப்போது அடியைப் பிடிடா பாரதபட்டா என்று திரும்பத் துவங்கி அதட்டி, வழிக்கிக் கொண்டுவருவது எங்ஙனம்?

ஸ்வபாவத்தில் பஞ்சு சாது வேறு!

முதல் வருஷம் தாண்டுவதற்குள்ளாகவே பஞ்சுவுக்கு தன் நிலைமை தெள்ளென புரிந்து போயிற்று.

இது தானாகவும் திருந்தாது, நம்மையும் திருத்த விடாது என்று.

மன்றாடிப் பார்த்துவிட்டு, தாலி கட்டிவிட்ட தோஷத்துக்காக விட்டுக் கொடுக்க ஆரம்பித்து அப்புறம்

அதுவே ஒரளவுக்கு பழக்கமாகி, இந்த சிக்கனம் இவனுக்கும் இயல்பாகிப் போனதும் நண்பர்கள், உறவினர் நடுவில் இவன் கிள்ளுக் கீரையாகப் போனது நிஜம்.

—டேய், தப்பித் தவறி பஞ்சு வீட்டுக்கு யாரும் வெயிலுக்கு ஒதுங்கக்கூடப் போயிடாதீங்கோ: அவன் பொண்டாட்டி அதுக்கும் காசு கேப்பா—என்றார்கள்.

—எச்சல் கையால காக்கா ஒட்டமாட்டாங்கறது பஞ்சு ஆத்துக்காரிக்குப் பொருந்தாது. ஈரக் கையாலகூட ஒட்ட மாட்டாங்கறதுதான் சரி...என்றார்கள்.

—என்னடா பஞ்சு. ஷர்ட் ஆறு வருஷம் முன்னால தீபாவளிக்கு வாங்கினதுதானே! பரவாயில்லடா, லாண்டரிக்கு போடாம வைச்சுக்கறநல ஒரு செளகரியம். அழுக்கு படை படையா படர்ந்து சட்டைய கிழிய விடாம கெட்டியாக்கிடுத்து—என்றார்கள்.

இப்படி ஊரும் உறவும் சதா சர்வகாலம் கேலி பண்ணுகிற மாதிரி குடித்தனம் செய்யும் தன் அருமை சகதர்மிணி, சேர்க்கும் பணத்தை எல்லாம் பாங்கில் போட்டு பத்திரப்படுத்தி வைக்காமல், கால் அரை சவரன்களாக வாங்கி இரண்டாம் பேர் அறியாமல் வருஷத்துக்கு ஒரு நகையாகச் செய்துகொண்டு வருவது மட்டும், பஞ்சுவுக்கு நினைக்க நினைக்க ஆச்சர்யம் தரும் சமாசாரம்.

வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி மாசம் மூந்நூறு நானூறு சேர்த்து, தெரிந்த நகைக்கடை செட்டியாரிடம் சொல்லி நாலு மாசத்துக்கொருதரம் ஒரு பவுன் வாங்கி, வருஷ இறுதியில் ஒரு செயினோ, ஒரு ஜதை வளையலோ பண்ணி, தன் பழைய ட்ரங்கு பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவாள்.



''எதுக்காகடீ இப்படி நகை சேர்க்கறே?'' என்றால்—

''அ? நாளைக்கு பொண் பொறந்தா எல்லாம் தானா வந்து மொளைக்குமாக்கும்?'' என்பாள் அழுத்தமான குரலில்.

ஏண்டி, எனக்கு கிட்டத்தட்ட எட்டு நூறு ரூபா சம்பளம் வர்றது...நாளைக்கு இன்னும் அதிகமாகாதா? அதை வச்சுண்டு பொண்ணை கரை ஏத்த முடியாதா? இப்ப இப்படி தரித்திரமா இருந்தாவது சேர்க்கணுமா?''

''தரித்திரம், தரித்திரம்னு ஒருநாளைக்கு நாலு தரம் சொல்லிக் காட்டாட்டா சாப்பிடற சாதம் உங்களுக்கு ஜரிக்காதான்னா?''—

ஆமா—நீ தினுசு தினுசா பண்ணி போட்டு நா வெட்டறேன் பாரு, ஜரிக்காம போறத்துக்கு? பத்திய சமையலாட்டம் சிரக ரசமும், வத்தக் குழம்பும் சாப்பிட்டு சாப்பிட்டு, நாக்கும் வயிறும் செத்து போச்சுடி, சனியனே. இப்படி வயித்தை ஒடுக்கி, காய வைச்சு வைச்சு உன் கர்ப்பப்பைகூட சுருங்கிப்போச்சோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு! அதான் நீ உண்டாகவே மாட்டேங்கறே...அல்பம்...

மனசின் குமுறலை வெளியில் காட்டாமல் அவன் நின்றால் அவள் சிடுசிடுப்பாள்.

''இடிச்சபுளி மாதிரி இங்க நின்னுண்டு என்ன பண்ணறேள்? முன் ரூம்ல வெட்டியா லைட் எரியறது, போய் அணைச்சுட்டு படுத்துக்கோங்கோ...''

லைட் எரியக்கூடாது, புஸ்தகம் படிக்கக்கூடாது. கச்சேரி கேட்கக்கூடாது, காசு செலவாகும் ஒரு காரியத்தையும் பண்ணக் கூடாது.

என்ன வாழ்க்கை இது?

சனியன்.

ஒழி நாயே—என்று தள்ளிவிடவும் தைரியம் இல்லை; நீ எக்கேடு கெட்டு போ, நான் போகிறேன்—என்று உதறிக்கொண்டு போகவும் மனம் இல்லை.

இவள் மனுஷியா, இல்லை மிஷினா?

நாலைந்து இனுக நகைகள் பண்ணி வைத்திருக்கிறாளே, அதையாவது ஆசை தீர வெளியில், வாசலில் போட்டுக்கொண்டு செல்வாளா என்றால் அதுவும் இல்லை...

''எல்லாரும் திருஷ்டி போட்டுவான்னா—ஒவ்வொருத்தியும் ஆங்காரம் பிடிச்சவன்னா.''

ஆமாம்—ஒட்டை குச்சி மாதிரி இவள் இருக்கும் அழகுக்கு கண் திருஷ்டி ஒன்றுதான் குறைச்சல்.

தினமும் பீச்சுக்குப் போய் உட்கார்ந்துவிட்டு வருவதென்றால் விசாலம் ஆர்வத்துடன் கிளம்புவாள். காற்று வாங்க காசு வேண்டாமே?

எதிர்வீட்டில் சென்று வெட்கம் இல்லாமல் ஓசியில் டி.வி படம் பார்ப்பதுபோல, யாராவது தப்பித் தவறி கல்யாணம், விசேஷம் என்று கூப்பிட்டுவிட்டாலும் போயிற்று. துளி சங்கோஜம் இல்லாமல் மூன்று வேளையும் போய் மூக்குப் பிடிக்க சாப்பிட்டுவிட்டு, பஞ்சுவையும் சென்று வரச் சொல்லி வற்புறுத்துவாள்.

இன்னொருத்தர் வீட்டில் விருந்து சாப்பிட்டால் மட்டும் டயபடீஸ், கொலஸ்ட்ரால் வராதா?

தத்...

வெட்கங்கெட்ட ஜன்மம்.

கை கழுவிக்கொண்டு முன் அறைக்கு வந்த பஞ்சு, கண்ணாடிக்கெதிரில் நின்று தலை வாரிக் கொண்டான்.



உள்ளங்கை அகல கண்ணாடியை குனிந்து வெறிக்கையில், விசாலத்தின் ஒட்டின முகரக்கட்டையின் சாயல் தன் முகத்துக்கும் வந்துவிட்ட மாதிரி தோன்ற, அவசரமாய் நகர்ந்து பேண்டை மாட்டிக்கொண்டு புறப்பட்டான்.

நிம்மதி இல்லாமல் அல்லாடிய மனசை கொஞ்சம் தேற்றும் வகையில், அன்றைக்கு அவனை செங்கல்பட்டு வரை சென்று, ஒரு வேலையைக் கவனித்து வரும்படி மேனேஜர் பணிக்க, சந்தோஷத்தோடு புறப்பட்டான்.

போக வர செலவு, பாட்டா எல்லாம் உண்டு என்பதோடு ஒரு நாளாவது விசாலத்தின் சீரக ரசத்திலிருந்து தப்பிக்கலாமே!

செங்கல்பட்டில் வேலை முடிய ஏழு மணி ஆகிவிட்டது. அவசரப்படாமல் உடுப்பி ஹோட்டலில், ரொம்ப நாட்கள் கழித்து ஸ்வீட் காரத்தோடு சாப்பிட்டான். அங்கமுத்து தியேட்டரில் இரவு ஆட்டம் முந்தானை முடிச்சு படம் பார்த்தான். இரவு ஒரு மணிக்கு வாழைப்பழம் தின்று மசாலா பால் குடித்து பகலையும் இரவையும் திருப்தியாகக் கழித்துவிட்டு மூணு மணி பஸ் பிடித்து விடிகாலை ஐந்தரைக்கு பஸ் ஸ்டாண்டில் இறங்கி, வீட்டை அடைந்தால் போர்ஷன் வாசலில் சின்ன கூட்டம்.

என்னாயிற்று?

உள்ளே நுழையும்முன் விசாலத்தின் கதறல் 'ஹா'வென்று வரவேற்றது.

''ஐயோ போச்சே... போச்சே... எல்லாம் போச்சே... பதினெட்டு பவுன்... ஐயோ ஐயோ... ஆறு வருஷமா சேர்த்தது போச்சே... நா என்ன பண்ணுவேன். எந்த கட்டைல போறவன் எடுத்தானோ... அவன் கை அழுகிப்போக ஐயோ... ஐயோ... ஐயோ...''

தான் ஊரில் இல்லாத ஒரு இரவில் எந்தத் திருடனோ மூக்கில் வியர்க்க வந்து, தரித்திரமாய் குடும்பம் நடத்தி, பெட்டி நிறைய விசாலம் சேர்த்து வைத்திருந்த நகைகளை லட்டுபோல லவட்டிக்கொண்டு போய்விட்டான் என்பது புரிய பஞ்சுவுக்கு முழுசாய் இரண்டு நிமிஷங்கள் பிடித்தன.

பதினெட்டு பவுன்...

ஏழு வருஷமாய் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி வெறும் வத்தல் குழம்பு, நீர் மோர் சாப்பிட்டு சிறுக சிறுக சேர்த்த நகைகள்.

தலையை விரித்துப் போட்டுக்கொண்டு பைத்தியக் காரி மாதிரி அழும் விசாலத்தை ஏறிடுகையில் உள்ளுக்குள் என்னமோ நமநமவென்றது.

அடிவயிற்றில் பிரசவித்து, பஹ்ஹென்ற சப்தத்துடன் வாயில் சிரிப்பு வெடிக்க, சங்கிலியாய் எழுந்த சப்தங்களை அடக்கத் தெரியாமல், அப்படியே சரிந்து உட்கார்ந்து பஞ்சு சிரிக்க, 'ஐயோ! சேதி கேட்ட அதிர்ச்சி மூளை கீளை கலங்கிடுத்தான்னா' என்று தன் நசுங்கிப்போன தகர டப்பா முகத்தை கோணிக்கொண்டு விசாலம் பதற, அவன் இன்னும் இன்னும் பெரிசாகச் சிரிக்க ஆரம்பித்தான்.

# ஒரு வார்த்தை

**கா**தில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாத தினுசில் வேதகிரி விழித்தார்.

''விளையாடாதீங்க ரங்கநாதன்.''

''இதுல விளையாட்டு என்ன சார்? சத்தியமா உங்க மாப்பிள்ளை அனுப்பிதான் நான் இங்க வந்தேன்.''

வேதகிரி கிறிக்கொண்டு எழுந்த படபடப்பை அடக்கி னார்.

எதிரில் உட்கார்ந்திருந்தவரை சந்தேகத்துடன் ஏறிட் டார்.

''எ... என்ன சொல்லி அனுப்பினார்னு சொல்றீங்க?''

ரங்கநாதன் புன்னகைத்தான்.

''உங்க பெண்ணைத் தன்னோட சேர்த்துக்க அவர் தயார்னு சொல்லச் சொன்னார்.''

அரை நிமிஷ தயக்கத்துக்குப்பின் மீண்டும் ''விளையா டாதீங்க'' என்றார் வேதகிரி கெஞ்சலாய்...

''என்ன சார் திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கிட்டு? அப்ப நான் போயி சுந்தரத்துக்கிட்ட 'உன் மாமனார் நம்ப மாட்டேன்னாருப்பா'னு சொல்லிடவா!''

எழுந்திருக்க முயன்றவனை, அவசரமாய் வேதகிரி தடுத்து நிறுத்தினார்.

''அ... அ... என்ன தம்பி இதுக்கெல்லாம் கோவிச்சுக்கிட்டா எப்படி? மூணு வருஷமா இந்த வார்த்தை காதுல விழாதானு தவம் கிடந்தவனில்லியா? அதான் கொஞ்சம் பிரமிச்சுப் போயிட்டேன். உட்காருங்க... நிசமா மாப்பிள்ளை செல்வியோட மறுபடி சேர்ந்து வாழ சம்மதிச்சிட்டாரா? சொல்லுங்க... என் காது குளிர நாலு தரம் சொல்லுங்க...''

''சுந்தரம் என்னை அனுப்பலைன்னா எனக்கு உங்க கிட்ட என்ன வேலை சார்? நேத்து ராத்திரி அவனே என்னண்டை 'நீ காலைல முத வேலையா கார் எடுத்துக்கிட்டு ஊருக்குப் போயி என் மாமனார்கிட்ட செல்விய சேர்த்துக்க எனக்கு சம்மதம்னு சொல்லிடு'னு சொன்னான் சார்... பாருங்க, வாசல்ல உங்க மாப்பிள்ளை வண்டி தானே நிக்குது?''

ஜன்னல் வழியாகத் தெருவை ஏறிடுகையில் தான் சீதனமாகக் கொடுத்த கறுப்பு பியட் மொட்டுபோல நிற்பது புரிய, ரங்கநாதன் சொல்வது என்ற நம்பிக்கை உள்ளே பரவ, உவகைக் குமிழ்கள் வெடித்தன.

கடைசியில் முருகன் கண்ணைத் திறந்துவிட்டானா?

தங்க விக்ரகம் போன்ற மனைவியை விட்டுவிட்டு நாட்டியக்காரி பின்னால் ஓடின மயக்கம் மாப்பிள்ளைக்குத் தெளிந்துவிட்டதா?

ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று பெற்று அருமை பெருமையாய் வளர்ந்த மகள் இனி வாழாவெட்டி என்ற பட்டத்தை சுமந்துகொண்டு, வளைய வரவேண்டியது இல்லையா?



உணர்ச்சி வசப்பட்டுப் போனதில் கண்களில் ஈரம் கசிய முற்பட்டது.

உள்ளங்கைகளில் வியர்வை.

''ஆனா ஒண்ணுங்க...''

ரங்கநாதன் எதற்கோ பீடிகை போடுகிறமாதிரி பட, வேதகிரி நிமிர்ந்தார்.

''தானா இப்படி வலிய சொல்லி அனுப்பின விவரம் யாருக்கும் தெரிய வேணாம்னு சுந்தரம் நினைக்கறான்... அதனால...''

''அதனால? '—

''நாளைக்கு நீங்க உங்க வீட்டுப் பெரியவங்க ஒண்ணு ரெண்டுபேரை கூட்டிகிட்டு பட்டணத்துக்கு வந்து 'போனது போகட்டும்—இனியாவது செல்விய சேர்த்துக்கங்க. ரெண்டுபேருக்கும் சின்ன வயசு. இப்படியே இருக்கிறது நியாயமா?'னு கேட்டுகிட்டீங்கன்னா ஒரு நல்ல நாள் பார்த்து சுந்தரம் உங்க வீட்டுக்கு வந்திடுவான். என்னங்க... புரியுதில்லே?''—

நன்றாகவே புரிந்தது.

காலைப் பிடித்துக் கெஞ்சியதை லட்சியம் செய்யாமல் அன்றைக்கு அந்த நாட்டியக்காரிதான் பெரிசு என்று ஓடினவர் இன்று தானாக திரும்புவது கௌரவக் குறைச்சல் என்று நினைத்து, மாமனாரை வந்து அழைக்கச் சொல்கிறார். அதானே?

உறவையும், மனிதர்களையும் எப்படி கிள்ளுக் கீரையாய் மாப்பிள்ளை மதிக்கிறார் என்கிற எண்ணம் ஆத்திரத்தைக் கிளப்பினதில் தாடை இறுகிப்போய் நாசி துவாரங்கள் விடைத்துக்கொண்டன.

ஆனால், இந்த நிலை சில வினாடிகளுக்குத்தான்.

மகளின் நிம்மதியான வாழ்க்கையைவிட தன்மானமா முக்கியம்—என்ற கேள்வி எழுந்ததில், கோபம் நமுத்துப் போக, வேதகிரி உடனே தன்னை சமாதானப்படுத்திக் கொண்டார்.

இதில் தவறு என்ன?

ஆயிரம் இருந்தாலும் சுந்தரம் ஆண்பிள்ளை; அதுவும் மாப்பிள்ளை.

தானாக வருவதைவிட மாமனார் போய் அழைப்பது தான் மரியாதை. முறையும்கூட என்று நினைக்கிறார்... இதில் தவறு என்ன?

''என்னங்க?''

''ஒண்ணுமில்லே தம்பி. நான் அங்க வந்து மாப்பிள்ளைய கூப்பிடணும்னு சொல்றிங்க, இல்லியா? இது என்ன பெரிய விஷயம்! என் செல்வி இனியாவது கண் கலங்காம இருக்கணும்; அதான் முக்கியம்... வர்றேன். நாளைக்கே வர்றேன்...''

''அப்ப நான் கிளம்பட்டுமா?''...

''இருங்க... சீதையக் கண்டேன்னு சொல்லி ராமனுக்கு புது உயிர் கொடுத்த அனுமன் மாதிரி, நொந்து கிடந்த எங்க மனசுக்குப் புது தெம்பு கொடுத்திருக்கீங்க. வந்ததும் வராததுமாக் கிளம்பினா எப்படி? சாப்டுட்டுப் போகலாம் தம்பி...''

''இல்லங்க... அதுக்கெல்லாம் நேரம் இல்லே...இருட்டு றத்துக்கு முன்னால வந்திடறேன்னு சுந்தரத்துக்கிட்ட சொல்லிட்டு வந்திருக்கேன். அவன் காத்திட்டிருப்பான்.''

''மாப்பிள்ளை காத்திருப்பார்னா, நீங்க புறப்படுங்க. அவருக்குக் கோபம் வர்றாப்பல எதுவும் செய்ய வேணாம், டே, யார்றா அங்க? ஓடிப்போயி கொல்லைலேந்து ஒரு கட்டு கரும்பு வெட்டி எடுத்தாந்து கார்ல வைச்சுக் கட்டு.



மல்லாட்டப் பயிரு அரை மூட்டை, தோட்டத்து வாழக்கா ஒரு தாரு, பரங்கி, பூஷணி, இருவது தேங்கா எல்லாத்தை யும் டிக்கிலே கொணாந்து வை...நம்ம வீட்டுக்கு வந்திட்டு போற தம்பிய வெறுங்கையோடவா அனுப்பறது! ஒரு நிமிஷம் இருங்க தம்பி...''

உள்ளே போன வேதகிரி ஐந்து நிமிஷங்களில் ஒரு தட்டில் வெற்றிலைப் பாக்கு, சரிகை கரை போட்ட வேட்டி துண்டு, இத்யாதிகளோடு ஒரு சவரனும் வைத்து பவ்யமாய் ரங்கநாதன் முன் நீட்டினார்.

''எதுக்குங்க?''—

''இருக்கட்டும். வருமா, வருமானு ஏங்கிகிட்டிருந்த தகவலைக் கொண்டு வந்ததுக்கு சின்னதா மரியாதை பண்ணாட்டி எப்படிங்க? இப்ப இதை வைச்சிக்கங்க... மாப்பிள்ளை இங்க வர்றப்ப ஜமாய்ச்சியிடுவோம்...''

கை, கார் கொள்ளாத சாமான்களும் ரங்கநாதன் புறப்பட்டுப் போனதும், ''நவநீதா... தே... புள்ளே... நவநீதா...'' என்று பெரிசாய் குரல் கொடுத்தபடி, அகல அகலமாய் கால்களை வைத்து உள்ளே வேதகிரி போகை யில் அது நாழிகை அடக்கிக்கொண்டிருந்த கண்ணீர் ததும்பி, மெதுவாகக் கன்னத்தில் ஓடியது.

* * *

**வே**தகிரி பணக்காரப் பரம்பரையில் வந்தவர். கண்ணுக் கெட்டியவரை நிலமும், நீச்சும். கொட்டில் நிறைய மாடுகளும், பெட்டி முழுவதும் பணமும் நகையு மாய் லட்சுமி கடாட்சத்தை இன்றைக்கும் பூரணமாய் அனுபவிப்பவர் தான்.

எனக்கென்னடா குறை?— என்று இறுமாந்திருந்தவர் தலையில் ஆணி வைத்து அடித்து குனிய வைத்துவிட்ட ரீதியில் மூன்று வருஷங்களுக்கு முன் அந்தச் சம்பவம் நிகழ்ந்ததும் மனிதர் நடுங்கிப் போய்விட்டார்.

வேதகிரி, நவநீதம் தம்பதிக்கு பிறந்தது நாலைந்து என்றாலும், கடைசியில் முழுசாய் தங்கினது செல்வி ஒருத்திதான். ஏக செல்லம், ஏக அருமை.

அத்தனை சொத்துக்கு ஏகபோக வாரிசு என்பதோடு மட்டுமல்லாமல், இயற்கையிலேயே லட்சணமாயும், அடக்க ஒடுக்கமாயும் செல்வி இருந்துவிட வீட்டுக்கு மட்டும் அல்லாமல் ஊருக்கே அவள் உசத்தியாகத்தான் இருந்தாள்.

படிப்பில் மகளுக்கு நாட்டம் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிந்தவராய் குல வழக்கப்படி அவள் பெரியவளானதும் வீட்டோடு நிறுத்திவிடாமல், தைரியமாய்ப் பள்ளி இறுதிப் படிப்பை முடிக்கச் செய்தபின் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு இரண்டு, மூன்று வருஷங்கள்போல தேடித்தேடி வேதகிரி கண்டுபிடித்த மாப்பிள்ளை சுந்தரம்.

இன்றைக்கும் செல்வியின் திருமணத்தைப் பற்றி ஊர் ஜனங்கள் பேசத் துவங்கிவிட்டால், கட்டாயம் அரை மணியாவது அது நடந்த நேர்த்தியை அதிசயிக்காமல் இருக்கமாட்டார்கள்.

தெரு அடைத்து பந்தல். இரட்டை நாயனம், பாண்டு. மாலையில் மெல்லிசைக் கச்சேரி. தெரிந்தவர் அத்தனை பேருக்கும் வேட்டி, புடைவை, ஊரில் யார் வீட்டிலும் அடுப்பு எரிய விடாமல் மூக்கு முட்ட நாலு நாளும் விருந்து...

சுந்தரம் பணம், அழகு, அந்தஸ்து என்று எல்லா வகையிலும் செல்விக்கு ஏற்றவனாகவே இருந்தான். ஆனால் குணம்தான் கொஞ்சம் உதைத்தது.



திருமணத்துக்குமுன் இங்கு அங்கு விசாரித்தபோது தெளிவாகக் காதில் விவரங்கள் விழாவிட்டாலும், பழக்க வழக்கம் அத்தனை சரியில்லை என்ற சேதி வேதகிரிக்கு லேசாக எட்டவே செய்தது.

பெரிய இடத்துப் பிள்ளை.

படித்தவன்.

நாகரீகம் தெரிந்தவன்.

பணம், காசுக்கு பஞ்சமில்லை.

ஆனாலும்?

'இளரத்தம், அதுதான் துடிப்பாக இருக்கிறான்; கால் கட்டு போட்டால் சரியாகிவிடுவான். வேண்டாததை எண்ணிக்கொண்டு இந்தச் சம்பந்தத்தைத் தள்ளுவது அசட்டுத்தனம்— என்று பத்துபேர் அடித்துச்சொல்ல, அது தான் சரி என்று வேதகிரியும் சம்மதித்து, தடபுடலாய் திருமணத்தை நடத்திவிட்டார்.

முதல் இரண்டு மாசம்வரை எந்தத் தொந்தரவும் இல்லை. அப்புறம் தகராறுகள் துவங்கி, மெள்ள மெள்ள வளர்ந்து விஸ்வரூபம் எடுத்ததில், மேற்கொண்டு மாசம் சில பே வதற்குள், அதாவது கழுத்தில் தாலி ஏறி சரியாய் வருஷம் ஒன்றாகுமுன்னரே, 'உன்னோடு வாழ எனக்குப் பிடிக்கவில்லை' என்று வெளிப்படையாக சுந்தரம் கூறி விட, வாழாவெட்டி என்ற பட்டத்துடன் தகப்பன் வீட்டுக்கு வந்துவிட்ட செல்விக்கு இன்றைக்குத்தான் விடிந்திருக்கிறது.

* * *

வேதகிரி ஊஞ்சலில் அமர்ந்திருந்தார்.

எதிரில் நவநீதம்.

உள் அறையில் செல்வி...

''கொஞ்ச நாளாவே நான் கேள்விப்படுற சேதிதான். ஆனா இத்தனை சுருக்க விஷயம் கனிஞ்சிடும்னு எதிர்பார்க்கலை. அந்த நாட்டியக்காரி சிங்கப்பூர்க்காரன் ஒருத்தனை சேர்த்துகிட்டு மாப்பிள்ளைய அலட்சியப்படுத்தறதா ஆறுமுகம் சொன்னாரு... 'டேய்... கவலைப்படாதே... கூடிய சீக்கிரமே உன் மருமகன் திரும்பிடுவான். வேதாளம் வேற முருங்க மரத்துல ஏறிக்கிச்சு'னு அவர் சொன்னப்போ, சும்மா நம்மை சமாதானப்படுத்தப் பேசுறானு நினைச்சேன் இல்லே... மாரியாத்தா கண்ணைத் திறந்திட்டா...''

''மாப்பிள்ளை இப்ப எங்க இருக்காராம்? அவங்களை பெத்தவங்க வீட்டுலியா?''—

''இலலியாம்... ரங்கநாதன் தம்பிய ரகசியமா விசாரிச்சேன். ஹோட்டல்ல அறை எடுத்துகிட்டு இருக்காரு, அங்கயே வந்து பார்த்திடுங்கனு சொல்லிச்சு... மருமகளை சேர்க்காம வீட்டுப்படி மிதிக்கக்கூடாதுனு சம்பந்தி சொல்லிட்டார் இல்லே. அதான் மாப்பிள்ளை பட்டணத்திலேயே தங்கி இருக்காரு...''

''மனசு மாறி திரும்ப அந்த ராட்சஸிகிட்ட அவ போயிடறத்துக்கு முன்னால நீங்க போய் இங்கக் கூப்டுட்டு வந்திடுங்க. நாம மலையா நம்பின முருகன் கைவிடல. பொங்கிகிட்டிருந்த என் வயிறு இப்பதாங்க குளிர்ந்துச்சு... யாருக்கு எந்த ஜன்மத்துல என்ன தீங்கு பண்ணமோ, நம்ம குழந்தைய அது வாட்டி எடுத்துடுச்சு... இனி, போனத ஒரு கெட்ட கனவா நினைச்சி ஒட்டுக்க மறந்திடுவோம்... முதல்ல ஜோஸியர் வீட்டுக்குப் போய் நல்ல நாளை குறிச்சிட்டு வாங்க. உங்க மாமா, அத்தையையும் கலந்துகிட்டு, மாப்பிள்ளைய சந்திச்சு, 'நீங்க பெரிய மனசு பண்ணி ஊருக்கு வரணும்; செல்வி ஏதாச்சும் தப்பு பண்ணி இருந்தா மன்னிச்சு ஏத்துக்கணும்'னு கேட்டுகிட்டு, நல்ல நாளையும் சொல்லிட்டு வாங்க...''



சிரிப்பும், அழுகையுமாய் நீளமாய் பேசினவள் நினைத்துக்கொண்டு சாமி அறைக்குச் சென்று விழுந்து வணங்கினாள். 'முருகா! என் கலியத் தீர்த்த பெருமானே' என்று அரற்றி மீண்டும் மீண்டும் நமஸ்கரித்தாள்.

அந்த வெள்ளிக்கிழமை எளிதில் கிடைக்காத அருமையான சுப தினம், பிரிந்தவர்கள் கூடி தங்கள் புதுவாழ்வைத் துவங்க அமர்க்களமான நாள்— என்று ஜோஸியர் குறித்துக் கொடுக்க, இரண்டு பெரியவர்கள் தாம்பூலம், சகிதம் மாப்பிள்ளையை அழைக்க அன்று மதியமே வேதகிரி புறப்பட்டுந் போக, சேதி பரவி, ஊர் பெண்கள் படியேறி வந்து நவநீதத்தை சூழ்ந்துகொண்டார்கள்.

—என்ன நவநீதம், மாப்பிள்ளை வரப்போறார்போல இருக்கு?

—செல்வியோட தாலிக்கு பலம் அதிகம்தான்' அவ பொறுமையும், தெய்வ பக்தியும் கைவிடலை பாத்தியா?

—வெள்ளிக்கிழமை காலைல மாரியம்மன் கோவில்ல விசேஷ பூஜைக்கு ஏற்பாடு பண்ணிடு நவநீதா.

—பெரிசா ஒரு பூஷணிக்காய எடுத்து வந்து உன் பெண்ணையும், வீட்டையும் சுத்தி, திருஷ்டி கழிஞ்சிதுனு நடுத்தெருல போட்டு உடைக்கச் சொல்லு...

—ஆமா, செல்வி எங்க, கண்ணுலேயே காணோம்?

—புருஷன் வரப்போற சந்தோஷத்துல தனிச்சு உட்கார்ந்து ஏதாவது கற்பனை பண்ணிட்டு இருப்பா...

மாப்பிள்ளை சம்மதித்துவிட்ட சேதியுடன் அன்றிரவு பட்டணத்திலிருந்து வேதகிரி திரும்பியதும், வீடு கல்யாண களை கட்டிப் போனது.

''நாளைக்கு சம்பந்தி வீட்டுலே போயி விலரத்தை சொல்லிட்டு, அவங்களையும் 'அவசியம் வெள்ளிக்கிழமை வாங்க'னு கூப்பிட்டுட்டு வரணும். இன்னும் சரியா நாலு

நான்தான் இருக்கு. மாடி அறைய ஒழிச்சு, கந்தப்பனை வெள்ள அடிக்கச் சொல்லணும். பெருமாளு, அம்மாகிட்ட கலந்து பேசி மளிகை சாமான் எல்லாம் லிஸ்ட் போட்டு வாங்கிக்க. வேளைக்கொரு ஸ்வீட், காரமா சமையல் அமர்க்களமா இருக்கணும். ஆசாரிகிட்ட சொல்லி புதுசா நகை பண்ண அவகாசம் இல்லே. அதனால நாளைக்கு சம்பந்திங்களை அழைக்கப் போறப்போ, பட்டணத் துக்கும் போயி நல்லதா மாப்பிள்ளைக்கு ஒரு செயின், செல்விக்கு முத்து சரம்னு ஏதாச்சும் வாங்கிடலாமா? என்ன சொல்றே நவநீதா?''

வேதகிரியும், நவநீதமும், இதர நபர்களும் மனம் மகிழ்ந்து போய், தலைகால் புரியாமல் குதித்த நாழிகை யில் விழாவின் கதாநாயகியான செல்வி மட்டும் தன் வழக்கமான அமைதியைக் கைவிடாமல் நடப்பவை களுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாத மாதிரி ஒதுங்கி இருந்தாள்.

''செல்வி வெட்கப்படுறா; புருஷனை மறுபடியும் சந்திக்கப்போற குஷில இருக்குறா'— என்றெல்லாம் மற்றவர்கள் கூறியதற்கு மறுப்பு இல்லாமல், மாடிக்குச் சென்று தன் அறையில் ஜன்னல் அருகே உட்கார்ந்து தோட்டத்தை வெறித்தபோது, மூன்று வருஷங்கள் முன்னால், ஆறு மாசங்கள்போல சுந்தரத்துடன் நடத்திய தாம்பத்தியம் புகைமூட்டமாய் உள்ளுக்குள் பரவியது.

* * *

திருமணமாகி நாலே நாட்கள் ஆன சமயம் அது.

''சாப்பிட வருகிறீர்களா?''— என்று கேட்க மாடிக்கு வந்த செல்வி திடுக்கிட்டுப் போனாள்.

சுந்தரத்தின் பக்கத்தில் வெளிர் மஞ்சள் நிற திரவம் கொண்ட பாட்டில். கையில் கோப்பை...



பிறந்த வீட்டில் ஒருத்தரும் குடிப்பழக்கம் இல்லாவிடி னும், சினிமாக்களில் பார்த்தும், பத்திரிகைகளில் படித்தும் அதைப்பற்றி நிறையவே தெரிந்து வைத்திருந்ததால் சின்னதாக படபடா...

''என்னங்க இது?''

''எது?''

''கையில என்னமோ வைச்சிருக்கிங்களே?''

''ஓ! இதுவா? சாப்பிடறதுக்கு முன்னால ஒன்னு போட்டுகிட்டா 'கும்'முனு இருக்கும்... உடம்புக்கு நல்லது. டானிக்மாதிரி சாப்பிடுங்கனு டாக்டரே சொல்லி இருக் கார். நீயும் கொஞ்சம் சாப்பிடேன்.''

மேற்கொண்டு ஒருவாரம் போவதற்குள் இரண்டாய், நாலாய் நண்பர்களை அழைத்து வந்து குடிக்க முற்பட, இப்போது நிஜமாகவே செல்வி ரொம்பவும் பயந்து போனாள்.

''வேணாங்க... கீழே அத்தை, மாமா இருக்கறதை மதிக்காம என்ன பழக்கங்க இது... தயவுபண்ணி விட்டுடுங்க...''

சுந்தரம் பதில் கூறாமல் சிரித்துவிட்டு அலமாரியி லிருந்து புது பாட்டிலை எடுத்துக்கொண்டு நண்பர்கள் இருந்த அறைக்குச் சென்றான்.

''கால்கட்டு போட்டா சரியாயிடுவான்னு நம்பி னோம். பத்து நாள்ல பழைய குருடி கதவைத் திறடினு யெல்லாம் தொத்திக்கிச்சு... நீயாவது நல்ல வார்த்தை சொல்லிப் பாரேம்மா...''

கண்கள் கலங்க சுந்தரத்தை பெற்றவள் கெஞ்சின போது இது புதுப்பழக்கம் இல்லை, ரொம்ப நாட்க ளாகவே உள்ளது என்பது புரிய, செய்வதறியாமல் மாமி யாருடன் சேர்ந்து கண்ணீர் வடித்தாள்.

ஒரு மாசத்துக்குள்ளேயே புருஷனின் குணம் துல்ய மாய் புரிந்துவிட்டது.

தான், தன் சுகம் இதான் முக்கியம்.

மற்றபடி பெற்றவர்களும், தாலி கட்டினவளும் எக்கேடு கெட்டு எருக்கு முளைத்துப் போனாலும் கவலை இல்லை என்கிற மனோபாவம்.

குடித்துவிட்டு பாதி நாட்களுக்கு ஒழுங்காக சாப்பிட வராமல் கூத்தடிப்பான். போதை அதிகமாக இருந்தால் காரணமில்லாமல் கத்திச் சண்டை போட்டுவிட்டு நண்பர் களுடன் வெளியே எங்காவது போய்விடுவான்.

அத்தி பூத்தமாதிரி நிதானம் இருக்கும் நாட்களில் படுத்தல் வேறுவிதமாய் இருக்கும்.

''ஏய், இங்க வா...'' என்பான்.

கிட்டத்தில் வந்து நிற்பவளை எரிச்சலுடன் ஏறிட்டு முகம் சுளிப்பான்.

''என்ன புடவை உடுத்திகிட்டு இருக்கே, பெட்ஷீட் மாதிரி... கொஞ்சம்கூட நாசூக்கே தெரியலையே... அவு... முதல்ல இந்த அசிங்கத்தை அவுத்திட்டு, மெட்றாஸ்லேந்து வாங்கி வந்த சேலை, ப்ளவுஸை உடுத்து... ம்ம்...''

ஓரிரு தரம் அவனை திருப்தி பண்ணுவதற்காக அவை களை உடுத்தியது உண்டுதான்.

கை இல்லாத ஸ்லீவ்லெஸ் ரவிக்கை.

கண்ணாடியை உடுத்தினமாதிரி உடம்பை பச்சையாய் காட்டும் மெல்லிய ஷிபான் சேலை.

இதோடு விடமாட்டான்.

''இந்தா இந்த லிப்ஸ்டிக்க பூசு... இங்க... வா... மேலாக்க இப்படி சரியவிடு. திரும்பு... நட... குனி... அ... அ... இப்படிப் பாரு...''



சல்லாத்துணி வழியாக இடுப்பும், இடையும் மார்பும் படுகவர்ச்சியாய் தெரிய, கண்ணாடியில் தன் பிம்பத்தை பார்த்துக்கொள்ளக்கூட செல்வி கூசிப்போவாள்.

இந்த அலங்காரங்களோடு வெளியில் வரமாட்டேன் என்று அவள் கூறினால் அவனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு எழும்.

''ஏன் வந்தா என்ன? இந்த ட்ரெஸ்ஸுக்கு என்ன குறைச்சல்?''

''தயவுபண்ணி விட்டுடுங்க... உங்க ஸ்னேகிதங்க எதிர்லயும் இப்படி என்னை வரச் சொல்லாதீங்க. அவனவன் பார்க்கற பார்வை... ச்சே...''

''பார்த்தா என்னடீ...? பெண்களுக்கு ஆண்டவன் எதுக்கு அழகான உடம்பைக் கொடுத்திருக்கான்? ஆம்பி ளைங்க பார்த்து ரசிக்கத்தானே?''—

அவளுடைய வேதனையோ, அவஸ்தையோ புரியாத மாதிரி சீண்டுவான், கையைத் தட்டிக்கொண்டு சிரிப் பான்.

இப்படித்தான்...ஒருமுறை...

சென்னைக்குச் சென்று திரும்பியவன் கையில் பெரிசாய் பொட்டலம்.

படுக்க வந்தவள் கைகளில் அவற்றைத் தந்து 'உடனே உடுத்திக்க' என்றான்.

பிரித்தால்...

வெங்காய சருகு துணியில் நைட் ட்ரெஸ். மேட்சிங் காய்...ப்ரா...ஜட்டி...

''எ...எதுக்குங்க இதெல்லாம்?''—

''அ? நான் போட்டு அழகு பார்க்க? மூளையில்லாம பேசினா எனக்குக் கோபம் வரும். போ...எல்லாத்தையும் போட்டுகிட்டு ஜம்முனு என் முன்னால வா பார்க்கலாம்...''

''எ...எனக்கு கூச்சமா இருக்குங்க, வேணாங்க...''

''என்ன கூச்சம்...நான் யாரு? உன் புருஷன் தானே? பதினெட்டு வயசுலே இதைப் போடாம எப்பத்தான் போடறதாம்? ம்? தர்க்கம் பண்ணிகிட்டு நிக்காத; ஆசையா வாங்கி வந்திருக்கேன் இல்லே?''—

வழக்கம் போல அன்றைக்கும் செல்வி விட்டுக் கொடுக்கவே செய்தாள்.

தாலி கட்டினவர் ஆசைப்படுகிறார். எனக்கு பிடிக்கிறதோ இல்லையோ, அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது என் கடமை—என்று ஒரு தினுசாய் தனக்குள் சமாதானம் சொல்லிக்கொண்டு அவைகளை அணிந்து வந்தவளை, எப்போதும் போல நடக்க, குனிய, படுக்க, திரும்ப வைத்து ரசித்த சுந்தரம் ''இந்த ட்ரெஸ் ஏது தெரியுமா? ஒரு படத்துல 'ராஜா என்னிடம் மயங்கு'னு ரத்னா பாடி, ஆடினதைப் பார்த்து மயங்கி அவ ஞாபகமா அவ கிட்டயிருந்து கெஞ்சி வாங்கிட்டு வந்திருக்கேன் பத்திரமா வைச்சிக்க ஆட்டம்தான் இல்லே; இதைப் போட்டுகிட்டாலாவது நீ கொஞ்சம் தேறறியானு பார்க்கறேன்,'' என்று விரச பார்வையுடன் சொல்லிச் சிரிக்க, அந்த ரசனையை ஏற்க முடியாமல் அவள் அன்றுதான் உடைந்து போனாள்.

கட்டின பெண்டாட்டியை எவளோ ஒரு நாட்டியக்காரியுடன் ஒப்பிட்டு அவள் அணிந்த உடையை வாங்கி வந்து, அணிய வைக்கிறாரே, இது எத்தனை கேவலம்?

காசுக்காக உடம்பைக் காட்டி ஆடும் அவளும் நானும் ஒன்றா?



மனசு குமுறினாலும், எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் செல்வி வளைய வந்த நாட்களில் மேலும், மேலும் அவளை சுந்தரம் புண்படுத்தவே செய்தான்.

''என்ன? இந்த ட்ரெஸ்ஸ போட்டுக்கமாட்டியா? ஏன்? வெட்கமா இருக்கா? என்ன வெட்கம்? உன் முகரகட்டைக்கு பொருந்தாதுனு வேணா சொல்லு...ஒத்துக்கறேன்.''

''என்ன இருந்தாலும் ராணி ராணிதான். அது என்னா நளினம், என்ன நாசூக்கு. நிக்கறது, நடக்கறது, பார்க்கறது எல்லாமே சொகுசுதான். நீயும் இருக்கியே எருமை மாடாட்டமா...''

''ஒரு வாரமா ஏன் வீட்டுக்கு வரலைனு கேட்கறியே... இங்க எனக்கு என்ன இருக்கு வந்து உட்கார? உன் அழுமூஞ்சித்தனத்தையும் அப்பா, அம்மாவோட சிடுமூஞ்சித்தனத்தையும் பார்த்துப் பார்த்து வெறுத்துப்போச்சு... இன்னிக்காவது வந்திருக்கேனே, அதுக்கு சந்தோஷப்படு''

''சரிதான் போடி... நான் ஆம்பிளை. நூறு பொம்பளைகிட்ட போவேன், வருவேன். நீ யாரு என்ன கேட்க? உங்கப்பன் வீட்டு சொத்தை எடுத்திட்டுப் போகலை. என் பணத்தைதான் வாரி விடறேன். வாயை மூடிகிட்டு ஒரு பக்கமா கிடக்கறதுனா இங்கியே இரு... இல்லைனா ஒழி...''

வாய்க்கு வாய் ஒழி, ஒழி என்று ஏசத் தலைப்பட்டவன், ஒருநாள் அவனே தந்தையிடம் சண்டை போட்டு தனக்கென்று சொத்தில் ஒரு பங்கை பிரித்து வாங்கிக் கொண்டு அந்த பழிகாரி ரத்னா வீட்டுக்கே ஒழிந்துவிட்டான்.

புறப்படும் முன் மட்டும் அவனைப் பெற்றவர் வயிற்றெரிச்சல் தீர கத்தினார்.

''டேய்...ராஸ்கல்! மகாலட்சுமி மாதிரி இருக்கற இவளை மிதிச்சிகிட்டு அந்த தேவடியாளோட குடுத்தனம் பண்ணப் போறேன்னு சொல்றியே—அடக்கடவுளே—உன் வாய் இன்னும் வேகாம இருக்குதே! நீ நல்லா இருப்பியாடா? உனக்கே இது நியாயமா படுதாடா? டேய்...சுந்தரம்! பெண் பாவம் பொல்லாததுடா... வேணாம்டா, அந்தக் கழிசடைக்கு எல்வளவு கொடுக்கணும்னு விரும்பறியோ, அதை அவ முகத்துல வீசி எறிஞ்சிட்டு இங்கயே வந்திடுடா...இன்னிக்கு நீ; நாளைக்கு அவளுக்கு யாரோ? வயிறு எரியுதுடா...என் மருமகளுக்கு என்ன குறைச்சல்... அவ ராஜாத்திடா... யோசிச்சு முடிவ மாத்திக்கடா...''

அவர் கத்தக் கத்த எதிரில் நண்பன் ரங்கநாதன் சகிதம் கையில் சிகரெட்டுடன் நின்றிருந்த சுந்தரம் அலட்சியமாய் சிரித்தான்.

''இவளுக்கு என்ன குறைனா கேட்கறீங்க? எல்லாமே குறைதான். எது சரியா இருக்கு—முதல்ல அதைச் சொல்லுங்க? கிராமந்திர மண்டுகம் ஒண்ணை என் தலைல கட்டி வைச்சிட்டு நீங்க வேடிக்கை பார்க்கவா நினைக்கறீங்க? ஸாரி...நடக்காது...இவளோட நான் இனி வாழறது இந்த ஜன்மத்தில இல்லே...எதுக்கோ தெரியுமா ஏதோ வாசனைன்ற மாதிரி ரத்னாவோட அருமை உங்களுக்கு எப்படிப் புரியும்? இனி ரத்னாவோட மெட்ராஸிலதான் நான் இருக்கப்போறேன்.''

இரண்டடி வைத்தவனின் சட்டைக் காலரைப் பிடித்து உலுக்கி, ஆவேசம் வந்தவள்போல அவன் தாயார் கதறினாள்.

''வேணான்டா—பாவி...அந்த சின்ன பொண்ணு தலைல கல்லைப் போட்டுட்டு போகாதடா...டேய்...''



அவள் கைகளை சுந்தரம் தட்டிவிட்டான்.

பதில் பேசாமல் நகர்ந்தான்.

''உன்னை கெஞ்சி கேக்கறேன்டா...செல்வி முகத்தை ஒரு தரம் பார்த்திட்டு போ...பதினெட்டு வயசு தங்கக் கிளிடா இவ...டேய்...''

சுந்தரம் திரும்பி நின்று முறைத்தான்.

''அனாவசியமா என் நேரத்தை வீண் பண்ணாதீங்க. புறப்படறத்துக்கு முன்னால ஒண்ணு சொல்ல விரும்பறேன். இந்த சொத்து சுகம் எல்லாம் என் தாத்தா சேர்த்து வைச்சது...இதோட வாரிசு நான்தான். அதனால எப்பப்ப பணம் தேவைப்படுதோ...அப்பப்ப ஆள் அனுப்பறேன். கேக்கறதை மரியாதையா கொடுங்க... என்ன?''

''எ...என்னடா சொன்னே? உங்கப்பனை இளிச்ச வாயன்னா நினைச்சே? சொத்தை பிரிச்சி கொடுத்திட்டேன். இனி மேற்கொண்டு ஒரு தம்பிடிகூட கிடையாது. செல்விக்கு நீ வாழ்க்கை கொடுத்தப்புறம்தான் இந்த வீட்டு படியே ஏறலாம். அதை நினைவுல வைச்சிக்கடா பாவி...''

தோளைக் குலுக்கியபடி படிகளில் இறங்கி நடந்த சுந்தரம் என்னமோ நினைத்துக்கொண்ட ரீதியில் திரும்பி வந்தான்.

கண்களில் விரசமான கேலி கூத்தாட கொடூரமாய் புன்னகைத்தான்.

''செல்வியோட வாழ்வு வீணாயிடிச்சி... அவ மகா லட்சுமி...முகத்துல பால் வடியுதுனு புலம்பறீங்களே... ஒண்ணு சொல்லட்டுமாப்பா? உங்களுக்கொண்ணும் அப்படி வயசாகிடலை...என்ன, அம்பதுக்குள்ள தானே... பேசாம நீங்களே, அவளை... என்ன? அம்மாக்கும் வயசாச்சு...புரியுதா?''

கண்களை சிமிட்டிப் பேசியவன், அதிர்ச்சியிலிருந்து மீண்டு வந்து தகப்பன் கை ஓங்குவதற்குள் வேகமாக நடந்து காரில் ஏறிக்கொண்டு போய்விட்டான்.

அன்றைக்கே தன் பிறந்த வீட்டுக்கு செல்வி வந்து விட்டாள்.

இந்த மூன்று வருஷ காலங்களில் சுந்தரத்திடம் தூதாக பலமுறை பெற்றவர்களும், மற்றவர்களும் சென்ற போதும் சரி, அகாலமாய் மாமியார் இறந்துவிட்ட போதும் சரி, வீட்டைவிட்டுப் படி இறங்கினவள் இல்லை.

அவமானம் தாங்காமல் செல்வி குன்றிப்போய் விட்டாள் என்றும், புருஷனைப் பிரிந்தது அவளை பாதித்துவிட்டது என்றும், இன்னும் பல வகையாகவும் ஊர் ஜனங்கள் தாங்களே ஒரு முடிவுக்கு வந்து அவளுக்காகப் பரிதாபபட்ட போதும்கூட வாய் திறந்து ஒரு வார்த்தை என்ன நடந்தது, தன் மனநிலை என்ன என்று பேசினவள் இல்லை.

* * *

இரண்டு நாட்கள் விடாது யோசனை பண்ணியபின் செல்வி ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

வியாழன் காலை, இனியும் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை என்று, பெற்றவரைத் தேடிச் சென்று அவர் முன் நின்றாள்.

மாப்பிள்ளைக்காக எடுத்து வந்திருந்த புதுத் துணிகள், புலி நகம் கோர்த்த சங்கிலியை உறவினர்களுக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருந்த வேதகிரி பெண்ணைக் கண்டதும் விழிகளை விரித்து ஆச்சர்யித்தார்.

சாதாரணமாக நாலு ஆண்கள் இருக்கும் இடத்தை எட்டிக்கூடப் பார்க்காத செல்வி, இன்று முன் அறைக்கே வந்து கதவருகில் நின்றதும் ''என்னம்மா?'' என்றார் உடனேயே.



செல்வி தணிந்த குரலில் பேசினாள்.

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்பா...''

''அ?''—

வேதகிரி திகைத்தார்.

''பேசேம்மா...''

''வந்து...''

''என்னம்மா? மாப்பிள்ளைக்கு இன்னும் ஏதாச்சும் வாங்கணும்னு நினைக்கிறியா? சீர் செனத்தியா பெரிசா ஏதாச்சும் செய்யணும்னு விரும்பறியா? சொல்லும்மா... தயக்கமே வேணாம். இத்தனையும் உன் ஒருத்திக்கு தானேம்மா?''—

செல்வி தயங்கினாள். குரலை இன்னும் கிசுகிசுப்பாக்கிக் கொண்டாள்.

''கொஞ்சம் மாடி அறை வரைக்கும் வர முடியுமாப்பா அங்க போயி தனியா...''

மாடி அறையில் கட்டில், கிட்டில் சரியாக இல்லையோ? மூன்றாம் மனிதர்கள் எதிரில் சொல்ல கூச்சப்படுகிறாளோ?

''அதுக்கென்னம்மா...வா, போவோம்...''

மகள் பின்தொடர, போட்டது போட்டபடி கிடக்க, வேதகிரி மாடிக்குப் போனார்.

ஜன்னல்களுக்கு புது திரைச்சீலைகளை மாட்டிக் கொண்டிருந்த கந்தப்பனை ''டே...நீ கீழே இருடா'' என்று அனுப்பினார்.

செல்வியை ஏறிட்டு வாஞ்சையுடன் ''என்னம்மா... சொல்லு?'' என்றார்.

செல்வி உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். நிதானமாகப் பேசினாள்.

''நான் சொல்றதைக் கேட்டு வருத்தப்படாதீங்கப்பா. ஆத்திரத்துலேயோ, அவசரப்பட்டோ பேசறவ நான் இல்லேன்றது உங்களுக்குத் தெரியும்...''

''என்னம்மா? எதுக்கு பெரிசா பீடிகை போடறே?''

''பெரிய விஷயம்தான்ப்பா...தயவு பண்ணி பொறுமையா கேளுங்க...என்னை கண்டிப்பா புரிஞ்சிப்பிங்கன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.''

''விஷயத்தை சொல்லு செல்வி.''

''அவரோட சேர்ந்து வாழ எனக்கு விருப்பம் இல்லேப்பா...''

''எ...என்னது!''

''ஆமா...தயவுபண்ணி இந்த ஏற்பாட்டை எல்லாம் நிறுத்திடுங்க. அவங்கள்ளாம் இங்க வர்றத்துக்கு முன்னாலியே வரவேணாம்னு சேதி சொல்லி அனுப்பிடுங்க...''

''என்னம்மா...என்னம்மா''

''பதறாம இருங்கப்பா...இரண்டு நாளா என்னண்ட ஒருதரமாவது 'உனக்கு இந்த ஏற்பாட்டுலே திருப்தி தானே'னு கேப்பிங்கனு எதிர்பார்த்தேன். 'உனக்கு சம்மதம்னு ஒரு வார்த்தை சொல்லுமா'னு கேப்பிங்கனு எதிர்பார்த்தேன். ஆனா...''

''அது...அது...வந்து செல்வி...நீ வந்து...''

வேதகிரி அதிர்ச்சியுடன் கட்டிலில் உட்கார்ந்தார்.

கைகளில் தலையைத் தாங்கிக்கொண்டு 'முருகா என்னப்பனே முருகா' என்று அரற்றினார்.

அரை நிமிஷ மௌனத்துக்குப்பின் செல்வி பேசினாள்.



''மூணு வருஷமா யார் என்ன கேட்டும் சொல்லாத விவரங்களை உங்க கிட்ட மட்டும் இப்ப நான் சொல்லப் போறேன்ப்பா...என்னை விட்டுட்டு அவர் அந்த நாட்டியக்காரி பின்னால போனார்ன்றது என்னை உடைக்கலை. ஆனா அதுக்கு முன்னாலியே அவர் பேசின பேச்சுக்கள் நடத்தின விதம் என்னை துண்டு துண்டா வெட்டிப் போட்டுடுச்சுப்பா...அசிங்கமா உடம்பு தெரியற உடைகளைப் போட்டுக்கச் சொல்லி 'ரத்னா மாதிரி ஆடு'னு கட்டளை இடுவார். அப்புறம் 'உனக்கு நந்தினி மாதிரி துடை இல்லே...நளினா மாதிரி இடுப்பு இல்லே, ஸீதா மாதிரி மா...மார்பு இல்லே...னு...''

தொடர முடியாமல் தொண்டை செம்மிப் போனது.

''தான் இதுநாள் வரை அனுபவிச்ச பெண்களோட அங்க லாவண்யங்களை அணுஅணுவா வர்ணிச்சி... என்னை ஒரு புழு மாதிரி நெளிய வெச்சி...நண்பர்களெல் லாம் என்னை வெறிச்சு பார்த்து, தொட்டாகூட 'அதுனால என்ன'னு என்னையே திட்டி...இதெயெல்லாத் தையும்கூட தாங்கிகிட்டேன்ப்பா... ஆனா... ஆனா... அவகிட்ட போற அன்னிக்கு தகப்பனாரைப் பார்த்து தாயார் முன்னால 'வேணும்னா நீங்களே இவளை வைச்சிக்கங்க'னு சொல்...சொல்...''

செல்வி விசும்ப முற்பட, ''போதும்மா...யம்மாடி, நிறுத்திடும்மா'' என்று வேதகிரி அலறினார்.

''இத்தனை வேதனையும் உள்ளுக்குள்ள வைச்சிகிட்டு ஒண்டியா அவஸ்தைப்பட்டு...ஏம்மா? அப்பவே ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா? அப்பவே...''

செல்வி கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

''அப்ப சொல்லாத அந்த ஒரு வார்த்தைய இப்ப சொல்றேன்ப்பா... எனக்கு அவர்கூட வாழ சம்மதமில்லே. மனைவிகிட்ட அன்பு செலுத்தத் தெரியாததோட, முக்கியமா அவளை, அவள் உணர்வுகளை மனுஷ்யத்தனத்தோடு மதிக்க மறுக்கறவரை என் புருஷனா ஏத்துக்க நான் விரும்பலை. அவளை விட்டுட மாட்[illegible]'னு நிம்மதியா இருநதேன். ஆனா, இப்ப அந்த நிம்[illegible]யும் போயிட்டதும் தான் நிஜத்தை எதிர்நோக்காம ஓ[illegible] ஒளியறது கோழைத்தனம்னு புரிஞ்சிபோச்சு... தயவு பண்ணி நான் மேலே படிக்க அனுமதியுங்க... என்னை இனி உங்க மகனா எண்ணிக்கங்க... என்னப்பா? என்னை புரிஞ்சிக்கறீங்க இல்லே?''

பயம் கலந்த எதிர்பார்ப்போடு பேசியவளை வேதகிரி ஒரு நிமிஷம் அப்படியே நின்று அழுந்த பார்த்தார்.

பின், பதிலாக எதுவும் கூறாமல், வேகமாக கீழே இறங்கி வந்தவர் நடுக்கூடத்தில் நின்று ''யார்ரா அங்கே? போய் ஷண்முகத்தைக் கூட்டிவா... 'பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணிட்டேன். சீர்செனத்தி செய்ய கையில காலணா இல்லேனு அழுதியேடா, கவலைப்படாதே... இந்தா புலிநகம் பதிச்ச சங்கிலி, சரிகை வேட்டி, பட்டுப்புடவை. வாங்கிட்டு போய் அமோகமா கல்யாணத்தை நடத்து'னு ஆசிர்வாதம் பண்ணிக் கொடுக்கணும். ஓடு. உடனே கூட்டிட்டு வாடா...'' என்று உரக்க, வீடு முழுவதற்கும் கேட்கும்படி குரல் கொடுத்தார்.

18100
3547668